# தமிழரசு

மலர் 2 ] 1—4—1972 [ இதழ் 19

## செங்கற்பட்டு மாவட்டச் செய்தித்தொகுப்பு இதழ்



# உயிரையும் பணயம் வைத்து உயர் பணி புரிவோர்!

காவல் துறை மானி
த்தைப் பற்றிப் பேசிய
னைவருமே காவல் துறையில்
பெட்டிருக்கிற பொறுப்புள்ள
கொரிகளும், காவலர்களும்
த அளவுக்கு இந்தச் சமு
திற்கும், நாட்டிற்கும்
டாற்றுகின்றார்கள் என்
விளக்கமாக எடுத்துக்
கிறார்கள். கடமை,
ம் எனக் கொண்டு
டுக் காலமாகப் பணி
கின்ற அந்தத் துறை
தாயத்திலும், நாட்டி
ல பாதுகாப்பும்,
புனிதத் தன்மை
வேண்டுமென்பதற்
களுடைய உயிரைக்
யமாக வைத்து
கின்ற பணிகளை
நா ரும் நன்றாக அறி
வோம

கிட்டத்தட்ட 38 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொறுப்புள்ள காவலர்களும், அதிகாரிகளும் இருக்கின்ற அந்தத் துறையில் இங்குப் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல் அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாக ஒன்றிரண்டு குறைகள் தென்பட்டாலும், அவைகளை எல்லாம் இன்று காலை முதல் இதுவரை எடுத்துச் சொல்லப்பட்ட பல விளக்கங்களின் மூலம் அவர்களே கூடத் திருத்திக் கொள்கின்ற சூழ்நிலை நிச்சயமாக உருவாகும் என்று நான் நம்புகிறேன்.

மக்களிடத்தில் நல்ல தொடர்பு நிச்சயமாக இந்த இலாகாவினர்களுக்கு இருத்தல் வேண்டும். அதே நேரத்தில் அந்த இலாகாவிற்கு அடங்கி நடந்திடல் வேண்டும்; இந்த நாட்டின் அமைதியையும் ஒழுங்கினையும் காக்க வேண்டும் என்ற உணர்வும்பொது மக்களிடத்தில் இருந்திடல் வேண்டும். அது அறவே அற்றுப்போய் விடுமானால் தாறுமாறான சமுதாயச் சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்பதில் யாரும் மாறுபட இயலாது.

ஒரு கதை சொல்வார்கள்: ஒரு பாம்பு ஒரு சாதுவினிடத்தில் சென்று 'என்னைக் கண்டால் எல்லாரும் வெறுக்கிறார்களே ஏன்?' என்று கேட்க, அந்தச் சாது 'நீ எல்லாரையும் கடிக்கிறாய் என்ற காரணத்தினால் வெறுக்கிறார்கள். நீ அந்த வேலையை விட்டுவிட வேண்டும்' என்று சொல்ல; அந்தப் பாம்பு 'சரி' என்று சென்றுவிட்டதாம். பத்து நாளைக்குப் பிறகு உடம்பெல்லாம் காயத்தோடு அந்தப் பாம்பு மீண்டும் சாதுவை அடைந்து 'என்னைச் சிறுவர்கள் எல்லாம் கூட அடிக்கிறார்களே, உடம்பில் ஏற்பட்டிருக்கும் காயங்களைப் பாருங்கள்' என்று வருந்தியதாம். அதற்கு அந்தச் சாது 'உன்னை யாரையும் கடிக்காதே என்று தானே நான் சொன்னேன்? அடிக்க வருகிறவர்களைப் படம் எடுத்துச் சீறாமலா இருக்கச் சொன்னேன்? படம் எடுத்துச் சீறி இருந்தால் அவர்கள் பயந்து போய் இருப்பார்களே' என்று சொன்னாராம்.

அதைப் போல் போலீஸ் இலாகா கடிக்காமல் இருக்கலாம்; —சீறாமல் இருந்துவிடுமானால் பாம்பின் கதிதான் இந்த இலாகாவுக்கும் ஏற்படும் என்பதை நாம் அனைவருமே வேண்டும்.

காவல் துறை ஆணைக் குழுவின் 133 பரிந்துரைகளையும் ஐந்தாண்டுக் காலத்தில் செயல்படுத்த அரசுக்கு அதிகப்படியாக ஆக வேண்டிய தொகை 5 கோடி ரூபாயிலிருந்து 6 கோடி ரூபாய் வரையிலும் இருக்கும் என்பதையும் சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமையாகும். குறிப்பாக 23 பரிந்துரைகள் முதல் கட்டமாக இப்போது ஏற்கப் பட்டிருக்கின்றன. அந்தப் பரிந்துரைகளின்படி காவலர்களுடைய சம்பளம், படி விகிதங்கள் உயர்த்தப் பட்டிருக்கின்றன.

இதைக் குறித்து நண்பர் திரு கே. டி. கே. தங்கமணி அவர்களும், வேறு சில உறுப்பினர்களும் காவலர்களுடைய தினப்படி ரூ. 1·50 என்ற அளவில்தான் இருக்கிறது, அது உயரவே இல்லை என்று சொன்னார்கள். அவர்கள் ஒருவேளை இந்தக் குறிப்பினைத் தெரிந்து கொள்ளாமல் சொல்லியிருக்கலாம். 2–10–1970-க்கு முன்பு போலீஸ் காவலர்கள் தினப்படி ரூ. 1·50 ஆக இருந்தது. 2–10–1970க்குப் பிறகு அவர்களது நாள்படி குறைந்த பட்சம் ரூ. 3 என்றும், அதிகபட்சம் ரூ. 4·50 என்றும் உயர்த்தப்பட்டுள்ளது. தலைமைக் காவலர் தினப்படி ரூ.2 ஆக இருந்தது. 2–10–1970க்குப் பிறகு ரூ. 4·50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தினப்படி ரூ. 2·50 ஆகப் பெற்று வந்த சப் இன்ஸ்பெக்டர்கள் 2–10–1970-லிருந்து ரூ. 4·50 லிருந்து ரூ. 6·00 வரையிலும் பெற்று வருகிறார்கள். இன்ஸ்பெக்டர்கள் முன்பு ரூ. 2·50-
ரூ. 4·50 வரையிலும்
ந்தனர். 2–10–1970-
அவர்களது தினப்படி

ரூ. 6·00 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பொதுவாகப் போலீஸ் கமிஷனுடைய பரிந்துரைகளின்படி இப்போது முதல் கட்டமாக, ஏற்பட்டிருக்கிற சம்பள விகிதங்கள் எந்த அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். அதைத் தொடர்ந்து 3,100 புதிய முதல்நிலைக் காவலர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதையும் திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஆயிரம் என்று சொன்னார்கள், முதல்நிலைக் காவலர்கள் ஆயிரம் பேர் தற்போது 1–2–1972-லிருந்து பயிற்சி பெற்று வருகின்றனர். 500 பேர் கோவையிலும், 500 பேர் வேலூரிலும் பயிற்சிகளில் சேர்ந்திருக்கிறார்கள். பாக்கி 2,100 பேர் எஸ். எஸ். எல். சி. வரையில் படித்தவர்களும், அதுவரையில் படிக்காமல் நிறைந்த அனுபவம் உள்ளவர்களும் இரண்டாம் நிலைக் காவலர் பிரிவிலிருந்து முதல் நிலைக் காவலராக மாற்றப்படுகிற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. 60 புதிய காவல் வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூர் காவல் மாவட்டம் தஞ்சை மேற்கு, தஞ்சை கிழக்கு என இரு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. குற்றம், குற்றவாளிகளைப் பற்றிய தகவல்களைப் பதிவு செய்யக் கணக்கீடு இயந்திர நிலையம் அமைக்க (Computer Centre) ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

13,50,000 ரூபாய் செலவில் காவல் துறைக் கம்பியில்லாத் தந்தி முறையை விரிவுபடுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 120 காவல் வட்டங்களில் வானொலித் தொடர்புச் சாதனம் (V. H. F.) இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் பொருத்தப்படும். 14 தொலைக் கையச்சுகள் (Tele printers) அமைக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் ரூ. 17,10,000 செலவில் 30 ஜீப்புகள், 30 லாரிகள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 16 இயங்கும் குற்றஞ் சார்ந்த அறிவியல் ஆராய்ச்சிக்கூடங்களை மாவட்டங்களில் நிறுவ ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 11 மாவட்டங்களில் காவல் துறை நிழற்பட நிலையங்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 4,50,000 செலவில் உருவ நிழற்படி (Fascimile Transmitters) அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. உயர்மட்டக் குழுவினால் ஏற்கப்பட்டுள்ள காவல் துறை ஆணைக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தினால், தற்போது இருக்கும் உட்கோட்டங்கள் 69-லிருந்து 90ஆகவும், காவல் வட்டங்கள் 182-லிருந்து 307-ஆகவும் அதிகரிக்கும். மேலும், காவல் துறையில் உள்ள பதவிகள் தற்போதுள்ளதைவிட 3,250 அதிகமாகும்.

தமிழ் நாட்டிலே இந்தப் புதிய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஏதோ ''காவல் துறைப் பணிகள் வேகமாக நடைபெறவில்லை. பெரிய பெரிய திருட்டுகள் கண்டுபிடிக்கப் படவில்லை'' என்ற கோஷம் பலமாக இருக்கிறது. மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு பொன்னப்ப நாடார் அவர்கள் குறைபாடுகளைச் சொல்லி, அதே நேரத்திலே காவல் துறை ஆற்றிய அருஞ் சாதனைகளையும் எடுத்துக் காட்டினார்கள். நான் அதற்காக நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாகக் காவல் துறை மானியத்திலே விவாதம் நடைபெறும் பொழுது அதிகச் சூடு இருக்கும்; காரசாரம் இருக்கும்; கடுமை இருக்கும். ஆனால் இன்றைக்குக் காலையிலிருந்து, மாலை வரையிலே கூட்டம் நிறைய இருந்தாலும், காரம் அதிகம் இல்லாமல் கடுமையான விவாதம் இல்லாமல் காவல் துறை மானியம் விமர்சிக்கப்பட்டிருக்கிறது என்பதிலிருந்து காவல் துறை எவ்வளவு மென்மையாகச் செயல் படுகிறது என்பதை விளக்க விரும்புகிறேன்.

## தமிழக முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி

பெரிய திருட்டுக்கள், கொள்ளைகள் இவைகள் எல்லாம் கண்டுபிடிக்கப் படவில்லை என்ற குற்றச்சாட்டைக் காலையிலே பேசிய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

23–4–1971-ஆம் நாளிலே, நம்முடைய சென்னை மாநகராட்சி மன்றத்திலிருந்து 65 ஆயிரம் ரூபாய் அளவுக்குப் பணம் காணாமல் போயிற்று. எந்த விதமான தடயமும் கிடைக்கவில்லை. எப்படி அந்தப் பணப் பெட்டி அங்கிருந்து வெளியேறியது என்பதை யாரும் சொல்வதற்கு இயலவில்லை. அவ்வளவு மர்மமாக அந்தத் திருட்டு நடைபெற்றது. பல பேர்களைச் சந்தேகப்பட்டார்கள்; மாநகராட்சி மன்ற அலுவலர்கள் செய்திருக்கக் கூடுமோ, ஊழியர்கள் செய்திருக்கக் கூடுமோ என்றெல்லாம் சந்தேகப்பட்டார்கள்; கடைசியில் மராட்டியம், மைசூர் மற்றும் ஆந்திரம் போன்ற மாநிலங்களிலே பணத்தோடு சிதறிக் கிடந்தார்கள். இவர்கள் எல்லாம் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள், திருச்சி மாவட்டத்தில் உள்ளவர்கள் என்றும், அவர்கள் அங்கிருந்து சென்னைக்கு வந்து 65 ஆயிரம் ரூபாய் அளவுக்குத் திருடிக் கொண்டு பல்வேறு மாநிலங்களுக்கு ஓடிவிட்ட பிறகும், நம்முடைய காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து, இழந்த பணத்தில் பெரும் பகுதியை மீட்டார்கள். அந்த வழக்கிலே எட்டுப் பேர் தண்டிக்கப்பட்டார்கள்.

மதுரை மத்திய வங்கியில் 90 ஆயிரம் ரூபாய் காணாமல் போயிற்று. காவல் துறையினர் எடுத்த நடவடிக்கையால் ஏழு பேர் கைது செய்யப்பட்டார்கள். காலையிலே பேசிய திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள், கருமுத்து சிவலிங்கம் செட்டியார் வீட்டிலே நடைபெற்ற கொள்ளை வழக்கிலே இரண்டு, மூன்று மாத காலம் யாருமே கைது செய்யப்படவில்லை. ஆகவே சந்தேகப்படுகிறேன்' என்று சொன்னார்கள். தெக்கூர் கருமுத்து சிவலிங்கம் செட்டியார் வீட்டில் கொள்ளை

நடந்த தேதி 25–11–1971, காலை 7-30 மணி. வழக்கு விசாரணைக்கு எடுத்த தேதியும், 25-11-1971 தான். தமயந்தி என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 1–12–1971. இடையிலே மாதக் கணக்கு இல்லை. நாள் கணக்குத் தான். சுப்ரமணியம் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 1–12–1971, சோமன் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 2–1–1972. ஒரு வேளை ஒருவர் 1971-ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்; இன்னொருவர் 1972-ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார் என்று சொல்லலாம். ஆனால் 1–12–1971-க்கும் 2–1–1972-க்கும் வித்தியாசம் தெரிந்தவர்கள் அப்படிச் சொல்லமாட்டார்கள். அதோடு முடிகிறது டிசம்பர் மாதம். 1972-ஆம் ஆண்டு அடுத்த ஆண்டு. பெரியசாமி என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 5–1–1972; பனையன் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 7–1–1972; கதிர்வேலு என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 10–1–1972; கதிரேசன் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 26–1–1972; மேலும் 9 குற்றவாளிகள் நீதிமன்றத்திலே சரணடைந்தார்கள். இப்படி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். இடையே இரண்டொரு நாள் தலைமறைவாக ஓடி ஒளிந்தவர்களைக் கைது செய்தார்கள். இதற்கு முன்பு இப்படி நடந்ததா என்று எடுத்துப் பார்த்தால் பல ஆதாரங்கள் இருக்கின்றன. முன்பிருந்த அரசிலே ஆறு ஏழு மாத காலத்திற்குப் பிறகு, குற்றம் பதிவு செய்யப்பட்டதற்குப் பிறகு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதிலே தாமதம் கூட ஏற்படவில்லை. எந்தத் தாமதமும் இல்லாமல் கைது செய்யப்பட்டார்கள். அது மட்டுமல்லாமல் மிகவும் முக்கியமாக 4 வைர வளையல்கள் ரூபாய் 40,000; ரொக்கம் ரூபாய் 11,932; கடன் பத்திரங்களின் மதிப்பு ரூபாய் 2,87,000; தங்க நகைகளின் மதிப்பு ரூபாய் 25,000; துணிகளின் மதிப்பு ரூபாய் 1,000; வெள்ளிச் சாமான்களின் மதிப்பு ரூபாய் 25,000. களவுபோன சொத்துக்களில் 90சதவீதத்தைக்



கைப்பற்றி இந்தக் குற்றவாளிகளின் மீது வழக்குத் தொடர்ந்து இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால், சட்ட மன்றத்திலே வாய்ப்பு இருக்கிறது, தவறான தகவல்களைத் தருகின்ற நேரத்திலே உடனடியாகப் பதில் அளிக்கும் வாய்ப்பை அமைச்சர்கள் பெற்றிருக்கின்றோம். பதில் அளிக்கிறோம். காலையில் கூடச் சட்ட அமைச்சரவர்கள் அவர்களது தவறுகளைத் திருத்தக்கூடிய அளவிற்குச் சொன்னார்கள். நானும் இவ்வளவு விவரங்களைத் தந்திருக்கின்றேன். ஆனால், வெளியிலேயும் பத்திரிகைகளிலேயும் சிவலிங்கம் செட்டியார் வீட்டில் நடந்த கொள்ளையில் அரசு தலையிட்டதன் காரணமாகத் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று வேண்டுமென்றே அவதூறாகக்கூற வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்படும் பிரச்சாரங்கள் ஏதோ இந்த அரசை மக்கள் மத்தியிலே குற்றம் சாட்டுவதற்குப் பயன்படலாம். ஆனால், இத்தகு தவறான பிரச்சாரங்கள், எல்லா அரசுகளுக்கும் பொதுவாக இருக்கின்ற இத்தகைய இலாகாவை மக்கள் மத்தியில் மதிப்பற்றதாக ஆக்கிவிடும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு கவனத்தோடு இந்தப் பிரச்சினைகளை அணுக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து, பெரியவர் திருமணலி கந்தசாமி அவர்கள், 'சிலைகள் அதிகமாக வெளிநாடு



களுக்குத் திருட்டுப் போன்கிறன என்றும், கண்காணிக்க வேண்டுமென்றும் காலையிலே எடுத்துக் கூறினார்கள். அது உண்மைதான். 1969-ஆம் ஆண்டிலே 153 சிலைகள் திருடப்பட்டு, போலீசாரால் 103 சிலைகள் மீண்டும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. 1970-ஆம் ஆண்டில் 240 சிலைகள் திருடப்பட்டு, அவற்றில் 161 சிலைகள் திரும்பக் கிடைத்திருக்கின்றன. 1971-ஆம் ஆண்டிலே 208 சிலைகள் திருடப்பட்டு, 133 சிலைகள் மீட்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சிலைகள் திருட்டு நீண்ட நாட்களாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்தச் சிலைகள் திருட்டிலோ அல்லது சிவலிங்கம் செட்டியார் வீட்டுத் திருட்டிலோ ஏதோ அரசியல் அல்லது அரசு தலையீடு என்று சொன்னார்களே, ஒரு பிரசித்தி பெற்ற சிலைத் திருட்டில் ஒரு பெரிய அரசியல் கட்சியின் தலைவரே—ஒரு மாவட்டத்தின் தலைவரே ஈடுபட்டிருக்கிறார். இதையெல்லாம் அரசியலுக்கு இழுக்கும் காரணத்தால்தான் நானும் அவைகளை எடுத்துக் கூற வேண்டியவனாக இருக்கிறேன்.

1952-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் சிவபுரம் கோயிலைச் சேர்ந்த நிலத்தைத் தோண்டும் போது வேலைப்பாடு மிக்கதும், மிகப் பழமையானதுமான நடராஜர், சோமாஸ்கந்தர், சிவகாமி அம்மன், திருஞான சம்பந்தர், மற்றொரு அம்மன், பிள்ளையார் ஆகிய ஆறு சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. மேற்படி சிலைகள் கும்பகோணம் தாசில்தாரிடம் ஒப்படைக்கப்பட்டு, பின்அவற்றைச் சென்னை அரசினர் கலைக்கூடத்திற்கு எடுத்துச் செல்ல நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கும்போது மேற்படி சிவபுரம் கோயில் தர்மகர்த்தாவும், தீவிரக் காங்கிரஸ்காரருமான திரு முத்துசாமி மட்டையர் அவர்கள் அந்நாளைய அரசினரிடம் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, கலைக்கூட நிருவாகத்தினர் எதிர்ப்பு இருந்தபோதிலும் மேற்படி சிலைகள் சிவபுரம் கோயிலிலேயே வைக்கப்பட வேண்டுமென்று அரசினரை ஆணையிடச் செய்தார். சிலைகள் சிவபுரம் கோயிலுக்குப் போயின.

ஸ்தபதியோடு சேர்ந்துகொண்டு அதேபோன்ற சிலைகளைச் செய்து வைத்துவிட்டு அவைகளைக் களவாடி வெளிநாட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள், சுப்பிரமணிய படையாச்சி என்பவரின் மக்கள். அவர்கள் பெயரெல்லாம் –காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்று எப்படிச் சொல்லலாம் என்று கேட்டால் அதற்காகச் சொல்கிறேன். திலகர், சித்தரஞ்சன், கோவிந்ததாஸ், ஜவஹர், காந்தி என்று தன் மக்களுக்கெல்லாம் பெயர்களை அவர் இட்டிருக்கிறார். 1952-ஆம் வருடத்திலிருந்து இவ்வளவு பெரிய திருட்டுக் கண்டுபிடிக்கப்படவில்லை, இந்த ஆட்சிக் காலத்திலே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 1952-லே இது நடைபெற்று இந்தச் சிலைகளெல்லாம் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்றன என்றால், பழைய சிலைகளைப் போன்ற அதன் வளைவுகள்—அதுவும் நடராஜர் சிலைக்கு அதிக வளைவுகள்—விரல் நெளிவுகள் இவைகளைச் செய்ய வேண்டுமென்றால் தங்கம் அதிகமாகக் கலக்க வேண்டும். அப்படிக் கலக்கப்பட்ட, இந்தச் சிலைகளெல்லாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அவருக்குப் பிறகு அவரது மகன் திலகரும் அதே தொழிலைத் தொடர்ந்து செய்து அதே சிவபுரத்திலிருந்த வேறு சிலைகளைத் திருடி விற்றார். குத்தாலத்திலே காங்கிரஸ் கட்சியின் தலைவர் திலகர் என்பவர், இன்னொரு சகோதரர் பம்பாயிலிருந்து கொண்டு, தனது மூத்த சகோதரனின் பிரதிநிதியாக இருந்து, வியாபாரத்தை நடத்தி வந்தார். சிலை வாங்கி விற்பதில் பெரிய தொடர்பு ஏற்பட்டு, கடைசியில் இந்தச் சிலை பல இடங்களுக்குப் போய், ஒரேயொரு நடராஜர் சிலை அமெரிக்காவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந்தச் சிலையை இப்பொழுது அமெரிக்க நாட்டுக்காரர் 75 இலட்சம் ரூபாய் விலை கூறிக் கொண்டிருக்கின்றார்.

இப்படி பயங்கரமான ஒரு சிலை திருட்டு; 1952-லிருந்து திட்டமிட்டு ஒரு குடும்பமே அதிலே ஈடுபட்டுநடத்தியிருக்கின்றார்கள். எதற்கெடுத்தாலும் அரசியலைக் கலப்பவர்கள் இவைகளை மறந்து விடக்கூடாது. நான் இதைச் சொல்லுகின்ற காரணத்தால் காங்கிரஸ் கட்சியையே குற்றம் சாட்டுகிறேன் என்று கருதி விடக்கூடாது. ஊழல், விவகாரங்கள் இவைகளையெல்லாம் பேசும் நேரத்தில் 1952-லிருந்து 1967-வரையிலேயும் நடைபெற்ற இந்தச் சம்பவங்களையும் அவர்கள் ஒரு கட்சியின் போர்வையிலே ஒளிந்து கொண்டு நடத்தியிருக்கின்றார்கள். இந்தக் காரியம் எந்தக் கட்சியின் சார்பாக நடைபெற்றாலும் அது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. அது கழகத்தின் சார்பிலே நடைபெற்றாலும் சரி, காங்கிரஸ் சார்பிலே நடைபெற்றாலும் சரி, கம்யூனிஸ்ட் சார்பிலே நடைபெற்றாலும் சரி, சுதந்திராக் கட்சியின் சார்பிலே நடைபெற்றிருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆகவே, இப்படிப்பட்ட சில தகவல்கள் இருக்கும் பொழுது வேண்டுமென்றே ஒரு ஆளுங் கட்சியைக் குறை கூற வேண்டுமென்பதற்காக மேடைகளையும், ஏடுகளையும் பயன்படுத்திக் கொள்வது நல்லது அல்ல என்பதற்காக இதைச் சுட்டிக் காட்டுகிறேனே அல்லாமல் வேறெதற்குமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானியத்தின் மீது பல குறைபாடுகள் எடுத்துக் கூறப்பட்டதையெல்லாம் அதிகாரிகள் உடன் இருந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் மகிழ்ச்சி. குறைகள் இல்லாமல் இலாகா நடைபெற முடியாது. இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் மெத்தத் சிலாக்கியமாக நடைபெறவேண்டிய இலாகா. ஒரு குறையும் இல்லாமல் நடைபெறுவது நல்லதுதான்.

அதற்கேற்ற வகையில் நீங்கள் தந்திருக்கும் எல்லாக் கருத்துக்களையும்—காலையிலிருந்து மாலை வரை கூறப்பட்டவைகள் அனைத்தும்—இங்கே வந்திருந்து கேட்டுக் கொண்டிருந்த அதிகாரிகளுக்கு நிச்சயமாக பயன்படும் என்று நம்புகிறேன். ஆகவே, எடுத்துச் சொல்லப்பட்ட எந்தக் குறைபாடும், புறக்கணிக்கப்பட வேண்டியதோ, அலட்சியப்படுத்தப்படவேண்டியதோ அல்ல என்று எடுத்துக்கூறி, அனைத்தும் நல்ல முறையில் கவனிக்கப்படும் — நிச்சயமாகக் கவனிக்கப்படும் என்றஉறுதியை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் கூறி, இந்த மானியத்தின்மீது தந்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை அனைவரும் திரும்பப்பெறவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்தின் மீது அரசு கோரிய தொகை வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





# தொழில் வளர்ப்போம்!

**தொழிலமைச்சர் செ. மாதவன்**

**த**மிழ்நாட்டிலே, தேவைப்படுகிற அளவிற்குத் தொழில் வளத்தை நாம் கண்டுவிட்டோமென்று வாதாடுவதற்கு நான் விரும்பவில்லை. ஆனால், அதே நேரத்தில் தொழில் முன்னேற்றமே இல்லை—இந்த மாநிலத்தில் ஒன்றுமே நடைபெறவில்லை என்று பேசுவதும் அவ்வளவு பொருத்தமாகாது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டிலே 1966—67 ஆம் ஆண்டிலே 1273 மில்லியன் யூனிட்டுகள் அளவுக்கு மின்சாரத்தைத் தொழில் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், 1970—71 ஆம் ஆண்டிலே 2,730 மில்லியன் யூனிட்டுகள் அளவுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தி இருக்கிறோம். எல்லாம் தமிழ்நாட்டிலே தொழில் வளம் எவ்வளவு விரைவாகச் செயல்படுகிறது என்பதை உணர்வதற்கு இந்த எடுத்துக் காட்டுப் பயன்படும் என்று கருதுகிறேன்.

1969—70-ஆம் ஆண்டிலே 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. 1970—71-ஆம் ஆண்டிலே 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1971—72 ஆம் ஆண்டிலே 8 கோடி ரூபாயாக உயர்த்தி ஒதுக்கியிருக்கிறோம் என்றால், தொழில் துறையை இந்த அரசு புறக்கணித்து விட்டது என்று ஒட்டு மொத்தமாகச் சொல்வதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும் ?

இண்டஸ்ட்ரியல் புரடக்ஷன் உற்பத்தியைப் பொறுத்த அளவில் நாம் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்வார்களானால் ஆட்சேபனையில்லை. ஆனால் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு ஒன்றுமே இல்லை என்று சொல்வார்களானால் அதை நாம் ஒப்புக்கொள்ளத் தயாராகவும் இல்லை. 1960-ஆம் ஆண்டிலே 100 புள்ளிகள் தொழில் வளர்ச்சி என்று எடுத்துக் கொண்டால் 1971-ஆம் ஆண்டிலே 189 புள்ளிகள் என்ற அளவுக்கு வளர்ந்திருப்பதைப் பார்க்கிறோம்.

இந்த இரண்டாண்டுகளுக்குள்ளாக நாம் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ‘ லெட்டர் ஆஃப் இன்டென்ட் ’, முன் அனுமதி பெற்றது கிட்டத்தட்ட 15. இதற்காக நாம் 50 கோடி ரூபாய்க்குமேல் திட்டமிட்டிருக்கிறோம். 50 கோடி ரூபாயில் 15 தொழிற்சாலைகள் அரசாங்கத்தின் தொழில்வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலே உருவாக்கப்பட்டதை இந்த இருபதாண்டுக் காலத்தில் பார்த்திருக்க முடியுமா ?

அதைப்போலவே, நாம் மொத்தமாக, இந்தத் தொழில் வளர்ச்சிக் கழகத்தில், ‘ டிட்கோ’ வில் மாநில அரசு தொழில்கள் நடத்த முதலீடு செய்திருப்பதைப் பார்க்க வேண்டும். 1966—67 வரையில், தொடங்கப்பட்ட ஓரிரு ஆண்டுகளில் மொத்தம் தொழிற்சாலைகளுக்கான அரசு மூலதனம் 61 இலட்சம் ரூபாய். ஆனால் 67-லிருந்து இந்த 1971—72 வரையில், கிட்டத்தட்ட நான்கைந்தாண்டுக் காலத்தில் மூலதனம் 1,546 இலட்சம் ரூபாய். இதிலிருந்து எப்படிப் பொதுத் துறைக்கு ஊக்கம் தராது தனியார் துறைக்கு ஊக்கம் தருகிறோம் என்று சொல்ல முடியும் ?

சிறு தொழில்களை ஏற்படுத்த வேண்டுமென்ற புதிய கொள்கையை நாம் பொறுப்பேற்ற பிறகு எடுத்துக் கொண்டதன் விளைவாக, 1966—67-ல் 8 லட்ச ரூபாயும் 1970—71 ஆம் ஆண்டு 118 இலட்சம் ரூபாயும் சிறு தொழில்களுக்காக இந்த நிறுவனத்தின் மூலம் உதவி செய்யப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்குச் சிறுதொழில்கள் பரவ வேண்டுமென்று அக்கறை காட்டி முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, இந்த நிறுவனம் சென்னையிலிருந்து செயல்படுவதோடு இல்லாமல், கிளை அலுவலகங்களை மாநிலத்தின் பல பகுதிகளில் வைத்துப் பலருக்கும் உதவுவதில் வெற்றி பெற்றிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு, புதிதாகச் சிறுதொழில் வாரியம் ஏற்படுத்தியிருக்கிறது. மிகச்சில நாட்களுக்

குள்ளே அது ஆற்றியிருக்கும்பணிகளை இதில் பார்க்க முடியும். சில மாதங்களுக்குள்ளாக மொத்தமாக உதவி செய்த தொகை பல்வேறு வகைகளிலும் சிறு தொழில்களுக்காக 91 இலட்சம்; இதை எண்ணிப் பார்க்கும் பொழுதே நமது முன்னேற்றம் வியப்பைத் தரவில்லையா ?

சக்தியற்றவர்கள், வலுவற்றவர்கள், சாதாரணமானவர்கள் ஒன்றாகச் சேர்ந்து, கூட்டாகத் தொழில் நடத்த வேண்டுமென்றால் அந்தக் கூட்டுறவுத் துறைக்கும் ஊக்கம் தருகிறோம். இதற்கெனத் தனி வங்கி நம் மாநிலத்திலே சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. 1966–67-ல் ரூ. 17½ இலட்சம்தான் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 1969–70-ல் ரூ 41 இலட்சம் இந்த வங்கி வழங்கியுள்ளது. 17½ இலட்சம் எங்கே ? 41 இலட்சம் எங்கே என்பதை எண்ணிப்பார்த்தால் கூட்டுறவுத் துறையிலே எந்த அளவிற்கு நம்மாலே அதிக உதவி செய்ய முடிந்திருக்கிறது என்பதை உணர முடியும்.

அடுத்து டான்சி. அரசாங்கமே நடத்துகின்ற ஒரு 60 யூனிட்டுகள். அது எப்படி நடைபெற வேண்டும், அதிக லாபம் சம்பாதிக்க வேண்டும், இப்பொழுது லாபம் எடுத்திருந்தாலும் போதாது என்று வலியுறுத்தப்பட்டது. அது நியாயம்தான், அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். முயற்சிகள் எடுத்து அரசாங்கம் தொடர்ந்து நடத்தும். நஷ்டம் என்றால் ஏதோ அரசாங்கத்தின் கொள்கையினால் ஏற்பட்டுவிட்டது என்பது அல்ல என்பதைப் புள்ளி விவரங்கள் காட்டும் என்று கருதுகிறேன். இந்த நிறுவனத்தின் உற்பத்தி மதிப்பு 1965-ல் 389 இலட்சம் ரூபாய் ; 1971–72-ல் 803 இலட்சம் ரூபாய் ; விற்பனை, 1965–66-ல் 342 இலட்சம் ரூபாய் ; 1971–72ல் 792 இலட்சம் ரூபாய். இப்படி உற்பத்திப் பெருக்கையும், விற்பனையையும் ஒரு சேரப் பெருக்கிக் காட்டியிருக்கிறோம்.

இந்த அரசு, நெசவாளர்களுக்காகப் பாடுபட வேண்டுமென்று வாதாடிய அரசு. இந்த ஆட்சி வந்த பிறகு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 10 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. நெசவாளர்கள் புறக்கணிக்கப் படவில்லை என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

மூலப் பொருள் வளத்தை மட்டும் வைத்துப் பார்த்தால் தமிழ் நாட்டில்தான் அயர்ன் அன்டு ஸ்டீல் தொழில்கள் ஏராளமாக இருக்கின்றன. ஜப்பான் நாட்டு நிபுணர்களே தமிழ்நாட்டுக்கு வந்துஆராய்ந்து ஓர் அறிக்கையை இந்திய நாட்டுத் தூதுவரிடத்தில் ஜப்பான் நாட்டில் ஒப்படைத்தார். அந்த அறிக்கையை என்னிடத்தில் தந்தார்கள். நான் அதைப் படித்துப் பார்த்தேன். ஜப்பான் நாட்டின் தொழில் வளர்ச்சியைப்போல், வேறு எந்த நாட்டிலாவது அதிகமாக ஆரம்பிக்க வேண்டுமென்றால் இந்திய நாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டில்தான் அதற்கான சூழ்நிலை இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் ஆற்றல் படைத்த தொழிலாளர்கள் 'ஸ்கில்டு லேபர்' ஏராளமாக இருக்கிறார்கள்— என்றும், ஜப்பான் அரசு அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் யோசனை கூறியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நல்லமுறையில் தொழில் வளர்ச்சி காணவேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசை. தூத்துக்குடியில், தமிழ் நாட்டின் தென்முனையில் அங்குள்ள உப்பின் அடிப்படையில் அங்குள்ள துறைமுகத்தின் அடிப்படையில் பெரிய இன்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ் உருவாகும் வாய்ப்பிருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. கிழக்குக் கடற்கரையோரத்தில் கடல் வளத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஏராளமாகத் தொழில்கள் வளர வேண்டும் என்று அதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறோம். 14 லெட்டர்ஸ் ஆப் இன்டென்ட் பெற்றிருக்கிறோம் என்று சொன்னேன். மணலியில் பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ் வர வேண்டும். அதற்கு ரூ 80 கோடி அளவிற்குத் திட்டமிட்டு முயற்சியும் எடுத்து வருகிறோம். அது வெற்றி பெறும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. புதிதாக எந்த எந்தத் தொழில்கள் தொடங்கமுடியும் என்ற ஆராய்ச்சியும்தமிழ்நாட்டுஅரசின் சார்பில் உருவாக்கப்பட்டு, 176 கோடி ரூபாய் அளவில், அதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் ஒன்று இந்த பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ். இது வருமானால் நிச்சயமாகத் தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும். இரசாயனத் தொழில்களைப் பெருக்குவதற்குத் தமிழ் நாட்டில் நல்ல வாய்ப்பிருக்கிறது. அவைகளைப் பற்றியெல்லாம் வலியுறுத்தி வருகிறோம். பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ் போன்றவைகளில் மத்திய அரசு விரைவில் முடிவு எடுத்து அறிவிக்குமானால் தொழில் வளத்தை இங்கு நம் மாநிலத்தில் நல்ல முறையில் பெருக்குவதற்கு உதவியாக இருக்கும்.

நமது தமிழ் நாடு கடந்த நான்கைந்து ஆண்டுகளில் நல்ல முறையில் தொழில் வளர்ச்சி பெற்றுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் பன்மடங்கு தொழில் வளர்ச்சி பெருகி, வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்பட்டுத் தனி மனிதனின் வாழ்க்கைத்தரம் உயருவதற்கு இந்த அரசு முழு முயற்சியையும் எடுக்கும் என்ற உறுதியைத் தந்து, தொழில் வளர்ச்சி பெருக வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லாத காரணத்தினால் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

[தொழில் மானியக் கோரிக்கையின்மீது 14—3—1972 அன்று, சட்டப் பேரவையில் ஆற்றிய பதிலுரையிலிருந்து..]

**தொடர்ந்து வரும்**

**எஞ்சிய பல்வேறு துறைகளின் மானியக் கோரிக்கைகளுக்கு அந்தந்தத் துறைகளின் அமைச்சர்கள் அளித்த பதில்கள் தொடர்ந்து வெளிவரும்.**



செங்கற்பட்டு மாவட்டம்
0 5 10 15 கி. மீ.
ஆந்திரம்
பொன்னேரி
புலிகாட் ஏரி
கும்மிடிபூண்டி
ஊத்துக்கோட்டை
ஆரணி ஆறு
பெரியபாளையம்
சோழவரம்
மீஞ்சூர்
திருவள்ளூர்
பூண்டி
பூண்டி நீர்த்தேக்கம்
சைதாப்பேட்டை
ரெட்ஹில்ஸ் ஏரி
மாதவரம்
திருவொற்றியூர்
வில்லிவாக்கம்
அம்பத்தூர்
ஆவடி
திருத்தணி
பள்ளிபட்டு
ராமகிருஷ்ணராஜிபேட்
நகரி
திருவாலங்காடு
கடம்பத்தூர்
அரக்கோணம் சந்திப்பு
பூவிருந்தவல்லி
சென்னை மாநகரம்
செயிண்ட் தாமஸ் மவுண்ட்
செம்பரம்பாக்கம் ஏரி
குன்னத்தூர்
ஸ்ரீபெரும்புதூர்
வட ஆர்க்காடு
வங்காள விரிகுடா
காஞ்சிபுரம்
ஆர்க்காடு
வாலாஜாபாத்
பாலாறு
காட்டாங்குளத்தூர்
செங்கற்பட்டு
திருப்போரூர்
செய்யாறு
உத்திரமேரூர்
மகாபலிபுரம்
திருக்கழுக்குன்றம்
மதுராந்தகம் ஏரி
சதுரங்கப்பட்டினம்
மதுராந்தகம்
லத்தூர்
வந்தவாசி
அச்சரப்பாக்கம்
சித்தாமூர்
செய்யூர்
பக்கிங்காம்
சூணம்பேடு
தென் ஆர்க்காடு
குறிப்பு
மாநில எல்லை
மாவட்ட எல்லை
வட்ட எல்லை
ஊராட்சி ஒன்றிப்பு எல்லை
தேசிய நெடுஞ்சாலை
இதர சாலைகள்
இருப்புப்பாதை
ஆறு, ஓடை
மாவட்டத்தலைநகர்
வட்டத்தலைநகர்
ஊராட்சி ஒன்றிப்புத் தலைநகர்
இதர கிராமங்கள்
குறிப்பு :-சென்னை - ஆந்திரப்பிரதேச மாநிலங்களிடையே, திரு பட்டாஸ்கர் அவர்களின் தீர்ப்புப்படி எல்லைக் கோடு தோராயமாகக் காட்டப்பட்டுள்ளது.
79° 30'
80° 0'
மத்திய நிலஅளவை அலுவலகம், சென்னை

# சீர்மிகு செங்கற்பட்டு

செங்கற்பட்டு மாவட்டம், வரலாற்றுப் பெருமை மிக்க நிலம். முன்னாளில் புகழ்வாய்ந்த தொண்டை மண்டலத்தின் பகுதியாக இது விளங்கியது. சிற்பக் கலைச் சின்னங்களைக் கொண்ட மாமல்லபுரமும் பிரம்மாண்டமான கோயில்களைக் கொண்ட காஞ்சிபுரமும் மாவட்டத்தில் தனிச் சிறப்பு வாய்ந்த இடங்கள். சென்னையிலிருந்து 36 மைலில் செங்கற்பட்டு நகரம் உள்ளது. இது ஒரு இரயில் சந்திப்பு.

வடக்கில் ஆந்திர மாநிலத்தில் நெல்லூர் மாவட்டமும், தெற்கில் தென் ஆர்க்காடு மாவட்டமும், மேற்கில் வட ஆர்க்காடு, சித்தூர் மாவட்டங்களும், கிழக்கில் வங்காள விரிகுடாவும் எல்லைகளாக உள்ளன. மாவட்டத்தில் 115 மைல் நீளத்துக்குக் கடற்கரை இருக்கிறது. 1960-ஆம் ஆண்டில் படாஸ்கர் தீர்ப்பின் விளைவாகச் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருத்தணி வட்டம் செங்கற்பட்டு மாவட்டத்தோடு சேர்க்கப்பட்டது. பொன்னேரி, திருவள்ளூர் வட்டங்களிலிருந்து சில பகுதிகள் ஆந்திரத்துக்கு மாற்றப்பட்டன.

மாவட்டத்தின் பரப்பளவு 3,15·51 சதுர மைல்கள். மக்கள் தொகை 21,96,412. இதில் ஆண்கள் 11,20,591. பெண்கள் 10,75,821. மக்கள் தொகையின் அடர்த்தி சதுர மைலுக்கு 696 பேர். கிராமப்புறங்களில் வாழும் மக்கள் தொகை 17,40,734. நகர்ப்புறங்களில் வாழும் மக்கள் தொகை 4,55,678. எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்—ஆண்கள் 4,50,587, பெண்கள் 1,62,001.

மாவட்டத்தில் எட்டு வட்டங்கள் உள்ளன. அவை : திருத்தணி, திருவள்ளூர், பொன்னேரி, சைதாப்பேட்டை, திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம், செங்கற்பட்டு, மதுராந்தகம். மாவட்டத்தில் 2,179 கிராமங்களும், 34 நகரங்களும் உள்ளன. மாவட்டம் நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை:செங்கற்பட்டு, காஞ்சிபுரம், சைதாப்பேட்டை, திருவள்ளூர். இவைகளில் மொத்தம் 27 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.

மாவட்டம் பெரும்பாலும் சமவெளி; சில இடங்களில் குன்றுகள் உள்ளன. அவற்றுள் பரங்கிமலை, திருநீர்மலை, பல்லாவரமலை, திருக்கழுக்குன்றம், திருத்தணி ஆகியவைகளில் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. காடுகளின் பரப்பளவு 137 சதுர மைல்கள். மாவட்டத்தின் முக்கிய நதிகள், பாலாறு, ஆரணி ஆறு, கூவம் ஆறுகள் உள்ளன. இவை தவிர திருவள்ளூர், பொன்னேரி வட்டங்கள் வழியாக ஓடும் கொற்றலையாற்றின் நீர் பூண்டியில் தேக்கிவைக்கப்படுகிறது. சோழவரம், புழலேரி ஆகியவைகளிலிருந்தும், இங்கிருந்தும், சென்னைக்குக் குடிநீர் கிடைக்கிறது. ஆரணியாறு, பொன்னேரி வட்டத்துக்கும், திருவள்ளூர் வட்டத்துக்கும் இடையில் ஓடிப் பழவேற்காடு வழியாகக் கடலில் கலக்கிறது. கூவம், அடையாறு, கிளியாறு, கல்லாறு போன்ற சிறு ஓடைகளும் இருக்கின்றன. பாலாறு பெரும்பாலும் வற்றியிருந்தாலும், தோண்டினால் ஊற்றுநீர் வசதி மிகுதியாகக் கிடைக்கிறது. மாவட்டம் பொதுவாக வெப்ப நிலமுடையது. கோடைகாலத்தில் அதிகமாக உள்ள வெப்பம் கடற் காற்று மூலம் தணிகிறது. சராசரி மழை அளவு 1,187.9 மில்லிமீட்டர்.



செங்கற்பட்டு மாவட்டத்தில் பாசனத்துக்கு முக்கிய ஆதாரமாக விளங்குபவை ஏரிகள். பாலாறு, செய்யாறு, ஆரணியாறு, கூவம் ஆகியன மூலம் சில பகுதிகள் பாசனம் பெறுகின்றன. இந்த ஆறுகளிலிருந்து பிரியும் கால்வாய்கள் பல ஏரிகளுக்கு நீர் வசதி தருகின்றன. இந்த ஆறுகளும், ஏரிகளும் முக்கியமாகப் பருவ மழையையே நம்பியுள்ளன. சராசரி மொத்த மழையில் மூன்றில் இரண்டு பங்கு, அக்டோபரிலிருந்து டிசம்பர் வரை, வடகிழக்குப் பருவ மழையின்போது பெய்கிறது.

பாலாற்றிலிருந்து செல்லும் ‘கம்பக்கால்’ கால்வாய், காஞ்சிபுரம், திருப்பெரும்புதூர் வட்டங்களில் நீர் வசதி அளிக்கிறது. உத்திரமேரூர் ஏரிக்குச் செய்யாறு நீர் செல்கிறது. கொற்றலை ஆற்றிலிருந்து நீரைப் பெறும் சோழவரம் ஏரியும், புழலேரியும், பொன்னேரி, சைதாப்பேட்டை வட்டங்களில் பல பகுதிகளுக்குப் பாசனம் அளிக்கின்றன. திருப்பெரும்புதூர் வட்டத்தில் 13,000 ஏக்கருக்குப் பாசனம் அளிக்கும் செம்பரம்பாக்கம் ஏரிக்குக் கூவத்திலிருந்து நீர் கிடைக்கிறது. இவை போக பல சிற்றாறுகளும், ஓடைகளும் ஆங்காங்கே ஓரளவு பாசனத்துக்குப் பயன்படுகின்றன. வறட்சிக் காலத்தில் பாலாற்றுப் பகுதியில் தோண்டினால் ஊற்று நீர் கிடைக்கிறது.

மாவட்டம் முழுவதிலும் பரவலாகக் கிணறுகளும் பாசனத்துக்குப்பயன்படுத்தப்படுகின்றன. இறைவைப் பாசனத்துக்குப் பம்புசெட்டுகள் பேருதவியாக அமைந்துள்ளன. மாவட்டத்துக்கு



ஓரளவுக்கு உதவியாக அமைந்த ஆரணியாறு தேக்கம், ஆந்திரதிலிருந்து மாற்றப்பட்டுவிட்டது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் பாசன வசதிகளின் விவரம். அரசுக் கால்வாய்கள் 63, குழாய்க் கிணறுகள் 5, அரசு தரப்பு பாசனக் கிணறுகள் 109, தனியார் பாசனக் கிணறுகள் 55,580, ஏரிகளும், குளங்களும் 3,253, நீர்த்தேக்கம் 1, ஆயில் எஞ்சின்கள் 10,729.

மாவட்ட மக்களில் 5,76,228 பேர் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கின்றனர். இப்பகுதியில் பெரிய அணைக்கட்டுகள் இல்லையாயினும், ஏரி, குளங்கள் பெருமளவில் இருப்பதால் பரவலான அளவில் நெல் சாகுபடியாகிறது. வேளாண்மையே பெரும்பாலான மக்களின் முக்கியத் தொழில். எனினும் அண்மைக் காலத்தில் தொழில் வளர்ச்சியில் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. சென்னை மாநகருக்கு வெளியே சுற்றுப்புறப் பகுதிகளில் அமைக்கப்பட்ட பல பெருந்தொழில்கள், செங்கற்பட்டு மாவட்டத்துக்குள்ளே இருக்கும்படியான வாய்ப்பும் ஏற்பட்டது. மாவட்டத்தின் மிகப் பிரசித்தமான புராதனச் தொழில் நெசவு. காஞ்சிபுரம் பட்டாடைகள் இன்று உலகப் புகழ்பெற்று விளங்குகின்றன. பல்வேறு நாடுகளிலும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் காஞ்சிபுரம் பட்டு, உவப்போடு வாங்கி அணியப்படுகின்றது.

மாநிலத்தின் தலைநகரான சென்னை மாநகரை, மூன்று பக்கங்களிலும் சூழ்ந்த நிலையில் மாவட்டம் அமைந்திருப்பதால், அலுவலகங்கள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவைகளுக்காக நாள்தோறும் சென்று வருவோர் மிகுதி. அதேபோல் சென்னையில் வசிக்கும் மக்களில் பலர் இம்மாவட்டப் பகுதியில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களுக்கு வந்து போகின்றனர். சென்னையிலிருந்து 20 மைல் சுற்றளவில் பல புதிய குடியிருப்புகள் ஏற்பட்டுள்ளன.

'தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' என்பது கவி வாக்கு. பண்டைக் காலத்தில் உலகப் புகழ் பெற்றிருந்த நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் தலைவர் தர்மபாலர் காஞ்சியில்



பயின்றவர் என்று அறியப்படுகிறது. பாரதம் பாடிய பெருந்தேவனார், பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார், திருக்குறளுக்கு அரிய உரை எழுதிய பரிமேலழகர், இராமானுசர், வெண்பாவில் வல்ல புகழேந்தி, பேரறிஞர் அண்ணா, தத்துவ மேதை டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன் ஆகியோர் தொண்டை நாட்டில் தோன்றியவர்களாவர்.

பல நாட்டவரும் கண்டு வியக்கும் மாமல்லபுரம், சென்னையிலிருந்து 53 மைல் தொலைவில் அமைந்துள்ளது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மகேந்திர பல்லவனால் அழகு மிக்க கலைக்கூடமாக உருவாக்கப்பட்டு, பெருமை மிக்க கடற்கரைப் பட்டினமாகப் புகழ் படைத்திருக்கிறது. தென்னிந்தியாவின் கலைச் செழிப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக மாமல்லபுரம் விளங்குகிறது. சுற்றுலா வருவோர் வசதிக்காக ரூ. 7 இலட்சம் செலவில் இங்குச் சுற்றுலா விடுதி கட்டப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து தென்மேற்கில் 47 மைல் தொலைவில் உள்ள காஞ்சிபுரம் இந்தியாவின் புனித நகரங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பல்லவர், சோழர், விஜயநகர மன்னர்கள் காலத்தில் தலைநகராக இருந்து வந்த இது, தற்போது செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகராக விளங்கி வருகிறது. பட்டாடைகளும், பெருங்கோயில்களும், விழாக்களும் இந்த நகரத்தின் தனிச் சிறப்புகள்.

திருத்தணி, இயற்கை எழில் மிக்க இடம். செங்கற்பட்டுக்கும், மாமல்லபுரத்துக்கும் இடையில் அமைந்துள்ள திருக்கழுக்குன்ற மலையில் ஒரு சிவன் கோயில் இருக்கிறது. நாள் தவறாமல் நண்பகல் வேளையில் இம்மலைக்கு இரண்டு கழுகுகள் வந்து செல்கின்றன. அவற்றுக்கு இங்கு உணவு படைக்கப்படுகிறது.

சென்னையிலிருந்து 53 மைல் தொலைவில் வேடந்தாங்கல் என்னுமிடத்தில் 'பறவைகள் காப்பகம்' அமைந்துள்ளது. இங்குக் கடப்ப மரங்கள் நிறைந்த சுமார் 74 ஏக்கர் பரப்பளவு ஏரியில் தொலை தூரங்களிலிருந்து விதவிதமான நீர்ப் பறவைகள் வந்து தங்கிக் குஞ்சு பொரிக்கின்றன. செப்டம்பர் முதல் மார்ச் வரை பறவைகள் ஆண்டுதோறும் வந்து செல்லுகின்றன. ஏரியில் நீர் வற்றியதும் பறவைகள் அனைத்தும்



இந்த இடத்தை விட்டுப் பறந்து விடுகின்றன. சுற்றுலா வருவோர் விரும்பிப் பார்க்கும் இடங்களில் இந்தப் பறவை வனமும் ஒன்று. நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக இவ்வனம் இருந்து வருகிறது.



நல்ல சாலை வசதிகளுக்குப் பெயர் பெற்றது செங்கற்பட்டு மாவட்டம். 133 மைல் தேசீய நெடுஞ்சாலைகளும், 1,061 மைல் மாவட்டச் சாலைகளும் உட்பட மொத்தம் 1,818 மைல் நீளச் சாலைகள் உள்ளன. வடக்கே கிருஷ்ணா நதியையும், தெற்கே மரக்காணத்தையும் இணைக்கும் பக்கிங்காம் கால்வாய் மதுராந்தகம், சைதாப்பேட்டை, பொன்னேரி வட்டங்கள் வழியாகச் செல்லுகிறது. சென்னை நகருக்கும், கால்வாயின் இருபுறங்களிலும் உள்ள கிராமங்களுக்கும் பொருள்களைப் படகுகளில் ஏற்றிச் செல்ல போக்குவரத்து வழியாக இது உதவுகிறது. மாநிலத் தலைநகருக்குரிய விமான நிலையம் சைதாப்பேட்டை வட்டம் மீனம்பாக்கத்தில் அமைந்துள்ளது.

சென்ற அறுபது ஆண்டுகளில் மாவட்டத்தில் மக்கள் தொகை படிப்படியாக அதிகரித்திருப்பது மட்டுமல்ல, நகரங்களில் குடியேறி வாழ்வோர் தொகை கணிசமான அளவில் உயர்ந்துள்ளது. 1961-ஆம் ஆண்டு கணக்குப்படி பத்தாண்டுகளில் (1951–61) மக்கள் தொகை அதிகரிப்பு : 12·17 சதவீதம்.

சைதையில் பல காலமாக இயங்கிவந்த செங்கை மாவட்டத் தலைநகர் 6-7-1968 முதல் காஞ்சி மாநகரில் இயங்கத் துவங்கியது. அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திரு கே. ஏ. மதியழகன் அவர்களால் வரலாற்றுச் சிறப்புமிக்க இந் நிகழ்ச்சி துவக்கி வைக்கப் பட்டது. முதல்வர் கலைஞர் அவர்களால் இவ்வலுவலகத்தின் புதிய கட்டடம் 12–10–1969 அன்று திறந்து வைக்கப்பட்டது.

சீரும் சிறப்புமிக்க இந்த மாவட்டம் உருவாகிய கதை வரலாற்றில் சுவையான பகுதியாக மிளிர்கிறது.

1760-ஆம் ஆண்டில் ஆர்க்காடு நவாபிடமிருந்து ஆங்கிலேயர்கள் இதனை அன்பளிப்பாகப் பெற்றனர். என்றாலும் 1801-ல்தான் அவர்கள் நேரடி நிர்வாகத்தைத் தொடங்கினார்கள். 1860-ல் சென்னை, செங்கற்பட்டு இரண்டையும் இணைத்துச் சென்னை மாவட்டம் என்று பெயரிட்டனர். 1870-ல் செங்கற்பட்டு மாவட்டத்தைத் தனியாக ஆக்கினர். தற்போது செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 102 வயதாகிறது.

## வெண்பாப் போட்டி-32

முறிப்படி : பாரில்லா நாடாகும் பார்

முடிவு நாள் : 15—4—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),

''தமிழரசு'' அலுவலகம்,

அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு—

அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

# வளம் கொழிக்க
# வழி வகுக்கும்
# மின்சக்தி

நாட்டில் மின்சக்தி பெருகிட வளம் பெருகிடும், மக்கள் வாழ்வு மலர்ந்திடும். நம் நாட்டின் வளம்பெருக்க தம் பங்கை ஆற்றும் பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் கொதிகலன் தொழிலகம் தம் சக நிறுவனங்களான ஹைதராபாத், ஹரித்வார் தொழிற் கூடங்களுடன் வளம் கொழிக்க மின்சக்தி உற்பத்தி பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

## அனல் மின் நிலைய நீராவி கொதிகலன்கள்

இவை அமையப்பெற்ற அனல் மின் நிலையங்கள்: எண்ணூர் (தமிழ் நாடு), ஹர்துவாகஞ்ச் (உ.பி), ஓப்ரா (உ.பி), பன்கி (உ.பி), ஃபரிதாபாத் (ஹரியாணு), இந்திரப் பிரஸ்தா (டெல்லி), பதார்பூர் (டெல்லி), கொத்தகூடம் (ஆந்திரா), பத்ராது (பீகார்), நாம்ரூப் (அஸ்ஸாம்), பாடிண்டா (பஞ்சாப்), உகாய் (குஜராத்), கொரடி (மஹாராஷ்டிரா), பட் (குஜராத்), பரௌனி (பீஹார்) மற்றும் துங்கு ஜா அபர் (மலேசியா)



## தொழிலக நீராவி கொதிகலன்கள்

இவை அமையப்பெற்ற இரசாயன தொழிற்சாலை: ரசாயனி (மஹராஷ்டிரா), அலுமினியம் தொழிற்சாலை: கோர்பா (மகாராஷ்டிரா), பெட்ரோலியம் தொழிற்சாலைகள்: ஹால்டி (மேற்கு வங்காளம்), பரோடா (குஜராத்) மற்றும் உரத் தொழிற்சாலைகள்: துர்காபூர் (மேற்கு வங்காளம்), நாம்ரூப் (அஸ்ஸாம்), மணலி (தமிழ் நாடு), பரௌனி (பீஹார்), சிந்திரி (பீஹார்) மற்றும் கோவா.

**பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்**
(இந்திய அரசு நிறுவனம்)
கனரக கொதிகலன் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி-14
பதிவுபெற்ற அலுவலகம்: 5, பார்லிமெண்ட் தெரு, புதுடில்லி-1

# BHEL

**வளம் கொழிக்க மின்சக்**
**உற்பத்தி பணியில்**

# முனைப்பு இயக்கத்தில் முன்னணி மாவட்டம்!



ஒரு கிராமவாசி, தான் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதோடு, தன்னிரு மகன்களையும் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்திய உணர்ச்சிமிகு நிகழ்ச்சி ஒன்று, செங்கை மாவட்டத்தில் நிகழ்ந்திருக்கிறது.

இந்த மாவட்டத்தில் குடும்ப நல முனைப்பு இயக்கம், அந்த அளவுக்குத் தெளிவை ஏற்படுத்தி—உறுதியையும் உற்சாகத்தையும் அளித்து—பெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறது.

பத்தாயிரம் பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென்று இலக்கு நிர்ணயித்து, 23,170 பேருக்குச் செய்து முடித்துப் பாராட்டத்தக்க சாதனையை இம் மாவட்டம் செய்திருக்கிறது.

செங்கை மாவட்டத்தில் முனைப்பு இயக்கம் ஆரம்பிப்பதற்கு அரசினரால் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்ட நாள், அக்டோபர் 17 ஆகும். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைப்பு இயக்கத்தின் ஆரம்ப விழாவை, அக்டோபர் 2-ம் நாள் அன்றே அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில், சட்ட மன்றப்பேரவை, மேலவை உறுப்பினர்கள் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

இதனால் அக்டோபர் 2-க்கும் 17-க்கும் இடைப்பட்ட நாட்களில் முனைப்பு இயக்கம் சுறுசுறுப்பு அடைந்து, அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து சூடு பிடித்து, வேகம் அதிகரித்தது—வெற்றியை நோக்கித் துரித நடை போட்டது.

முனைப்பு இயக்கம் நடைபெறக் குறிப்பிட்ட காலம் அக்டோபர் 17 முதல் டிசம்பர் 9 வரை. ஆனால் இது டிசம்பர் 31 வரை நீட்டிக்கப் பெற்றது. குறிப்பிட்ட இயக்கக் காலத்தில் பத்தாயிரம் அறுவைச் சிகிச்சைகள் செய்து முடிக்க வேண்டுமென்று இலக்காகக் கொள்ளப்பட்டது. ஆனால் இந்த இலக்கின் இரண்டு மடங்கிற்கும் அதிகமாக மொத்தம் 23,170 ஆண், பெண் அறுவைச் சிகிச்சைகள் செய்து முடிக்கப் பெற்றுள்ளன.

செங்கை மாவட்டத்திலுள்ள 27 ஊராட்சி ஒன்றியங்களின் மக்கள் தொகை ஏறத்தாழ 29 இலட்சமாகும். இதில் தகுதி மிக்க தம்பதியர்களின் தொகை, ஏறக்குறைய 4,90,000 ஆகும்.

தமிழகத்தில் குடும்ப நலத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 1971 வரை, அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை, 35,474 ஆகும். ஆனால், முனைப்பு இயக்கக் காலமான இரண்டு மாதக் காலத்திற்குள் 23,170 அறுவைச் சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டு இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. காஞ்சிபுரம் பகுதி—7,092.
2. செங்கற்பட்டு பகுதி—5,480.
3. திருவள்ளூர்ப் பகுதி—4,366.
4. சைதைப் பகுதி—6,232

சென்னை மாநகருக்கு அருகிலே அமைந்திருப்பதால், நகரப்புறச் சூழ்நிலையும் நாட்டுப்புறச் சூழ்நிலையும் பின்னிப் பிணைந்த அமைப்புடன் கூடிய செங்கை மாவட்டத்தில், மேற்குறிப்பிட்ட சாதனை, மிகப் பெரும் வெற்றியாகும்.

மாவட்டம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மாவட்ட வருவாய் அதிகாரியின் மேற்பார்வையில் பணிகள் நடைபெற்றன.

ஆண் அறுவைச் சிகிச்சைகள் மாவட்டத்திலுள்ள எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், காஞ்சிபுரம், செங்கற்பட்டு, திருப்பெரும்புதூர், பொன்னேரி, திருத்தணி, தாம்பரம் ஆகிய நகரங்களிலுள்ள அரசினர் மருத்துவமனைகளிலும் செய்யப்பட்டன. அறுவைச் சிகிச்சைக்குப் பயிற்சி பெறாத மருத்துவ அதிகாரிகள் இருந்த சில ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு, மாவட்ட நடமாடும் அறுவைச் சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த மருத்துவ அதிகாரி அனுப்பப்பட்டார். இதுமட்டுமன்றி, வட ஆர்க்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நடமாடும் அறுவைச் சிகிச்சைப் பிரிவு மருத்துவ அதிகாரிகளும், இந்தப் பணிக்காகப் பயன்படுத்தப்பட்டனர்.

மாவட்டம் முழுவதும் சுற்றிப் பணியாற்றிய மாவட்டக் குடும்பநல அதிகாரி, வாய்ப்புக் கிடைத்த இடங்களில் எல்லாம் அறுவைச் சிகிச்சைப் பணியினையும் மேற்கொண்டார்.

இவை மட்டுமின்றி, காட்டாங்குளத்தூரில் அமைந்துள்ள சித்தரஞ்சன் நடமாடும் மருத்

துவமனையிலும், ஈக்காடு மிஷன் மருத்துவமனையிலும், மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

பெண் அறுவைச் சிகிச்சை பணிக்கான வசதிகள் செங்கை மாவட்டத்தில், காஞ்சிபுரம் அரசினர் மருத்துவமனையிலும், செங்கற்பட்டு அரசினர் மருத்துவமனையிலும் மட்டுமேயுள்ளன. இவ்வசதிகள் போதாதென்று திருவள்ளூர், பொன்னேரி, சென்னை கீழ்ப்பாக்கம் ஆகிய அரசினர் மருத்துவமனைகளிலிருந்து பிரத்தியேக மருத்துவ அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு, பெண் அறுவைச் சிகிச்சை முகாம்கள் நடைபெற்றன.

அறுவைச் சிகிச்சைப் பணிகளை மேற்கொண்டதில் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால், சின்னஞ்சிறு கிராமங்களில் எல்லாம் அறுவை சிகிச்சைக்கான ஏற்பாடுகள் செய்துதான் பெரிய மருத்துவமனைகளில் இவ்வறுவைச் சிகிச்சை செய்யப்படும் போது, ''இது ஏதோ பெரிய அறுவைச் சிகிச்சை போலிருக்கிறது. அதனால்தான் பெரிய மருத்துவமனைகளில் செய்கிறார்கள்'' என்ற தவறான எண்ணம், மக்கள் மனத்தில் தோன்றக்கூடும். சின்னஞ்சிறு கிராமங்களிலும் இதற்கான வசதிகள் செய்யப்பட்டதால், ''இது ஒரு சிறிய, எளிய, சாதாரண அறுவைச் சிகிச்சைதான்'' என்ற நம்பிக்கையைக் கிராம மக்களின் உள்ளங்களில் ஏற்படுத்த முடிந்தது. இந்த நம்பிக்கையும், முனைப்பு இயக்கத்தின் வெற்றிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தது.

முக்கியச் சில அம்சங்கள்; மாநெல்லூர் என்ற பெயர் கொண்ட கிராமத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் திரு இல்லூகன், இந்த முனைப்பு இயக்கக் காலத்தில், அவர் சிறுகும்ப நெறியை ஏற்றுக்கொண்டு, தாம் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதோடு குப்பையா, துரைசாமி என்ற தனது இரு மகன்களையும் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளச் செய்தார். அத்துடன் நில்லாமல், தனது மகள் திருமணமாகி மூன்றாவது குழந்தைக்குக் கருவுற்றிருப்பதாகவும், மகப் பேற்றுக்குப் பிறகு அவளை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும்படிச் சொல்லப்போவதாகவும், அவர் உறுதி கூறியிருக்கிறார்.

திரு இல்லூகன் என்ற அந்தக் குடும்பத் தலைவரை அறுவைச் சிகிச்சைக்கு அழைத்து வந்தவர், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மகப்பேறு உதவியாளராகப் பணியாற்றும் திருமதி எம். மனோரஞ்சிதம் என்பவராவார். அந்த அம்மையார், ஆண் அறுவைச் சிகிச்சைக்கு மொத்தம் 186 பேரை அழைத்து வந்து, ஒரு சாதனையைச் செய்துகாட்டி—மற்றப் பணியாளர்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்.

அந்த அம்மையார் பணியாற்றும் கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், அறுவைச் சிகிச்சை அதிகமாகச் செய்த வகையில் முதலிடம் பெறுகிறது. இங்குச் செய்யப்பட்ட மொத்த அறுவைச் சிகிச்சைகள் 1,750. இந்தச் சிறந்த சாதனைக்குக் காரணமான ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஒரு முஸ்லீம். பெயர் திரு எம். முகமது.

இம்மாவட்ட முனைப்பு இயக்கக்காலத்தில் ஒரே ஒரு மருத்துவ அதிகாரி மட்டும் 1,283 அறுவைச் சிகிச்சைகள் செய்திருக்கிறார். இந்தச் சாதனையைச் செய்திருப்பவர் மாவட்ட நடமாடும் அறுவை சிகிச்சை பிரிவைச் சேர்ந்த டாக்டர் ஆர். பரசுராம் ஆவார். ஆரம்பச் சுகாதார நிலையத்தில் அதிக அளவு—939 அறுவைச் சிகிச்சைகள்—செய்திருப்பவர், திருக்கழுக்குன்றம் ஆரம்பச் சுகாதார நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் தீனதயாளு.

இந்துக்களைப் போலக் குடும்ப நலத் திட்டத்தை, முஸ்லீம்களும் கிறித்துவர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற கூற்றை, இம்மாவட்டத்தில் நடந்த முனைப்பு இயக்கம் பொய்ப்பித்துக் காட்டியிருக்கிறது.

காட்டாங் குளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் முஸ்லீம் பெருமக்கள் நிறையப் பேர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர்.

பெரியபாளையம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் கிறித்துவ மதத்தைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்கள், அறுவைச் சிகிச்சைக்கு ஆட்களை அழைத்து வரும் பணியைச் சிறப்புறச் செய்துள்ளனர். அத்துடன் இப்பகுதியில் அதிக அளவில் கிறித்துவப் பெண்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள்.

பல்வேறு பட்ட பணியாளர்களிடையே ஒற்றுமையும், உண்மையான உழைப்பும், நியாயமான போட்டி மனப்பான்மையும் இருந்தால், எந்தச் செயலையும் சாதித்துக் காட்ட முடியும் என்பதற்கு, இந்த முனைப்பு இயக்கத்தின் வெற்றி ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### ஊர் பிறந்த காரணம்

**சென்னையில் இருக்கும் அடையாறு, செங்கற்பட்டு ஏரியிலிருந்து தொடங்கிச் சென்னையின் வழியாக வந்து கடலில் கலக்கின்றது. அந்த ஆற்றின் பெயர்தான் இன்று அடையாறாகக் காட்சியளிக்கிறது. செங்கற்பட்டு வட்டத்தில் பண்டைக் காலத்தில் பாலையூர் என்றிருந்த ஊர் இன்று பாலூராக விளங்குகிறது.**



# மின்வெட்டைத் தவிர்க்கும் எண்ணூர் அனல் மின்நிலையம்



"தமிழ்நாட்டுத் தொழிற்சாலைகளிலும், வயல்களிலும் வேலை தடைபடாதிருக்க உறுதி அளிப்பது அனல், அணு மின்சாரமே. வேலை தடைபடுதல், சமூகத்தில் உடல் மிக வருந்தி உழைத்தும் ஏழையராய் உள்ள மக்களையே பாதிப்பதால் செலவைப் பொருட்படுத்தாது, இயன்ற அளவு நீர் மின்சாரமல்லாத வகைகளில் மின்சாரம் உற்பத்தி செய்வதையே தனது புனிதமான கடமையென்று தமிழ்நாடு அரசு எண்ணுகிறது. இந்த எண்ணத்தின் செயல் வடிவே எண்ணூர் அனல் மின் நிலையம்.'' இவ்வாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் எண்ணூர் அனல் மின் நிலையத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலும் நீர் மின்சாரத் திட்டங்கள் தான் துவக்கப்பட்டன. அதனால் மழை இல்லாத காலங்களில் தன்னிறைவு பெறும் அளவுக்கு மின்சாரம் உற்பத்தி செய்ய இயலவில்லை. அத்துடன் மேட்டூர், பாபநாசம், பெரியாறு மின் நிலையங்கள் பாசனத் திட்டங்களுடன் இணைக்கப்பெற்றிருப்பதால், கோடை காலங்களில் அந் நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மின் சக்தி மிகமிகக் குறைவாகவே இருந்தது. அதனால் கடந்தகாலங்களில் கோடை காலத்தில் மின் வெட்டு' (Power Cut) என்பது ஒரு வாடிக்கையான நிகழ்ச்சியாகவே இருந்து வந்தது. மின்வெட்டுக் காலங்களில் பாசனம் செய்ய முடியாமல் உழவர்கள் பட்ட தொல்லைகளும், தொழிற்சாலைகளில் ஏற்பட்ட இன்னல்களும் சொல்லவொண்ணாததாக இருந்தன. கோடை காலத்தில் ஏற்படும் மின் வெட்டினைத் தவிர்த்து, 'உழவர்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும், இதுவரை ஏற்பட்டு வந்த இழப்பு இனி இல்லை' என்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகவே, தமிழ்நாட்டில் அனல் மின் நிலையங்களைத் துவக்கிடத் தமிழ்நாடு அரசு பெருமுயற்சி எடுத்துக் கொண்டது. அந்த முயற்சியில் முகிழ்த்த வெற்றியே எண்ணூர் அனல் மின் நிலையம்.

இந்தியா, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய இரு நாடுகளின் நட்புறவுச் சின்னமாக எண்ணூர் அனல் மின்நிலையம் திகழ்கிறது. தமிழ்நாட்டின் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கும், விரைந்த தொழில் வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்புப் பெருக்கத்திற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் வழி காட்டும் முன்னோடியாக எண்ணூர் அனல் மின் நிலையம் விளங்குகிறது.

தமிழ்நாடு மின் வாரியத்தின் பெரிய திட்டமான எண்ணூர் அனல் மின் நிலையத்தின் முதல் இரு 60 மெகாவாட் மின்சார உற்பத்தி இயந்திரங்களும், 27—4—1971 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டன. ஒவ்வொன்றும் 110 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய இயந்திரங்கள் இரண்டு, விரைவில் துவக்கப்படவிருக்கின்றன. அந்த நிலையில் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் முதற்கட்ட வேலை முடிவு பெறும். 1972-ஆம் ஆண்டு இறுதிக்குள் முதற்கட்டப் பணி முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எண்ணூர் அனல் மின் நிலையத்தின் முதற்கட்ட வேலை முடிந்தவுடன் அங்கு மொத்தம் 340 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகும். அப்பொழுது தமிழ்நாட்டின் மொத்த மின்சார உற்பத்தித் திறன் (நெய்வேலியின் 600 மெகாவாட் நீங்கலாக) 1,695 மெகாவாட் ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதற்கட்டப் பணிக்கு 58 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்டமாக 16·58 கோடி மதிப்பீட்டுச் செலவில் 110 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய ஐந்தாவது இயந்திரம் அமைக்கப்படும்.

சென்னையிலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எண்ணூரில், கடற்கரை ஓரமாக அமைந்துள்ள அனல் மின் நிலையம் தென்னகத்தில் உள்ள பெரிய அனல் மின்நிலையங்களில் ஒன்றாகவும், இந்தியாவிலுள்ள முக்கிய நிலையங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. இந்த மின் நிலையம் 1,000 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

எண்ணூர் அனல் மின்நிலையத்திற்கு வேண்டிய இயந்திரங்கள், இதர சாதனங்களில் சுமார் 30 சதம் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டதாகும். இந்த அனல் மின் நிலையத்தில் உள்ள கொதிகலனும் ( Boilers ), டர்பைனும் ( Turbine ) நம் நாட்டில் தயாரிக்கப்பட்டவை என்பது பெருமைக்குரிய செய்தியாகும். மணிக்கு 260 டன் என்ற அளவுடைய 2 கொதிகலன்களைத் திருச்சியில் உள்ள 'பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ்' வழங்கியுள்ளது. ஹைதராபாத்திலுள்ள 'பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ்' 2×60 மெகாவாட் நீராவி உருளையை வழங்கியுள்ளது. மின் அழுத்த மாற்றிகளை (Step up transformers) போபால் 'ஹெவி எலக்டிரிகல்ஸ்

வழங்கியுள்ளது. இதுபோல் பல்வேறு சாதனங்களை இந்திய நிறுவனங்களே வழங்கியுள்ளன என்பது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும்.

அனல் மின்நிலையத்தின் 5 மின் உற்பத்தி இயந்திரங்களுக்கும், நாள் ஒன்றுக்கு 10,00,000 காலன் தண்ணீர் தேவைப்படுகிறது. இத் தண்ணீர், பொதுப் பணித்துறையின் நில நீர்க் குழுவினால் மீஞ்சூரில் தோண்டப்பட்டுள்ள குழாய்க் கிணறுகளிலிருந்து கொண்டுவரப்படும்.

மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரி ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத் தொகுதியைச் சார்ந்த கொத்தகூடம், பேலம் பள்ளி நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து பெறப்படுகிறது. 90 நாட்களுக்குத் தேவையான 4,50,000 டன் நிலக்கரியை, இங்குள்ள நிலக்கரிச் சேமிப்புக் கூடத்தில் சேமித்து வைக்க முடியும்.

நிலக்கரி பயன்படுத்தப்படும் நிலையத்தில் ரப்பர் பெல்ட்டினாலான இரு 'கன்வேயர்கள்' உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு மணி நேரத்தில் 350 டன் நிலக்கரியைக் கொண்டு செல்லக் கூடியதாகும். வாகனிலிருந்து இயந்திரம் மூலமாகவே எடை போட்டு இறக்கப்பட்ட நிலக்கரியானது ரப்பர் பெல்ட்டு மூலம் கொண்டு செல்லப்படுகிறது. அந்த நிலக்கரி சலிக்கப்பட்டுத் தும்புதூசு நீக்கப்பட்ட பின்பு, பொடியாக்கப்படும் நிலையத்திற்குச் செல்கிறது. அவ்வாறு செல்லும் போதே, ஒவ்வொரு ரப்பர் பெல்ட்டின் மேலும் அமைக்கப்பட்டுள்ள இணை மின்காந்தம் பிரிப்பான்கள் (Electro magnetic separators) நிலக்கரியில் உள்ள இரும்புத் துகள்களைப் பிரித்தெடுக்கின்றன. நிலக்கரியைப் பொடி செய்யும் நிலையத்தில் இடித்துப் பொடியாக்கும் 2 இயந்திரங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒரு மணியில் 150 மில்லி மீட்டர் அளவுள்ள 300 டன் நிலக்கரியை 10 மில்லி மீட்டர் அளவிற்கு உடைத்துப் பொடியாக்கும் திறன் உள்ளவை. தூளாக்கப்பட்ட நிலக்கரி இறுதியில் நகரும் பட்டைகளின் மூலமாகக் கொதிகலன் அறையை அடைகிறது.

திருச்சி 'பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ்' வழங்கிய 2 கொதிகலன்களும் அமைக்கப்பட்டு விட்டன. செக்கோஸ்லோவாக்கியா நாட்டின் 'ஸ்கோடா எக்ஸ்போர்ட்' நிறுவனம் வழங்கியுள்ள மணிக்கு 370 டன் என்ற அளவுடைய 2 கொதிகலன்களும் நிறுவப்பட்டு வருகின்றன.

எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 80 மீட்டர் உயரமுடைய இரு புகைப் போக்கிகள் உள்ளன. இவை வலுப்படுத்தப்பட்ட கான்கிரிட் கூடுகளால் ஆனவை. அவைகளின் உட்புறத்தில் 115 மில்லி மீட்டர் கனத்திற்குச் செங்கல் கட்டுமானம் உள்ளது.

எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு ஹைதராபாத் 'பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ்' கொடுத்துள்ள 2×60 மெகாவாட் டர்பைன் இரு சிலிண்டர் கொண்டது. இவை செக்கோஸ்லோவாக்கியா நாட்டுத் தரங்களுக்கு ஒப்ப, தட்ப-வெப்ப நிலைக்கேற்ற முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

செக்கோஸ்லோவாக்கியாவைச் சேர்ந்த 'ஸ்கோடா எக்ஸ்போர்ட்' நிறுவனத்தார் வழங்கியுள்ள 2×110 மெகாவாட் டர்பைன் மூன்று சிலிண்டர் அமைப்புக் கொண்டது. இவைகள் தற்போது நிறுவப்பட்டு வருகின்றன.

டர்பைன் இயந்திரத்தின் கண்டன்சர்களை குளிரச் செய்வதற்குத் தேவைப்படும் குளிர் நீர், குடத்தலையாறு கடலில் கலக்குமிடத்தில் உள்ள உப்பங் கழிகளிலிருந்து எடுக்கப்படுகிறது.

மின் உற்பத்திச் சாதனங்களுக்கும், நிலக்கரித்தூள் அறைகளுக்கும், நிலையான, தானே இயங்கும் கரியமிலவாயு முறையினால் தீயிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்படுகின்றன. மற்றப் பகுதிகளிலும் தீத்தடுப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

கொதிகலனிலிருந்து உற்பத்தியாகி வரும் நீராவி, டர்பைனில் உள்ள சக்கரங்களைச் சுற்றச் செய்கிறது. அதனால் டர்பைனுடன் இணைக்கப்பட்டுள்ள மின் உற்பத்திச் சாதனம் நேரடியாக இயங்குகிறது. இதனால் மின்சாரம் உற்பத்தியாகிறது.

இவ்வாறு உற்பத்தியாகும் அனல் மின்சக்தி கோடை காலத்தில் ஏற்படும் மின் வெட்டைத் தவிர்க்க உதவுகிறது.

அமைப்பு முறையிலும், கருவிகளை இயக்குவதிலும், தொழில் நுட்பங்களிலும் நவீன முறைகளைப் பெற்றுள்ள எண்ணூர் அனல் மின் நிலையம், நாலரைக் கோடித் தமிழ்மக்களின் வாழ்வை வளமாக்கத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும் புனிதப் பணியின் ஒருகட்டமாகத் திகழ்கிறது.

## மறுவாழ்வு பெற்றது மதுராந்தகம் ஏரி

மழையின்மையின் காரணமாக வரலாறு காணாத வகையில் செங்கற்பட்டு மாவட்டம் வறட்சியின் பிடியில் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சிக்கியது. குடி நீருக்குப் பஞ்சம்—பயிர் வளர்ச்சிக்குப் பாதகம்—கால் நடைகளுக்குத் தீனிப் பற்றுக் குறை—ஏழை மக்கள் வேலை இழந்த நிலை—இவ்வளவும் ஏற்பட்டது.

குடி மக்கள் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட தமிழக அரசு, வறட்சி நீக்கும் பணியில் ஈடுபட்டது. மதுராந்தகம் ஏரியைத் தூர் எடுத்தது. நீர்ப் பஞ்சத்தை ஒழித்தது. துயர் தணிப்புப் பணிக்காக ரூபாய் 14 கோடிக்கு மேலாக மத்திய அரசிடம் கேட்டுப் பெற்றது.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாரைத் தமிழகத்துக்கு வரவழைத்து, துயர் தணிப்புப் பணிகளைப் பார்வையிடச் செய்தது. இந்தத் திட்டத்தினால், செங்கை மாவட்டத்தில் 5456 கிணறுகள் தோண்டப்பட்டன. 2635 ஏரிகளும் நீர்நிலைகளும் ஆழப் படுத்தப்பட்டன.

# மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!



சின்னஞ்சிறிய கைகள் கண்ணைக் கவரும் வண்ணப் பொருள்களை உருவாக்கும் திறனைக் கண்டு நம்மால் வியக்காமலிருக்க முடியவில்லை. களிமண்ணைக் கொண்டு கலையழகு மிளிரும் பொருள்கள் செய்யும் நிலையம் திருவள்ளூர் வட்டம் செவ்வாப் பேட்டையில் இருக்கிறது.

கிராமிய மண்பாண்டத் தொழிலைப் பரவலாக்கவும், பல நவீன முறை இயந்திரச் சாதனங்களைக் கொண்டு இத் தொழிலை வளரச் செய்யவும், கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு, சில மண்டல மண்பாண்டத் தொழில் பயிற்சி நிலையங்களை நிறுவி, கிராமிய மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு விஞ்ஞான முறையில் பயிற்சி அளித்து வருகிறது. இத்தகைய பயிற்சியால், பயிற்சி பெற்றவர்களின் வாழ்க்கைத் தரம் உயர வழி வகை செய்கிறது. அத்துடன் பொதுமக்கள் விரும்பும்படியான, தரமான கவர்ச்சியான பாண்டங்கள் செய்யப்படுகிறது. இந்தியாவில் தற்பொழுது மொத்தம் 5 பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவை : 1. மீரட் (உத்தரப் பிரதேசம்) 2. சர்மோகன் (பீகார்), 3. பத்ராவதி (மராட்டியம்), 4. குண்டி (குஜராத்), 5. செவ்வாப்பேட்டை (திருவள்ளூர் வட்டம்).

இந்தப் பயிற்சி நிலையம் முன்பு கேரள மாநிலத்தில் '' முச்சுக் குன்னு '' என்னுமிடத்தில் இயங்கி வந்தது. பின்பு இதைத் தமிழ்நாடு வாரியத்திற்கு மாற்றி, 1963 முதல் சென்னைக்கு மிக அருகாமையிலுள்ள செவ்வாப்பேட்டையில் நிறுவப்பட்டுப் பயிற்சி நடைபெற்று வருகிறது.

திறமைமிக்க தொழில் நுட்ப வல்லுநர்களையும், கலைஞர்களையும், ஆசிரியர்களாகக் கொண்டு இது நடத்தப்பட்டு வருகிறது. இந்நிலையத்தில், தமிழ்நாடு, கேரளம், புதுவை, மைசூர், ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலிருந்தும் மாணவர்கள் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்நிலையத்தில் பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு உதவித் தொகையாக ரூ. 75 அளிக்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு 75 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க, கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு நிதி வழங்கி வருகிறது. ஓராண்டுப் பயிற்சி வகுப்பு ஒன்றும், 6 மாதப் பயிற்சி வகுப்பு 2-ம் ஆக மொத்தம் 3 பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு ஆண்டும் நடை பெறுகின்றன.

கிராமப்புறங்களிலும், மண்பாண்டக் கூட்டுறவுகளிலும் விஞ்ஞான முறையில் இத் தொழிலை வளர்க்கவும், பயிற்சிக்குப் பின் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு மண்பாண்டக் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகப் பெரிய தொழிற்கூடங்களை அமைத்து, மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு நவீன முறையில் பயிற்சியளிப்பதுடன், அவர்கள் நவீன முறையைக் கையாள்வதால், அவர்களின் பொருளாதாரம் உயரும் வண்ணம் செய்ய வேண்டுமென்பதே பயிற்சியின் சீரிய நோக்கமாகும்.

இந்த நிலையத்தில் சாதாரண மண்பாண்டங்களை நவீன முறையில் உருவாக்குவதற்கும், மக்கள் இதை விரும்பி வாங்கும் வகையில் புதுமைகளைப் புகுத்தியும் பாண்டங்கள் செய்யப்படுகின்றன. அரக்கு மெருகு பூசுதல், மெருகு (ரசாயன) தீட்டுதல், சித்திரம் வரைதல், காய்கறிகள், பழங்கள் முதலியன சில நாட்கள் வரை கெட்டுப் போகாமலிருக்க, நடுத்தர மக்களின் தேவைக்கேற்ப மலிவான விலையில் ''குளிர் சாதனப் பேழைகள்'' செய்தல், புகையற்ற அடுப்புகள், பழுப்பு நிலக்கரி அடுப்புகள், மண்குழாய்கள், சிறப்பு ஓடுகள், மங்களூர் மாதிரி ஓடுகள், கூரை ஓடுகள், தளக்கற்கள், செங்கற்கள்



உறுதி வாய்ந்த வெண்களிமண் பொருட்கள், முதலியன செய்வதற்குப் புதுமையான முறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பெரும்பான்மையினர், மண் பாண்டத் தொழிற் கூட்டுறவுகள் மூலம் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுப் பயிற்சி முடிந்து அந்தந்தச் சங்கங்களில் பணிபுரிகிறார்கள். மற்றவர்கள், தனியார் துறையிலும் அரசு அலகுகளிலும், பயிற்சி நிலையங்களிலும் பணிபுரிகிறார்கள். இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களுக்குத் தனியார் துறையில் நல்ல மதிப்பு இருக்கிறது. இதுவரை மொத்தம் 384 பேர்கள் இங்குப் பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளார்கள். ஆந்திரம், கேரளம், மைசூர், புதுவை, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலிருந்து பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

இப்பயிற்சி நிலையம் சென்னை மாவட்டக் கதர் கிராமத் தொழில் அலுவலரின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது. இங்கேயே மெருகு மண்பாண்டத் தொழில் நிலையமும் ஒரு பகுதியாக இயங்கி வருகிறது.

இது 1964–65-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. ஆரம்பத்தில் இதே தொழில் நிலையம் கிராமிய தொழிற்கலைப் பிரிவில் அமைக்கப்பட்டது. திருவள்ளூர் வட்டார வளர்ச்சி சமுதாய நலத்திட்டத்திற்கு எடுத்துக்காட்டாக, பயிற்சியுடன் கூடிய தொழில் நிலையமாக 1958-ஆம் ஆண்டு துவக்கப்பட்டுப் பின்னர் 1964–65-ஆம் ஆண்டில் இந்த நிலையம் முழு உற்பத்தி நிலையமாக மாற்றப்பட்டது. அது முதல், தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் துறையின் நேரடி நிருவாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. ஏப்ரல் 1971 முதல் ஜனவரி 1972 முடிய மண்பாண்டங்களின் உற்பத்தி ரூ. 28,449·01. இதில் விற்பனை ஆகி இருப்பவை ரூ. 20,410·97.

இங்கு வெள்ளைக் களி மண்ணாலும், சாதாரண களி மண்ணாலும் ஜாடிகள், பொம்மைகள், பெரிய குழாய்கள், பூவேலைப்பாடுள்ள பாண்டங்கள் முதலியன செய்கிறார்கள். இங்கு உற்பத்தியாகும் வெப்பம் தாங்கும் செங்கல், உலோக அடுப்புகளுக்கும், உருக்காலை, இரயில் என்சின் அடுப்புகளுக்கும் உபயோகமாகிறது. வெள்ளைக் களிமண், பண்ணுருட்டியிலிருந்தும், சாதாரணக் களிமண் திருப்பெரும்புதூரிலிருந்தும் கிடைக்கின்றன.

இங்குச் செய்யப்படும் பொருள்கள் குறளகம், மற்றும் தமிழ்நாடு முழுவதுமுள்ள விற்பனை நிலையங்களில் விற்பனையாகின்றன. அழகிய நவீன மண்பாண்டப் பொருள்களுக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது இந்நிலையம்.

---

புதிய
கிராமியத்
தொடர்கதை

எழுதும்



# செங்கையில் வளரும் தொழில் வளம் பாரீர்



தமிழகத்தில் தொழில்கள் வியக்கத்தக்க விதத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகின்ற இம்முன்னேற்றம் மிக மிகச் சிறந்த முறையில் அமைந்துள்ளது. பொதுவாகக் கூறுமிடத்து 1960-ல் தமிழ் நாட்டிலுள்ள பதிவு பெற்ற சிறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 3,000-க்கும் குறைவாக இருந்தது. ஆனால், 1970-ஆம் ஆண்டில் அது இருபத்திரண்டாயிரத்துக்கும் அதிகமாக உள்ளது. இந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் மதிப்பு ஆண்டொன்றுக்கு ரூ. 5 கோடியாகும்.

ஏறத்தாழ ஒரு இலட்சம் நபர்கள் இவற்றில் பணியாற்றி வருகின்றனர். இம் முன்னேற்றத்திற்கு மூல காரணம், தமிழ் நாடு தொழில் வணிகத் துறையும், தமிழக அரசும் அளித்து வரும் ஊக்கமும், உதவியுமேயாகும் என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

தமிழகத்தின் சிறு தொழில் வளர்ச்சியில் மாநிலத் தொழில், வணிகத் துறையானது பெரும் பங்கு வகிக்கிறது. தொழில் நிறுவனங்களின் விரைவான வளர்ச்சிக்கு அரும்பாடு படுவது இத்துறையேயாகும்.

சிறு தொழில்களைத் துவக்கவோ அல்லது பெருக்கவோ நிதி தேவைப்படுகிறது. தொழில் வணிகத் துறையானது மாநிலத் தொழில் உதவிச் சட்டத்தின்கீழ் சிறு தொழில்கட்கு நிதியுதவி அளிக்கிறது. தொழிற் கூடம் கட்ட நிலம் வாங்குவதற்கும், தொழிற்கூடக் கட்டடங்கள் கட்டுவதற்கும் இயந்திரச் சாதனங்கள் வாங்குவதற்கும், சிறு தொழில் அதிபர்கள் தொழிற்கூடச் சம்பந்தமாக ஏற்கெனவே பெற்றுள்ள கடன்களைத் தீர்ப்பதற்கும், மற்றும் நடைமுறை மூலதனத்திற்கும் இச்சட்டத்தின் அடிப்படையில் கடனுதவி வழங்கப்படுகிறது. தகுதி வாய்ந்த சிறு தொழில்கட்கு அதிலும் புதிதாகத் துவக்கப்படும் சிறு தொழில்கட்குத்தான் மூலதனக் கடன் வழங்கப்படுகிகிறது.

மாநிலத் தொழில் உதவிச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடனுக்குத் தகுந்த அளவு ஈடு கொடுக்க வேண்டும். நிலம், கட்டடம் மற்றும் இயந்திரச் சாதனங்கள் போன்ற சங்கம சொத்துக்களையும், தாவர சொத்துக்களையும், கடன் பெறும் நபர் ஈடு காட்டலாம். பொதுவாக ஈடு கொடுக்கப்படும் சொத்தின் மதிப்பில் அதிகபட்சம் 75 சத விகிதம் கடன் உதவியாக வழங்கப்படும். இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் அதிகபட்ச கடன் தொகையின் அளவு ரூ. 2 இலட்சமாகும். ரூ. 50,000 வரை உள்ள கடனுக்கு ஆண்டொன்றுக்கு 7·5 சத விகிதம் வட்டியும் ரூ. 50,000–க்கு மேற்பட்டு ரூ. 2,00,000 வரையுள்ள கடனுக்கு 7·75 சத விகித வட்டியும் விதிக்கப்படும். பெற்றுக் கொண்ட கடன் தொகையினை, ஆண்டுச் சம தவணைகளில் 10 ஆண்டுக் கால முடிவிற்குள் திருப்பிச் செலுத்திவிடவேண்டும்.

சொந்தமாகத் தொழிற்சாலைக் கட்டடத்தைக் கட்டித் தொழிலைத் துவக்க முடியாதவர்கட்குத் தொழில் துவக்குவதற்கு வேண்டிய இடவசதி கொடுப்பதற்காக அரசு தொழிற் பேட்டைகளை அமைத்துள்ளது. இத் தொழிற் பேட்டைகளில் தொழிற்சாலைக் கட்டடங்கள் சிறு தொழில் துவக்குவோருக்குக் குறைந்த வாடகைக்கு விடப்படுகிறது. இது போன்ற தொழிற் பேட்டைகள் தமிழ் நாட்டில் 23 உள்ளன. தனிப்பட்ட வசதிகள் தேவைப்படும் சில குறிப்பிட்ட தொழில்களைத் துவக்குவதற்காகத் தமிழக அரசு நான்கு தனித் தொழிற் பேட்டைகளை அமைத்துள்ளது.

இவையன்றியும், மாநிலத்தில் பெருரகத் தொழில்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய முன் வருகின்ற சிறு தொழில்கட்கென 2 தனித் தொழிற் பேட்டைகளையும் அரசு அமைத்துள்ளது. மேலும் தனியார் துறையில், இரண்டும், கூட்டுறவுத் துறையில் ஐந்துமாக மொத்தம் ஏழு தொழிற் பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிரத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கென செம்மை செய்த மனைகளையும் சுலபமான தவணைகளில் அரசு வழங்குகிறது.

தொழில்கட்குத் தேவையான எல்லாத் தொழிற் பணிகளையும் சொந்தத்தில்அமைத்துக்கொள்ள இயலாது. அந்தக் குறைபாடுகளையும் நிறை செய்ய வசதிகள் அரசு அமைத்துத்தருகிறது.

தொழில்கட்குத் தேவையான மூலப் பொருள்களை, மூலப் பொருள் கிடங்குகளின் மூலம், தொழிற்சாலைகட்கு வழங்கி வருகிறது.

சிறு ரகத் தொழில்கள் மாநிலத் தொழில் வணிகத் துறையில் பதிவு செய்யப்படுகின்றன. இப்படிப் பதிவு செய்து கொள்வதன் மூலம்தான் கட்டுப்பாட்டின் அடிப்படையிலுள்ள இரும்பு, எஃகுப் போன்ற மூலப் பொருள்கள், இறக்குமதி செய்யப்பட வேண்டிய இயந்திரச் சாதனங்கள் முதலானவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதன் மூலமாகத் தகுதி வாய்ந்த நபர்கட்குத் தொழிற் நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டு

தமிழகத்திலுள்ள பலவித தொழிற்சாலைகளில் பணியாற்றுவதற்கு வேண்டிய திறமையை அவர்களுக்கு அளிக்கிறது.

குறிப்பாக செங்கை மாவட்டத்தின் தொழில் வளர்ச்சி கடந்த 10 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முறையில் முன்னேற்றமடைந்துள்ளது. செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த அம்பத்தூரில் 117 தொழிற்கூடங்களைக் கொண்ட ஒரு தொழிற் பேட்டை மூன்றாவது திட்டக் காலத்தில் நிறுவப்பட்டு போற்றத் தக்க முறையில் செயல்பட்டு வருகின்றது. இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள முக்கியமான தொழிற் பேட்டைகளில் இதுவும் ஒன்றெனக் கூறினால் அது மிகையாகாது.

காஞ்சியில் உள்ள தொழிற் பேட்டையில் நான்கு தொழிற் சாலைகள் செயல்பட்டு வருகின்றன.

இவை தவிர, மாதவரத்தில் தோல் தொழிலுக்கென ஒரு தனித் தொழிற்பேட்டை செயல்பட்டு வருகின்றது. செங்கை மாவட்டத்தில் தோல் சம்பந்தப்பட்ட தொழில் வெகுவாக முன்னேறியுள்ளது என்பதற்கு இந்த மாதவரம் தனித்தொழிற் பேட்டை ஓர் எடுத்துக்காட்டாகும்.

மின் தொழில்களுக்கென்று காக்களூரில் ஒரு தொழிற் பேட்டை செயல்பட்டு வருகின்றது. இங்குத் தற்சமயம் 10 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. மேலும் அம்பத்தூரில் மருந்துகள், மருந்துக் கலவைப் பொருள் தொழில் கட்கென ஒரு தனித் தொழிற் பேட்டையும் நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

திருவொற்றியூரில் தனியார் தொழிற் பேட்டை ஒன்றும் இயங்கி வருகிறது. இதற்கு 13.46 இலட்ச ரூபாய் கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது.

அம்பத்தூரில் 1,005 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தைக் கையகப்படுத்தத் திட்டமிட்டு, இது வரை 983 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்திச் செப்பனிட்டு அதில் 343·50 ஏக்கர் நிலத்தைத் தொழில் அதிபர்கட்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மணலி, கத்திவாக்கம் மற்றும் காஞ்சி ஆகிய இடங்களில், நான்காம் திட்டக் காலத்தில் செம்மை செய்யப்பட்ட மனைகளைக் கொண்ட தொழிற் பேட்டைகள் நிறுவப்படும்.

### ஊர் பிறந்த காரணம்

செங்கற்பட்டு என்ற பெயர் எப்படி வந்தது? பற்று என்பது நன்செய் நிலமாகும். இதனைப் பத்து எனவும், பட்டு எனவும் வழங்குவார்கள். இங்கு முன்பு நீர் நிலைகளில் செங்கழு நீர்ப் பூக்கள் நிறைந்திருக்குமாம். அதுவே மருவிச் செங்கற்பட்டு ஆயிற்று.

திருவள்ளூரிலும் 393 ஏக்கர் பரப்புள்ள நிலத்தைக் கையகப் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

திருமழிசையில், இயந்திர ரீதியில் செங்கல் தயாரிப்பதற்கென 1968-ஆம் ஆண்டு ஒரு செங்கல் தொழிற்சாலையை மாநிலத் தொழிற் வணிகத்துறை ஆரம்பித்துவைத்தது. யூகோஸ்லாவியா நாட்டிலிருந்து இந்தச் செங்கல் தொழிற்சாலைக்கு வேண்டிய இயந்திரச் சாதனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இதற்கான மொத்த மூலதனம் ரூபாய் 70 இலட்சமாகும். தற்சமயம் நாளொன்றுக்கு 40,000 செங்கல் உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழக அரசின் சிறு தொழில் நிறுவனத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகள் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளன. இவற்றின் நிறுவனத்திற்கெனச் செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 50·89 இலட்சமாகும்.

### சிற்றூர் செழிக்கிறது

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஊத்துக்கோட்டையில் காகித, பாலித்தீன் உறைகள் செய்யும் சிறு தொழில் நன்கு வளர்ந்து வருகிறது. வெங்கல் கிராமத்தில் கூட்டுறவு நீர் ஏற்ற நீர்ப்பாசனச் சங்கத்தின் மூலம், 79·43 ஏக்கருக்குப் பாசன வசதி தரும் குழாய்க்கிணறு பணி முடியுந் தறுவாயில் இருக்கிறது. இதன் மதிப்பு ரூ. 17,000.

இது தவிர தொழில் வணிகத் துறையானது, செங்கை மாவட்டத்தில் 5 கைத்தறித் தொழில் நிலையங்களையும் நடத்திவருகிறது. இவற்றின் நிறுவனச் செலவு சுமார் ரூபாய் 3·89 இலட்சமாகும்.

செங்கை மாவட்டத்தில் 25 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும் சிறு தொழில்கள் துரித வளர்ச்சி பெறத் தமிழக அரசு, மாவட்டந் தோறும் தொழில் வளர்ச்சிக் குழு அமைத்துத் தக்க நடவடிக்கைக்காக ஏற்பாடு செய்துள்ளது. அக்குழுவிற்கு மாவட்ட ஆட்சியர் தலைவராகவும், தொழில் வணிகத் துணை இயக்குநர் செயலாளராகவும் பணிபுரிகின்றனர். இக்குழு மாதந்தோறும் சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு இடையூறுகள் இருப்பின் அவைகளைக் களைந்து, தொழில்கள் வளர ஆவன செய்து வருகிறது.

மேற் சொன்ன வழிகளில் சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் மாநிலத் தொழில் வணிகத் துறையானது தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. எனவே, அம்முயற்சிகளைத் தொழில் அதிபர்கள் நன்கு பயன்படுத்தித் தொழில் முன்னேற்றத்தை மேன்மேலும் பெருக்க வேண்டும் என்பதே தமிழக அரசுத் தொழில் வணிகத் துறையின் நோக்கமாகும்.

தமிழக அரசு மேற்கொண்டுள்ள நல்ல பயன்தரும் நோக்கங்களையும் வகுக்கும் திட்டங்களையும், திட்ட அளவிலேயே நிறுத்தப்பட்டுவிடாமல் செயல்படுத்தி, முன்னேற்றப் பாதையில் நடைகொண்டு மேலும் என்ன வளர்ச்சியிருக்க முடியும் என்ற கேள்விக்கு விடை காணாத அளவு முன்நிற்க நமது தொழில் அதிபர்கள் பெருமளவு பங்கு கொள்ள வேண்டும். அரசின் திட்டங்களைத் தனிப்பட்டவரின் நலனுக்கு மட்டும் பயன்படுத்த எண்ணாமல், நாம் வளர்ச்சி பெறுதலன்றி நமது நாடும், நாட்டு மக்களும் நலம் நாட வளம் பெற வேண்டும் என்ற பொது நோக்குடன் பாடுபட வேண்டும்.

# நவீன அரிசி ஆலை



செங்கற்பட்டு மாவட்டத்தில் மிகப்பெரிய நவீன அரிசி ஆலை ஒன்று இருக்கிறது. தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம் நடத்தும் இந்த ஆலைக்குத் தமிழக அரசு ரூ. 10·37 இலட்சம் கடனுதவி அளித்திருக்கிறது. ஆறு ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த ஆலையின் மொத்த மதிப்பு ரூ. 12·77 இலட்சம்.

ஒரு மணி நேரத்தில் நெல்லிலிருந்து இரண்டு டன் அரிசியைத் தயார் செய்து விடுகிறது, இந்த ஆலை. எங்குப் பார்த்தாலும் இயந்திர மயமாகக் காட்சியளிக்கும் இந்த ஆலையில் பெரிய நான்கு கிடங்குகள் உள்ளன. நெல்லை ஒரு இயந்திரத்தினுள் கொட்டினால் அங்கு நெல் சுத்தமாக்கப்பட்டு, 'கன்வேயர்' மூலம் வெப்ப நீருள்ள பெரிய தொட்டியில் வேக வைக்கப்படுகிறது. 3— மணி நேரத்திற்குப் பிறகு வேகவைத்த நெல் நன்கு உலர வைக்கப்பட்டு, 150 டன் கொள்ளளவுள்ள பெரிய தொட்டியில் நெல்கள் சேர்த்து வைக்கப்படுகின்றன.

பிறகு நெல் அரிசியாக்க வேறொரு இயந்திரத்துக்குக் கொண்டு போகப்படுகிறது. அங்கு நெல்லிலுள்ள கல், மண், தூசு, பதர் போன்றவைகளை இயந்திரம் சுத்தம் செய்து விடுகிறது. வேறொரு கருவியில் நெல்லிலிருந்து மிகச் சுத்தமாக அரிசி வெளியே கொட்டுகிறது. உடையாத முழு அரிசியை இன்னொரு கருவி மெருகு தீட்டுகிறது; அதுவும் பதமாகத் தீட்டி நல்ல தரமான அரிசியைத் தயார் செய்கிறது. இங்குத் தயாராகும் அரிசி வைட்டமின் சத்து குறையாத வண்ணம் கவனிக்கப்படுகிறது.

அரிசியிலிருந்து நீக்கப்படும் தவிடு, தவிட்டெண்ணெய்க்கும், சோப் செய்வதற்கும் பயன்படுகிறது. மிகச் சுத்தமான தவிடு, பிஸ்கட் செய்யவும் உபயோகமாகிறது. உமி, விளைச்சலுக்கு நல்ல உரமாகும்.

ஒரு நாளைக்கு 40 டன் அரிசி இங்குத் தயாராகிறது. ஒரு மாதத்துக்கு 1,000 டன் அரிசி தயாராகிப் பல இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. சிறப்பங்காடிகள், மருத்துவக் கல்லூரிகள், பள்ளி மதிய உணவுத் திட்டம், கூட்டுறவு விற்பனை இடங்கள் முதலானவற்றுக்கு இங்குள்ள அரிசி வினியோகிக்கப்படுகின்றது.

உயர் ரக நெல்லிலிருந்து நல்ல தரமான சத்துள்ள அரிசியை இங்குத் தயார் செய்வதால், தமிழகம் முழுவதுக்கும் இதற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.

### ஊர் பிறந்த காரணம்

காஞ்சிபுரம்: ஆதியில் இதற்குப் பெயர் கச்சி, காஞ்சி. பிற்காலத்தில் புரம் என்பது காஞ்சியோடு சேர்ந்து காஞ்சிபுரமாயிற்று. தொண்டை நாடு பழங்காலத்தில் இருபத்து நான்கு கோட்டங்களாக இருந்தன. அவற்றுள் ஒன்று எயில் கோட்டம். அதில் காஞ்சி மாநகரும் இருந்ததால் அதனை எயிற்பதி என்றும் புலவர் கூறுவர். இங்கு ஆண்ட பல்லவ மன்னர் பெயரில் அமைந்த ஊர்கள் பல்லவபுரம் என்று அழைக்கப்பட்டன. அவை இன்று பல்லாவரம் என்று வழங்குகின்றது.




ஓடி ஆடி மகிழும் குழந்தைகளையெல்லாம் ஒருங்கே சேர்த்து, அவர்களுக்குப் பாலும், உணவும் கொடுத்து பசி நீக்கும் அரும் பணியை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் ஏற்றிருக்கிறது. இவற்றில் காஞ்சியிலுள்ள குழந்தைகள் காப்பகம் முன்னிலையில் நிற்கிறது. இங்கு 43 குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன. ரூ. 7,000 மதிப்பில் இங்கு 18 குழந்தைக் காப்பகங்களுக்கான சொந்தக் கட்டடங்கள் உள்ளன.

இதே போல, திருவள்ளூர், காட்டாங்கொளத்தூர் ஒன்றியங்களில் பத்தும், திருப்பெரும்புதூர், ஆர். கே. பேட்டை, பள்ளிப்பட்டு, பூண்டி, சோழவரம், மாதவரம், திருவாலங்காடு, அச்சிறுப்பாக்கம், லத்தூர், திருப்போரூர், எல்லாபுரம், கடம்பத்தூர், உத்திரமேரூர், மதுராந்தகம் ஆகிய ஒன்றியங்களில் ஒவ்வொரு குழந்தை காப்பகமும் இயங்கிவருகிறது. நிலையம் ஒன்றுக்கு நாள்தோறும் 40 குழந்தைகளுக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றன. இவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 500 மதிப்புள்ள சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# அண்ணா நினைவு

**கா**ஞ்சி மாநகரில் பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவாகப் புற்று நோய் நிலையம் ஒன்று சீரிய முறையில் இயங்கி வருகிறது. இது 1969-ம் ஆண்டு உலகச் சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தமிழக அரசினரால் துவக்கப்பட்டது. இதனைக் கட்டச் சுமார் ஐந்து இலட்ச ரூபாய் செலவானது.

இந்நிலையம் கட்டப்பட்டதன் நோக்கம், இந்தியாவில் அதிகமாகக் காணப்படும் புற்றுநோய்களான வாயில் வரும் புற்றுநோயையும், கருப்பையின் கழுத்துப் புறத்தில் வரும் புற்றுநோயையும் கண்டுபிடித்துச் சிகிச்சை செய்வது; இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்வதுமாகும்.

மேலும், நகரத்தில் நோய் இருக்கும் அளவை அளவிடுவதும், புற்று நோயைத் தடுத்துக், கட்டுப்படுத்துதல், கண்டுபிடித்தல் பற்றி மருத்துவ ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயிற்சி அளிப்பது போன்ற செயல் திட்டங்களில் இந்நிலையம் பணியாற்றி வருகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் உள்ள மக்கள் நலக்குழு உறுப்பினர்களின் பெரும் ஒத்துழைப்புடனும், திருமதி இராணி அண்ணாதுரை அவர்கள் தலைமையில் அமைந்துள்ள பெண்கள் நலக்குழு உறுப்பினர்கள் ஆதரவுடனும் நகரத்தில் பல வட்டங்களில் புற்றுநோய் விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

நகரிலுள்ள துவக்க, உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், நகராட்சி ஊழியர்கள் ஆகியோருக்கும் புற்றுநோய் பற்றிய விளக்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இதுவரை இந்நிலைய மருத்துவர்கள் காஞ்சியில் 6,469 பெண்களைப் பரிசோதனை செய்துள்ளார்கள். இவர்களில் 70 பெண்களுக்குக் கருப்பையின் வாய்ப்புறத்தில் புற்றுநோய் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. 41 பெண்கள் சிகிச்சை செய்து அனுப்பப்பட்டுள்ளனர்.

புற்றுநோயின் தீங்கை முன் கூட்டியே எடுத்துக் காட்டி, அது வந்தால் அதனை ஒழித்துக் கட்டுவதில் ஈடுபட்டு அரும் பணியாற்றி வருகிறது இவ்வாராய்ச்சி நிலையம்.

# ஆராய்ச்சி நிலையம்



# நிகரற்ற நெசவுத்தொழில்

நெய்தல் தொழில் தமிழகத்தில் தொல்புகழ்பெற்ற தொழில். தமிழ் நாட்டுப் பட்டுத் துணி கிரேக்கம், ரோமாபுரி போன்ற மேலை நாடுகளிலெல்லாம் புகழ்க் கொடி நாட்டியதாக வரலாற்று நூல்களில் காண்கிறோம்.

இன்றும் தமிழகத்தின் கைத்தறித் துணிகள், பட்டுகள் உலகெங்கினும் புகழ் பெற்றதாகவுள்ளன. அதனால்தான் இத்துறையின் வளர்ச்சியிலும், இத்தொழிலின் ஆணி வேராகவுள்ள தொழிலாளர்களின் நலனிலும், தமிழக அரசு தனிக்கவனமும், குன்றாத ஆர்வமும் காட்டி வருகிறது.

தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பணிகளுக்கு அரசு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகிறது.

1935-ம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த சங்கத்தின் அண்மைக் காலத்திய பணி பாராட்டுக் குரியது. 1966-67-ல் 414 லட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் விற்பனையாகி வந்தது. 1970-71-ல் 638 லட்சம் ரூபாய் ஆக உயர்ந்துள்ளது. 1972-73ம் ஆண்டில் விற்பனையை 10 கோடியாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக விற்பனையில் புதுமையான முறைகள் கையாளப்படுகின்றன. கண்கவர் வனப்பிலும், நெடுநாள் உழைப்பிலும் ஆலைத்துணிகளை மிஞ்சியதாக, சிறந்ததாக கைத்தறித் துணிகளை நெய்து, தனியார் கடைகளை விடக் கண்ணைக்கவரும் வண்ணம் விற்பனை நிலையங்களை அமைத்து விற்பனையை இன்று பன்மடங்கு உயர்த்தியுள்ளனர்.



மாம்பலம் கோ-ஆப்-டெகஸ் விற்பனையகத்தை முதல்வரின் துணைவியார் திருமதி தயாளு அம்மையார் அவர்கள் திறந்து வைக்கிறார்கள்.

இன்று பட்டு மற்றும் நூல் சேலைகளுக்கு மட்டுமல்ல; மெல்லிய கைத்தறி வேட்டிகளுக்கு மட்டுமல்ல; ஆடவர்-பெண்டிர் இருபாலரும் விரும்பும் பல வண்ணக் கைலிகள், இல்லத்தை எழில்படுத்தும் திரைச்சீலைகள், படுக்கை விரிப்புகள், நவநாகரிக இளைஞர்கள் அணியும் பல வண்ணச் சட்டைத் துணிகள் அனைத்தையும் வாங்கக் கூடிய சிறந்த இடமாகத் திகழ்கின்றன இந்தக்கூட்டுறவு அங்காடிகள்.

சென்ற ஆண்டு தீபாவளி திருநாளையொட்டி அறிமுகப் படுத்தப்பட்ட 'கிளாசிக்' என்ற தரத்தில் உயர்ந்த, விலையில் குறைந்த சட்டைகளுக்கு இன்று மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது.

விற்பனையில் முன்னேற்றங் காண, மக்களைக் கவரத் தக்க விதமாக இந்தக் கூட்டுறவு அங்காடிகள் புதுமைப் பொலிவுடன் திகழ்கின்றன. இதற்காக விற்பனை நிலையங்களைப் புதுப்பிக்கும் திட்டமும் உள்ளது. இவ்வாறு புதுமையான பாணியில் மாற்றியமைக்கப்படும் கடைகளில் விற்பனை பன்மடங்கு உயர்ந்துள்ளது. எடுத்துக் காட்டாகச் சென்ற 7-4-71 அன்று சென்னை தியாகராய நகரிலுள்ள கூட்டுறவு விற்பனை நிலையமும் இவ்வாறு புதுப் பாணியில் மாற்றி அமைக்கப்பட்டது. அதன் மூலம் விற்பனை பன்மடங்கு உயர்ந்ததை அடியிலுள்ள புள்ளி விவரங்கள் காட்டும்:—

1970-ல்

மே ரூ. 9,975.

ஆகஸ்டு ரூ. 10,321.

செப்டம்பர் ரூ. 10,744.

அக்டோபர் ரூ. 1,10,325.



மைலாப்பூரில் கோ-ஆப்-டெக்ஸ் விற்பனை நிலையத்தின் துவக்க விழாவின்போது தொழில் அமைச்சர் திரு. மாதவன் அவர்களின் துணைவியார் விளக்கேற்றி வைக்கிறார்கள்.

1971—ல்
மே ரூ. 31,626.
ஆகஸ்டு ரூ. 20,780.
செப்டம்பர் ரூ. 87,931.
அக்டோபர் ரூ. 3,47,777.

இது போன்று பல்வேறு விற்பனை நிலையங்களையும் புதுப்பாணியில் மாற்றி அமைக்கவும், நல்ல முறையில் விளம்பரப் படுத்தவும் கோ-ஆப்-டெக்ஸ் என்ற இந்தக் கூட்டுறவு நிறுவனம் நல்ல முயற்சிகளை எடுத்து வருகிறது.

உள்நாட்டில்மட்டிமின்றிவெளிநாட்டிலும் நமது துணிகளின் பண்டைப் புகழை மீண்டும் நிலை நிறுத்தப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் ஆரம்பக் கட்டமாக 20 ஆயிரம் ரூபாய்க்கு ஜப்பான் நாட்டுக்குச் சட்டைத் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்த ஆண்டு (1972) இதனை 50 லட்சம் ரூபாய்க்கு உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்று ''கோ-ஆப்-டெக்ஸ்'' என்றாலே நல்ல தரமான மலிவான துணிகள் என்ற நல்ல பெயர் மக்கள்மத்தியில் உள்ளது. இந்தத் தரமான-மலிவான துணியினை மக்களுக்கு வழங்கிட இலட்சோப இலட்சம் நெசவாளிகள் பின்னணியில் அல்லும் பகலும் பாடுபடுவதைத்தமிழ் மக்கள் மறந்துவிடக்கூடாது. அவர்கள் வாழ்வு மலர, புகழ் பரவ இந்தக் ''கோ ஆப்-டெக்ஸ்''-ன் வளர்ச்சியும் இன்றியமையாததாகும்.

1971-ம் ஆண்டு நடைபெற்ற கைத்தறி ஆடைப்போட்டியில் செல்வி சந்திரகலா சோமநாதன் பரிசு பெறுகிறார்.



## கண்ணைக் கவரும் கண்காட்சி

கண்ணைக் கவரும் கண்காட்சி என்று பொதுவாக விளம்பரப் படுத்தப்பட்டாலும் உண்மையிலே அனைவரது கண்ணையும், அதிலும் குறிப்பாக மகளிரின் கவனத்தைத் திருப்பும் கண்காட்சி வண்ணத்துப் பூச்சியின் எழில் பொங்கப் பலவண்ணப் பட்டாடைகள் அங்காடிகளை அலங்கரிக்கும் கைத்தறிப் பொருட்காட்சியாகும்.

ஆண்டுதோறும் தனிச் சிறப்புடன் சென்னை, எழும்பூர், பாந்தியன் சாலையிலுள்ள கோ-ஆப்-டெக்ஸ் பொருட்காட்சித் திடலில் நடைபெறும், இந்தப் பொருட்காட்சி இந்த ஆண்டு 2—4—1972 முதல் இரு வாரங்களுக்கு நடைபெற விருக்கின்றது. இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் துணிகளை விற்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 25 காசு கைக்குட்டை முதல் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பட்டாடைகள் வரை வகை வகையான சட்டைத்துணிகள், சாரங்கள், திரைச்சீலைகள், படுக்கை விரிப்புகள், நூல் மற்றும் பட்டுச் சேலைகள் ஆகியவற்றை இப்பொருட்காட்சியில் கண்டு மகிழலாம். வாங்கிப் பலன் பெறலாம்.

வழக்கம்போலப் பொருட்காட்சி நாட்களில், நாடகங்கள், நடனங்கள், இலக்கியச் சொற்பொழிவுகள் மகளிர் நாள், குழந்தைகள் நாள் ஆகியவை மிகச் சிறப்பாக இந்த ஆண்டும் நடைபெறும்.

(கைத்தறி இருவார விழாவினையொட்டித் தமிழரின் நெய்யும் திறத்தினைக் காட்டிடும் பட்டுச் சேலையையும், அதன் அழகில் மயங்கி நிற்கும் பாவையினையும் இந்த இதழ் அட்டையில் வெளியிடுவதில் பெருமையடைகிறது, தமிழரசு)

# முக்கியத் தொழில்களுக்கு முன்னோடி மாவட்டம்

முக்கியமான தொழில்களெல்லாம் ஒரு சேர இருப்பது செங்கற்பட்டு மாவட்டந்தான்! இவற்றில் தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய தொழிற்பேட்டை அமைந்திருப்பது அம்பத்தூர் தொழிற்பேட்டையாகும். இங்குப் பொதுவாக எல்லா விதமானதொழில்களும் உள்ளன. இதேபோல் இம்மாவட்டத்தில் காஞ்சிபுரத்திலும், திருவள்ளூரிலுள்ள காக்களூரிலும், அடையாறிலும், மாதவரத்திலும் தொழிற்பேட்டைகள் உள்ளன.

தமிழ்நாடு அரசு சிறுதொழில் வளர்ச்சிக்குப் பல உதவிகளைச் செய்துவருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு தொழில் ஆரம்பிக்க இருப்பவர்களுக்கும், சிறுதொழில் நடத்துபவர்களுக்கும் அரசு, கட்டடங்கள் கட்டவும், இயந்திரங்கள், கச்சாப் பொருள்கள்வாங்கவும்கடனுதவி அளித்து வருகிறது.

படித்துவிட்டு வேலை இல்லாமலிருக்கும் பொறியியல் இளைஞர்களுக்காக வானொலி சம்பந்தமான கார்பன் தொழிற்சாலை தொடங்க ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் இத்தொழில் தொடங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

சிறு தொழில்களுக்காக 123 தொழில்கள் ஒதுக்கப்பட்டுள்ளன, தமிழ்நாடு அரசு குறிப்பிட்ட தொழில்களுக்கு ரூ. 2 இலட்சம் வரை கடனுதவி அளிக்கிறது. சிறுதொழில் மேலும் மேலும் வளர மாவட்டந்தோறும் ஒரு குழுவை அமைத்துத்தொழிலுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகிறது அரசு.

பொருட்களைப் பரிசோதனை செய்து, அப்பொருட்களின் தரத்தை நிர்ணயித்துச் சான்றிதழ் வழங்க 'வட்டச் சோதனை நிலையம்' தொழில் வணிகத் துறையின் கீழ், செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்துடன் ஒரு நூலகமும் பயன்பட்டு வருகிறது. இங்கு இரசாயனம், பொறியியல் பொருட்களைச் சோதனை செய்து சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவை மட்டுமா?

தமிழ்நாட்டில் 'கிராமியச் சிறு தொழில் திட்டம்' ஒன்று உள்ளது. அது எவ்வாறு செயல்படுகிறது தெரியுமா?

இந்தியாவில் துவக்கப்பட்ட 49 கிராமத் தொழில் திட்டங்களில் செங்கை மாவட்ட அளவில் திருப்பெரும்புதூரில் அமைந்துள்ள கிராமத் தொழில் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப் பொருட்களையும் மனித சக்தியையும் பயன் படுத்தி விவசாயத்தின் அடிப்படையில் அமைந்த தொழில்களையும், வேறு பல சிறு தொழில்களையும் தொடங்கி வேலை வாய்ப்பினைப் பெருக்குவதேயாகும்.

திருப்பெரும்புதூர் கிராமத் தொழில் திட்டப் பகுதியில் திருப்பெரும்புதூர், திருவள்ளூர் ஆகிய இரண்டு வட்டங்கள் உள்ளன. கீழ்க்கண்ட ஏழு ஊராட்சி ஒன்றியங்கள் இப்பகுதியினுள் வருகின்றன. 1. திருப்பெரும்புதூர், 2. பூவிருந்தவல்லி 3. குன்றத்தூர் 4. திருவள்ளூர் 5. பூண்டி, 6. கடம்பத்தூர், 7. ஊத்துக்கோட்டை. இவற்றின் மொத்தப் பரப்பளவு 653.97 சதுர மைல்களாகும். மொத்த மக்கள் தொகை 5,06,141. இதில் 68.1 சதவீதம் உழவர்கள்.

திருப்பெரும்புதூரில் அமைந்துள்ள கிராமத் தொழில் திட்டத்தையொட்டிக் கீழ்க்கண்ட திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. 1. பயிற்சி நிலையங்கள், 2. பொது வசதி தொழில் நிலையம், 3. உற்பத்தி நிலையங்கள், 4. தொழிற் கடன் வசதிகள்.

இத்திட்டத்தின் கீழ் பல தரப்பட்ட 25 பயிற்சி நிலையங்கள் திறக்கப்பட்டு, உள்ளூர் ஆட்கள் பயிற்சி பெற வசதிகள் செய்து தரப்பட்டன. இதுவரை மொத்தம் 566 பேர் பயிற்சிபெற்றுள்ளனர். அதில் 218 பேர் பயிற்சி பெற்ற தொழில்களில் வேலை வாய்ப்பினை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

பாய் முடைதல், ஓலைக் கூடைகள் செய்தல், பழம் பக்குவப்படுத்தல், பொறியியல் நுட்பம், கால்வனைசிங் வெல்டிங், பாலிதீன் பைகள் செய்தல், மரவேலைப்பாடு, உல்லன் காலுறைகள் செய்தல், வானொலி பழுது பார்த்தல் முதலிய தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளனர். இவையன்றி ஒவ்வோர் ஆண்டும் 10 பேர் வீதம்



பொது நோக்குப் பொறியியல் தொழிலகம், செம்பரம்பாக்கம், திருப்பாச்சூர் முதலியவைகளில் பொறியியல் நுட்பப் பயிற்சி பெறுகின்றனர்.

கிராம மக்களுக்குத் தொண்டு செய்யும் பொருட்டுப் பொது வசதி தொழில் நிலையம் ஒன்று, திருவள்ளூரில் உள்ள ஈக்காடு கிராமத்தில் இயங்கி வருகிறது. இது கிராம மக்களுக்குத் தேவையான வேளாண்மைக் கருவி பழுது பார்த்தல், பம்பு மோட்டார் பழுது பார்த்தல் ஆகிய சிறந்த பணிகளை ஆற்றி வருகிறது.

இக்கிராமத் தொழில் திட்டத்தின் கீழ் நான்கு உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவை :—

1. பொது நோக்குப் பொறியியல் தொழிலகம், செம்பரம்பாக்கம், 2. பொது நோக்குப் பொறியியல் தொழிலகம், திருப்பாச்சூர், 3. காகித உறைகள், பாலிதீன் பைகள் செய்யும் உற்பத்தி நிலையம், ஊத்துக்கோட்டை, 4. காலணி நிலையம் மப்பேடு.

பொது நோக்குப் பொறியியல் தொழிலகம் செம்பரம்பாக்கம் திருப்பாச்சூர் ஆகிய இரு இடங்களிலும், வேளாண்மைக் கருவிகள், கோழிப் பராமரிப்புக்குத் தேவையான கருவிகள், இரும்புச் சாமான்கள், மேசை, நாற்காலி, உத்திரங்கள் முதலியன உற்பத்திச் செய்யப்படுகிறது.




இதில் மொத்தம் 29 பேர்வேலை செய்கின்றனர். ஊத்துக்கோட்டையில் அமைந்துள்ள காகித உறைகள், பாலிதீன் பைகள் செய்யும் நிலையத்தில் 5 பேர் பணியாற்றுகின்றனர். அவர்களால் செய்யப்படும் உறைகள் அரசு அலுவலகங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. மற்றும் மப்பேடு கிராமத்தில் நடக்கும்


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00
அரை ஆண்டு ரூ. 4.00
தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை - 2


காலணி நிலையத்தில் உற்பத்தியாகும் பாதணிகள் தொழில் வணிகத் துறையின் கீழ் அமைந்துள்ள விற்பனை நிலையம் வழியாக விற்கப்படுகின்றன.

திருப்பெரும்புதூர் கிராமத் தொழில் திட்டத்தின் கீழ் தனியார் துறையினர் சிறு தொழில்களைத் தொடங்கவும் வளரச் செய்யவும் ரூ. 1 இலட்சம் வரை கடன் வசதி ஆண்டொன்றுக்கு 3 சத வீத வட்டிக்கு அளிக்கப்படுகிறது.




இவ்வாறு தொழில் தொடங்கிய அதிபருக்குத் தேவையான பற்றுக் குறை உள்ள மூலப் பொருட்களைப் பெறவும் வசதிகள் செய்து தரப்படுகிறது.

1970-71-ஆம் ஆண்டுகளில் கிராமத் தொழில் திட்டத்தில் கீழ் மாநில வங்கி, திருப்பெரும்புதூர், திருவள்ளூர் வழியாக 84 யூனிட்டுகளுக்கு ரூ. 3,45,100 கடன் வசதி யளிக்கப்பட்டது. இதனால் வெல்டிங், வாள் பட்டரை, பிளாஸ்டிக் சாமான்கள் செய்தல், வார்னீஷ் செய்தல், ஊதுவத்தி செய்தல், சாயவேலை, சீயக்காய்த் தூள் செய்தல் ஆகிய பல புதிய கிராமத் தொழில்கள் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றன.

திருப்பெரும்புதூர் கிராமத் தொழில் திட்டப் பகுதியில் தொழிற்கூடங்களின் பற்றுக் குறையைத் தீர்க்க இரு தொழிற் பேட்டைகள் முறையே பூவிருந்தவல்லி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கட்டப்படவிருக்கின்றன. அதில் பூவிருந்தவல்லி தொழிற் பேட்டை ரூ. 2.18 இலட்சம் செலவில் கட்டப்பட்டு 8 யூனிட்டுக்கு விடப்படும். தொடக்க வேலையான அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது. கடம்பத்தூர் பகுதியில் தக்க இடம் பார்க்கப்படுகிறது. இத்தொழிற் பேட்டைகள் மென்மேலும் தொழில்கள் வளர வழி செய்யும் என்பது திண்ணம்.

சமுதாயத்தில் செம்பாதியாக விளங்குபவர்கள் மகளிர். வருங்காலத் தலைமுறையின் அரும்பாக விளங்குவோர் குழந்தைகள். மகளிர் நலமும் குழந்தைகள் நலமும் சிறந்து விளங்கினால் தான் சமுதாயம் முழுதும் மேன்மையடைந்ததாக ஆகும்; வருங்கால நல்வாழ்வும் உறுதிப்படும்.

இந்த நோக்கத்தில் தமிழகத்தில் மகளிர், குழந்தைகள் நலப் பணிகள் சீரான முறையில் நடைபெற்று வருகின்றன. சீரான முறையுடன் கூடிய முன்னேற்றத்திற்கு எடுத்துக் காட்டாகவும் இப்பணிகள் விளங்குகின்றன.

தமிழகத்தில் மகளிர் நலத் துறையின் கீழ் பெண்கள் நலத்தின் பொருட்டு 48 மகளிர் நலக் கிளைகள் செயல்பட்டு வருகின்றன. பயிற்சி பெற்ற மகளிர் நல அமைப்பாளர்கள் இவைகளை நடத்துகின்றனர். இரண்டரை முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இங்குக் காலை 9 முதல் 12 மணி வரை குழந்தைக் காப்பகம் நடத்தப்படுகிறது. சொற்களும் நல்ல பழக்கங்களும் கற்றுத் தரப்படுகின்றன. கல்வி, விளையாட்டுச் சாமான் போன்றவை வழங்கப்பட்டுள்ளன. உடல் நோய்த் தடுப்பு ஆகியவைகளிலும் கவனம்செலுத்தப்படுகிறது.

மேலும், மகளிர் நல அமைப்பாளர்கள், வீடுகளைப் பார்வையிட்டு, கல்வி, மருத்துவம் ஆகிய துறைகளில் அறிவுரை கூறல், நோயாளிகளை மருத்துவ மனையில் சேர்த்தல் எலும்புருக்கி நோய், தொழுநோய் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டவர்களைக் கண்டுபிடித்து, மருத்துவ மனையில் சேர்க்க நடவடிக்கை எடுத்தல் ஆகிய பணிகளைச் செய்கின்றனர். சத்துணவுச் சமையல் முறைகளையும் செய்து காட்டுகின்றனர்.

இவையன்றி, சிறு சேமிப்பின் அவசியம், குடும்பக்கட்டுப்பாடு, சத்துணவு ஆகியவற்றைப்பற்றியும் மக்களுக்குப் போதனைகள் செய்யப்படுகின்றன.

சில மகளிர் நலக் கிளைகள் நகராட்சிப் பகுதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு:

செங்கற்பட்டு மாவட்டம் திருபெரும்புதூர்க் கிளை, சென்னைப் பொது நல சேவா சங்கத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. பம்மல் கிளை, சென்னைப் பட்டினப் பாக்கத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறது. கூடுவாஞ்சேரிக் கிளை விரைவில் சென்னை வெங்கட புரத்துக்கு மாறும். திருச்சி மாவட்டம் கரூர் கிளை, ஸ்ரீரங்கத்துக்கும், சேலம் மாவட்டம் திருச்செங்கோடுக் கிளை, இடப்பாடிக்கும் மாற்றப்பட்டுள்ளன.

இரண்டரை முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கான திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 1962 முதல் 1970 வரை சுமார் 1,250 பள்ளிகளும் 1971-ல் 100 பள்ளிகளும் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேலும், 100 பள்ளிகள் துவக்குவதற்கான ஏற்பாடு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்தக் குழந்தைகளின் காப்பகங்கள் கிராமப்புறங்களிலேயே நடைபெறுவதால், உழவர் குடிமக்களும் ஏனைய பணிகளில் ஈடுபட்டிருப்போரும், தங்கள் குழந்தைகளை இந்தக் காப்பகங்களில் விடுத்து, கவலையின்றித் தம்தம் பணிகளில் ஈடுபடவும், வயதில் மூத்த குழந்தைகள், பள்ளி சென்று கல்வி கற்கவும் உறுதுணையாகின்றது. எட்டாம் வகுப்புப் படித்த உள்ளூர்ப் பெண்ணைப் பால சேவிகையாகக் கொண்டு நடத்தப்படும் இப் பள்ளிகள், குழந்தைகளுக்குப் பள்ளி செல்லும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், நற்பழக்கங்கள், பண்பு வளரவும், சுகாதார அறிவு வளரவும் மிகவும் உதவுகின்றன. தமிழகத்தின் இத் திட்டத்தினைப் பாராட்டும் வகையில் 'கேர்' நிறுவனத்தார் தற்போது இக் குழந்தைகள் காப்பங்களுக்குக் கட்டட உதவியும் 1,000 காப்பகங்களில் மதிய உணவு வசதியும் அளிக்க முன் வந்துள்ளனர்.




தமிழகத்தில் முதன் முதலாக ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டம் பூவிருந்தவல்லி வட்டாரத்தில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 50 பாலர் பள்ளிகளும், 10 குழந்தைகள் காப்பகங்களும் இயங்கி வருகின்றன. சுகாதாரக் கல்வியும் சமூக பழக்க வழக்கங்களும் 16 மாதம் முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பாலர் பள்ளியிலும் சராசரி குழந்தைகளின் வருகை 40 முதல் 50 குழந்தைகள் ஆகும். ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்தில் சராசரி வருகை 10 குழந்தைகள் ஆகும். குழந்தைகளுக்கு மதிய உணவும் வழங்கப்படுகிறது. கல்வி அறிவு பெறுவதற்கான கருவிகளும் விளையாட்டுப் பொருட்களும் வழங்கப்படுகின்றன. பயிற்சி பெற்ற பால சேவிகைகள் பாலர் பள்ளிகளை நடத்துகின்றனர்.

இத்திட்டத்திற்கான முழுச் செலவையும் மத்திய சமூக நல வாரியம் ஏற்றுவருகிறது. தமிழகத்தில் வில்லிவாக்கம், குறிஞ்சிப்பாடி, ஆத்தூர், பெரிய நாய்க்கன்பாளையம் ஆகிய 4 இடங்களில் குடும்பக் குழந்தைகள் நலத்திட்டம் அமலிலுள்ளது. ஒவ்வொரு திட்டத்திலும் ஒரு பிரதான நிலையமும், 5 கிளை நிலையங்களும் உள்ளன. பாலர் பள்ளிகள் நடத்துதல் இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். ஒவ்வொரு பள்ளிக்கும் 20 முதல் 50 குழந்தைகள் வரை வருகின்றனர். பயிற்சி பெற்ற பால சேவிகைகள் பள்ளிகளைச் சிறப்புற நடத்துகின்றனர்.

மத்திய அரசின் ஆதரவுடன் கூட்டு செயல் முறை உணவுத் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட 28 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் 3 நிலையங்களில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ்ச் சத்துணவு 6 மாதம் முதல் 2 வயது வரையுள்ள 20 குழந்தைகளுக்கு 2—5 வயதுள்ள 30 குழந்



# தமிழ்நாட்டின் துரித தொழில் வளர்ச்சிக்கு தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) அளிக்கும் சலுகைகளைப்பற்றி கேள்விப்பட்டதில்லையா?

STATE INDUSTRIES PROMOTION CORPORATION OF TAMIL NADU LIMITED

**நடுத்தர மற்றும் பெரிய தொழில்களின் துரித வளர்ச்சிக்காக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் அளிக்கும் சலுகைகள்**

1 தாராளமான நிதியுதவி

2 கீழ்கண்ட ஊக்கங்கள் மற்றும் சலுகைகள்

I வட்டி இல்லாத விற்பனை வரிக் கடன்கள்

II பிற்பட்ட தாலுக்காக்களில் துவங்கப்படும் தொழில்களுக்கு மான்யத்தொகை

III தொழில் துவக்கும் வாய்ப்பு பற்றிய பரிசீலனைக்கு உரிய உதவி தொகை அளித்தல்

IV குறைந்த கட்டணத்தில் மின்வசதி

V அரசு கொள்முதல்களில் தனிப்பட்ட முன்னுரிமைச் சலுகைகள்

**மற்றும் பற்பல**

இவற்றைப்பற்றிய முழு விவரங்கள் அடங்கிய புத்தகத்திற்கு இத்துடன் இணைந்துள்ள கூப்பனை பூர்த்தி செய்து தபாலில் அனுப்பவும்.

ஸீனியர் அபிவிருத்தி அதிகாரி
தமிழ்நாடு தொழில் முன்னேற்ற
நிறுவனம் லிமிடெட்
தபால் பெட்டி நெ. 3735, சென்னை 2

தொழில் வளர்ச்சிக்கு ''சிப்காட்'' அளிக்கும் சலுகைகள்பற்றிய புத்தகத்தை எனக்கு அனுப்பி வைக்கவும்.

பெயர் ------------------------------

முகவரி ------------------------------

------------------------------

------------ தேதியிட்ட ------------------

பத்திரிகையில் நான் இந்த விளம்பரத்தை கண்ணுற்றேன்.

(பத்திரிகையின் பெயரையும், தேதியையும் குறிப்பிடவும்)

சிப்காட் காரியாலயம்: IV மாடி, மெக்கோ இல்லம்.

தைகளுக்கும் 30 கர்ப்பிணி அல்லது பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்படுகிறது. பால சேவிகைகளுக்கு இதற்கான பயிற்சி அளிக்கப்படுகின்றன. அதற்கு ரூ. 20 கூடுதல் கௌரவ ஊதியமாக வழங்கப்படுகிறது. இந் நிலையங்களில் பாலசேவிகைக்கு உதவிபுரிய ரூ. 30 கௌரவ ஊதியம் பெறும் கூட்டுப் பெண் பணியாளர்களும் இருக்கிறார்கள். 4-வது திட்ட முடிவிற்குள், மேற்கண்ட 28 ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் 5 நிலையங்களில் இத் திட்டம் அமலுக்கு வரும்.

கிராம மகளிர் குழந்தைகள் முன்னேற்றத்தின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டு, கீழ்க்கண்ட நான்கு பிரிவுகளில் திட்டம் 1970—71 முதல் அமலாக்கப்பட்டு வருகிறது.

1. மகளிர் மன்றங்கள் மூலம் சத்துணவு பற்றி விளக்கம்.
2. மகளிர் மன்றப்பொருளியல் செயல் முறைகளை ஊக்குவிக்க பல திட்டம்.
3. பணி மகளிர் கூட்டுப் பயிற்சித் திட்டம்.
4. பால் வழங்கும் செயல் முறை உணவுத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் (1971—72-ஆம் ஆண்டில்) கிராம மக்களுக்குச் சத்துணவு உண்பதன் அவசியத்தை உணர்த்துவதன் பொருட்டு மொத்தம் 104 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவ்வட்டாரங்களிலுள்ள 832 மகளிர் மன்றங்கள் மூலம் உள்ளூர் உணவுப் பொருட்களை பயன்படுத்துவது, சத்துணவு சரிவிகித உணவு வகைகளைத் தயாரித்தல் போன்ற செயல் முறை மூலம் மகளிர்க்குச் சத்துணவுக் கல்வி புகட்டப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் திங்கள் தோறும் ரூ. 21 மானியமாக அரசினரால் வழங்கபடுகிறது. இச்செலவினமின்றி, மகளிர் மன்றம் ஒவ்வொன்றிற்கும் ரூ. 500க்குச் சமையல் பாத்திரங்கள் வாங்கி வழங்க அரசு அனுமதி தந்துள்ளது.



மகளிர் மன்றப் பொருளாதார செயல் முறைகளை ஊக்குவிப்பதற்காக சிறந்த மகளிர் மன்றங்களைத் தேர்ந்தெடுத்து அதற்குப் பரிசளிக்கும் திட்டத்தின்கீழ் 1970-71-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 142 சிறந்த மகளிர் மன்றங்களுக்கு முறையே ரூ. 1,000 ரூ. 600, ரூ. 400 வீதத்தில் 1, 2, 3-ஆம் தரப் பரிசுகளாக மொத்தம் ரூ. 81,800 பரிசளிக்கப்பட்டது. இப்பரிசுத் தொகை மகளிர் மன்ற முன்னேற்றத்தின் பொருட்டுச் செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது. அதாவது மகளிர் மன்றங்களுக்குத் தையல் இயந்திரம், சிறந்த புத்தகம், போன்றவைகள் வாங்கப் பயன்படுத்தப்படுகிறது.

1971—72-ஆம் ஆண்டிலும் சிறந்த மகளிர் மன்றங்களுக்குப் பரிசளிக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. இதற்காக ரூபாய் 1,20,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தெ. கல்லுப்பட்டி, பவானி சாகர், சேவை இல்லம், தாம்பரம் ஆகிய பயிற்சி நிலையங்கள் மூலம் 1970—71-ஆம் ஆண்டில் 846 மகளிர், கீழ்க்கண்ட துறையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். இப்பயிற்சி மூலம் கிராமிய மகளிர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி வகுக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் காலம் ஒரு மாதம் என வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கென 1970—71-ஆம் ஆண்டில் ரூ. 43,768.35 செலவிடப்பட்டது.



கிராமப் பெண்கள் விவசாயத்திலும், குடிசைத் தொழில்களிலும் நல்ல முன்னேற்றம் பெற்று அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இத்திட்டம் உதவுகிறது. கிராமப் பெண்களுக்கு அவர்களுடைய வீட்டைத் துப்புரவாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ள உதவுகிறது. மற்றும் கிராமப் பெண்களுக்கு அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தில் நல்ல சத்துள்ள உணவுகளைத் தயாரிப்பதற்கு உதவி செய்வது; ஒவ்வொரு வயது வந்த பெண்களுக்கும் குழந்தைகள் நலத்தைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள உதவி செய்கிறது.

பாய் நெய்தல், கூடை முடைதல், கம்பளி நெய்தல், தையற்பயிற்சி, பொம்மை, பாய் போன்ற தொழில்களில் தாழ்த்தப்பட்ட, பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மகளிர்க்கு 28 இடங்களில் பயிற்சி நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. பயிற்சிக் காலங்கள் வரையறுக்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தில் மகளிர்க்குக் கணிசமான தொகை உபகாரச் சம்பளமாகவும் அளிக்கப்பட்டு வருகிறது.

இவையன்றி தாழ்த்தப்பட்ட வகுப்பினுக்கென இந்தத் துறையின் கீழ் பெண்களுக்கு அரிசன நலத்துறை, பிற்பட்டோர் நலத் துறையினரின் நிதி உதவி மூலம் 14 இடங்களில் தொழில் நிலையங்கள் நடைபெறுகின்றன; பயிற்சிக் காலத்தில் ரூ. 20-30 வரை பயிற்சிபெறும் மகளிர்க்கு தையல் இயந்திரம் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விதம் பயிற்சி பெற்ற மகளிர் நிரந்தர வருவாய்க்கென மேற்படி துறையில் உற்பத்தி நிலையங்களும் துவக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வரு வருகின்றன.

இதைத்தவிர இத்துறை 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பழ உணவு தயாரித்துப் பாதுகாத்தல், ரெடிமேட் ஆடைகள் தைத்தல், சாக்பீஸ் தயாரித்தல், தையல்பயிற்சி நிலையம், நெசவுத் தொழில் ஆகியவற்றிற்கு மகளிர்க்கெனப் பயிற்சி நிலையங்கள் துவங்க அரசுக்குத் திட்டங்கள் அனுப்பப்பட்டுள்ளன.




கோழி முட்டையில் 73·7 சதம் தண்ணீரும், 14·8 சதம் புரதச் சத்தும், 10·5 சதம் கொழுப்புச் சத்தும் ஒரு சதம் சுண்ணாம்புச் சத்தும் இருப்பதாக ஆராய்ச்சியின் மூலம் தெரிய வருகிறது. எனவே, மனித இனத்தின் உணவாகப் பயன்படுகிற முட்டைகளிலெல்லாம் கோழி முட்டையே மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

### கோழி முட்டையின் தனிச் சிறப்பு

கோழி முட்டையில் உள்ள புரதச் சத்து சிறந்ததாகவும், முழுமையானதாகவும், இருப்பதால் கோழி முட்டை மதிப்பு வாய்ந்ததாக உள்ளது. அதில் உள்ள கொழுப்புச் சத்து கூழ்ப்பால் வடிவில் இருப்பதால் எளிதில் செரித்து, உடலால் கிரகிக்கப்படுகிறது.

கோழி முட்டையின் மஞ்சள் கருவில் இரும்புச்சத்து அதிக அளவில் இருப்பதுடன், மனித உடலால் வெகு எளிதில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாகவும் அமைந்துள்ளது. இரும்புச் சத்து உடலில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குச் செம்புச்சத்து இன்றியமையாததாகும். மஞ்சள் கருவில் ஒரு சிறிதளவு செம்புச்சத்து இருப்பதால், இரும்புச் சத்து வெகு எளிதில் உடலுக்குக் கிடைத்து விடுகிறது. இது கோழி முட்டைக்கே உள்ள தனிச் சிறப்பாகும்! ஏனெனில் பல உணவுப் பொருள்களில் இரும்புச் சத்து மிகுதியாக இருப்பினும், உடலால் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய வடிவில் இல்லை.

கோழி முட்டையில் பாஸ்பரஸ் சத்தும் உள்ளதால், மதிப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. கொழுப்பில் கரையக்கூடிய வைட்டமின் 'ஏ', 'டி', ஆகியவைகளும், தண்ணீரில் கரையக்கூடிய வைட்டமின் 'பி-1', 'பி-2' ஆகியவைகளும் கோழி முட்டையில் நிறைந்து உள்ளன.

முட்டையில் 5 முக்கியப் பகுதிகள் உள்ளன. அவை ஓடு, ஓட்டுத் தோல், வெண்கரு, மஞ்சள்கரு, கரு எனப்படுகின்றன.

### ஓடு (Shell)

ஓடு, 4 அடுக்குகளால் (Layers) அமைந்துள்ளன. ஒவ்வோர் அடுக்கிலும் சின்னஞ் சிறியத் துவாரங்கள் இருக்கின்றன. இதனால் தண்ணீரும், காற்றும் உள்ளே செல்லமுடியும். புதிதாக இடப்பட்ட முட்டையின் மேற்புறத்தில் 'புளூம்' (Bloom) என்ற 'ஜெல்லி' போன்ற வழவழப்பான பொருள் மூடிக் கொண்டிருக்கிறது. இப்பொருள் முட்டையின் ஓட்டில் உள்ள துவாரங்களை அடைத்து விடுகின்றன.

### ஓட்டுத் தோல்

முட்டை ஓட்டுக்கு அடுத்த படியாக இரு மென்மையான, வெண்மையான ஓட்டுத்தோல்கள் (Shell- membrane) அமைந்துள்ளன. அவைகளை, 'வெளிப்புற ஓட்டுத் தோல்' என்றும், 'உட்புற ஓட்டுத்தோல் என்றும் கூறப்படுகின்றன. இவ்விரு தோல்களும் முட்டையின் அகன்ற பாகத்தைத் தவிர மற்ற பகுதிகளில் மிகவும் நெருக்கமாக ஓட்டுடன் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. ஆனால், முட்டைப்யின் அகன்ற பாகத்தில் இவ்விரு தோல்களும், ஓட்டுடன்ஒட்டியிருக்காமல் பிரிந்து காற்றுப் பகுதி (Air space) ஏற்படுத்தியுள்ளன. தண்ணீரும், காற்றும் இவ்விரு தோல்களின் மூலமாக ஊடுருவிச் செல்லக் கூடும்.

முட்டை இடப்படும் போது, முட்டையில் காற்றுப் பகுதி இருக்காது. நேரம் ஆக ஆக காற்றுப் பகுதி தோன்றும். வறண்ட, வெப்பமான இடத்தில் முட்டை வைக்கப்படும்போது முட்டையிலிருந்து தண்ணீரும், காற்றும் வெளியேறி விடுவதால் காற்றுப் பகுதி பெரியதாக இருக்கும். உட்புற ஓட்டுத்தோல், 'ஆல்புமென்' எனப்படும் வெண்கருவை மூடியுள்ளது.

### வெண்கரு (White)

வெண்கரு 4 அடுக்குகளாக அமைந்துள்ளது. முதல் அடுக்கு மிகவும் மெலிந்து காணப்படுகிறது. அடுத்த அடுக்குத் தடிப்பாக இருக்கிறது. அடுத்த அடுக்கும் மெலிந்து காணப்படுகிறது. அதற்கு அடுத்த அடுக்குத் தடிப்பாக இருப்பதுடன் மஞ்சள் கருவை மூடி இருக்கும்.

'கலாசா' (Chalaza) எனப்படும் கயறு போன்ற அமைப்புள்ள பகுதி வெண்கருவில் முறுக்கிக் கொண்டு அமைந்துள்ளது. மஞ்சள் கரு முட்டையின் மையத்தில் மிதக்கவும், எளிதாக திரும்பவும் 'கலாசா' உதவுகிறது. மஞ்சள் கரு பாதிக்கப்படாமல் காப்பாற்றப்படுவதற்கு கலாசா உதவுகிறது.

### மஞ்சள் கரு (yolk)

மஞ்சள் கருவை ஒரு மெல்லிய தோல் மூடியுள்ளது. இத்தோலிற்கு (Vitelline membrane) என்று பெயர். புதிதாக இடப்பட்ட முட்டையைப் படுக்கையாகவோ அல்லது நிமிர்த்தியோ வைத்தாலும், முட்டையின்

மையப் பகுதிக்குச் சற்று மேலேயே மஞ்சள் கரு நிற்கும். ஏனெனில் மஞ்சள் கரு வெண்கருவைவிட எடை குறைந்தது.

### கரு (Germ)

முட்டையை நிலையாக வைத்திருக்கும்போது மஞ்சள் கருவின் மேலே, சிறு புள்ளி போன்ற ஒரு பகுதி காணப்படும். இப்புள்ளியின் விட்டம் ஏறத்தாழ ஓர் அங்குலத்தில் எட்டில் ஒரு பங்கு அளவு இருக்கும். முட்டையை எப்பக்கம் திருப்பினாலும் இப்புள்ளி மஞ்சள் கருவின் மேற் பரப்பிலேயே நிலைத்து நிற்கும். இதுவே உண்மையான கருவாகும், கோழிக் குஞ்சு பொறிப்பதற்கு ஏற்ற முட்டைகளில் மட்டுமே இக்கரு இருக்கும். இக்கருவே கோழிக்குஞ்சாக வளருகிறது.

முட்டையினுள் வளரும் கோழிக்குஞ்சுக்குத் தேவையான எல்லா உணவுகளும் முட்டையில் இருக்கிறது. முட்டை ஓட்டில் சுண்ணாம்புச் சத்து உள்ளது. கருவிலிருந்து உருவாகும் கோழிக் குஞ்சில் எலும்பு தோன்றவும், உடல் அமைப்பு ஏற்படவும் தேவையானச் சுண்ணாம்புச் சத்து கிடைக்கிறது.

### முட்டை எப்படி உருவாகிறது ?

பெண் கோழியின் சூற்பையில் முட்டை உருவாகத் தொடங்குகிறது. ஒவ்வொரு இனப் பெருக்க உயிரணுவும் (செல்), சினை முட்டை (Ovum) எனப்படுகிறது. ஒவ்வோர் சினை முட்டையும் 'பாலிக்கிள்' எனப்படும் மெல்லிய உறையினால் மூடப்பட்டு, மெல்லிய காம்பினால் சூற்பையுடன் இணைக்கப்பட்டுள்ளது. சூற்பையில் பல சினை முட்டைகள் இருக்கும். அதுவும் குறிப்பாகக் கோழி முட்டையிடும் நிலையில் இருக்கும்போது அதன் சூற்பையில் ஏராளமான சினை முட்டைகள் இருக்கும். புதிதாக இடப்படும் முட்டையில் உள்ள மஞ்சள் கரு அளவுக்கு, மஞ்சள் கரு வளரும் வரை, மஞ்சள், வெண்கரு மணிகள் சினை முட்டையில் அடுக்கடுக்காகத் திரளுகின்றன.

மஞ்சள் கரு வளர்ந்தவுடன், 'பாலிக்கிள்' வெடித்து சூற்பையிலிருந்து விடுதலை பெருகிறது. சினை முட்டை வெளியேறும் குழாயின் வாய்ப் பாகம், மஞ்சள் கருவைப் பற்றிக் கொள்கிறது. விடுதலை பெற்ற மஞ்சள் கரு சினை முட்டை வெளியேறும் குழாயில் புகுந்து வரும்போது, அக் குழாயின் மையத்தில் உள்ள சுரப்பிகள் மஞ்சள் கருவைச் சுற்றி வெண்கருவின் வெவ்வேறு அடுக்குகளை ஏற்படுத்துகிறது. முட்டை ஓடு, சினை முட்டை வெளியேறும் குழாயின் அடிப் பாகத்தில் உருவாகிறது.

பெண் கோழியைப் பொறுத்த வரையில் மஞ்சள் கரு சினை முட்டை வெளியேறும் குழாயில் ( Oviduct ) புகுந்ததிலிருந்து, முழு வளர்ச்சி பெற்ற முட்டையாக வெளிவருவதற்கு 25 மணி நேரத்திற்கும் சற்று கூடுதலான காலம் பிடிக்கும். முட்டையிடப்படும் பொழுது சிறிய முனையே (குறுகிய பகுதி) முதலில் வெளிவருகிறது.

### இளவேனிற் காலத்தில் ஏராளமான முட்டைகள்

பெண் கோழி ஆண்டின் எந்தப் பகுதியிலும் முட்டையிடக் கூடும். ஆனால், பொதுவாக இளவேனிற் (வசந்தம்) காலத்தில்தான் அதிக அளவு முட்டை உற்பத்தியாகிறது. (முற்காலத்தில் கோழிகள் இளவேனிற் காலத்தில் மட்டுமே முட்டை இட்டதாம். காட்டில் வாழும் பறவைகள் பெரும்பாலும் இளவேனிற் காலத்திலேயே முட்டையிடுகின்றன).

நாள் தோறும் கிடைக்கும் சூரிய வெளிச்சம் இளவேனிற் காலத்தில் படிப்படியாகக் கூடி வருவதற்கு ஏற்ப, பெண் கோழிகளின் முட்டையிடும் தன்மை மேம்படுகிறது. கோழியினுடைய மூளைக்கு அடியில் உள்ள மிகச் சிறிய 'பிட்யூட்டரி' (Pituitary) சுரப்பி ஹார்மோன்களைச் சுரக்கின்றன. இது சினை முட்டைகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறது. 'பிட்யூட்டரி' சுரப்பிகளின் வேலையை ஒளி தூண்டிவிடுகிறது. ஒளியின் அடர்த்திக்கு ஏற்பக் கோழியினுடைய கண்கள் உணர்ச்சி வயப்படுகின்றன. ஒளி அதிகமாகும் போது அதிக அளவு ஹார்மோன்கள் சுரக்கின்றன. இவ்வாறு சுரக்கப்பட்ட ஹார்மோன்கள் இரத்தத்துடன் சேர்ந்து கோழியின் உடலெங்கும் பரவி, கோழியை முட்டையிடத் தூண்டுகிறது

### கோழிக்குஞ்சு எப்படி உருவாகிறது?

சினை முட்டை வெளியேறும் குழாயின் மேற் பகுதியில் கோழி முட்டை கருவுறுகிறது (Fertilization). ஒவ்வொரு பெண் உயிரணுவையும், ஓர் ஆண் உயிரணு கருவுறச் செய்கிறது. ஆண் பெண் இன விருத்தி உயிரணுக்களின் சேர்க்கையால், முட்டையில் குஞ்சு தோன்றுகிறது. சேவல் சேராவிட்டாலும் பெட்டைக் கோழி முட்டையிடும். ஆனால், அம்முட்டை குஞ்சு பொரிப்பதற்கு ஏற்றதல்ல ; உணவாகப் பயன் படுத்துவதற்கும் மற்றவைகளுக்கும் மட்டுமே ஏற்றது. முட்டையிடப்படுவதற்குள் கருவுற்ற அணுவில் பல அணுப் பிரிவுகள் ஏற்படுகின்றன.

இடப்பட்ட முட்டையிலுள்ள கருவிலிருந்து கோழிக் குஞ்சு தோன்றி, முட்டையை விட்டு வெளியே வர 21 நாட்களுக்கு அடைகாக்கச் செய்ய வேண்டும். அல்லது சரியான வெப்ப நிலையில் இன்குபேட்டரில் (Incubator) வைத்திருக்க வேண்டும்.



முட்டை கோழியிலிருந்து வெளியே வந்த நிலையில் கருவில் உயிரணுக்கள் வெளி அடுக்கு, உள் அடுக்கு என்று இரு அடுக்குகளாக அமைந்துள்ளன. முட்டையிடப்பட்டபின் சரியான முறையில் அடை காக்கச் செய்யும்போது, கருவில் அணுப்பிளவுகள் விரைவாக தொடர்ந்து நடைபெறுகின்றன. அதன்பின் கரு முழு உருவமடைகின்றது. இரண்டு அடுக்குகளாக இருந்த உயிரணுக்கள் மூன்று அடுக்குகளாக ஆகின்றன.




வெளி அடுக்குக்கும், உள் அடுக்குக்கும் இடையில் மைய அடுக்கு மூன்றாவதாக உருவாகிறது. கருவின் வெளி அடுக்கு கோழிக்குஞ்சின் தோல், இறக்கைகள், மற்றும் இதர வெளிப்புற அமைப்புகளையும், நரம்பு மண்டலத்தையும் உற்பத்தி செய்கிறது. மைய அடுக்கு கோழிக் குஞ்சின் எலும்பு, குருதி, தசை, இன விருத்தி மற்றும், கழிவகற்றும் உறுப்புகளாக வளருகின்றன. உள் அடுக்கு சுவாச உறுப்புகளையும், சுரப்பிகளையும் உணவுப் பாதையின் சுவர்த் தோலையும் உருவாக்குகின்றன.

முட்டையில் வளரும் கருவுக்கு முதல் 15 நாளில் வெண் கருவில் உள்ள சத்துக்களே முக்கியமாகப் பயன் படுகிறது. அதன்பின் மூன்றாவது வாரத்தில் மஞ்சள் கருவே, வளரும் கருவுக்குத் தேவையான சத்துக்களை அளிக்கிறது.

### பயன்கள்

மனித இனத்தின் உணவில் முட்டை முக்கிய அங்கம் வகிக்கிறது. சைனாவில் முட்டையை ஊறுகாய்போல் செய்து 100 நாள் வரை பாதுகாத்துவைத்துப் பயன்படுத்துகின்றனர்.

புரதச்சத்து, இரும்பு, பாஸ்பரஸ் முதலியன கிடைக்க சிறந்த ஆதாரமாகக் கோழி முட்டை அமைந்துள்ளது. கோழி முட்டையின் மஞ்சள் கருவில் வைட்டமின் 'ஏ'-யும் 'டி'-யும் நிறைந்து காணப்படுகிறது. வைட்டமின் 'பி' வகையைச் சேர்ந்த 'பையோடின்' என்ற மனித இனத்திற்குத் தேவையான பொருளும் அடங்கியுள்ளது. வெண்கருவில் 'அவிடின்' என்ற பொருள் காணப்படுகிறது. இது வளர்ச்சியைத் தடை செய்யும். முட்டையில் தயாமின், ரிபோபிளேவின் ஆகியவையும் ஓரளவு அடங்கியுள்ளது.

வெள்ளை முட்டையும், பழுப்பு நிறமுட்டையும் ஒரே மாதிரியான உணவு மதிப்பையே பெற்றுள்ளன. முட்டையை வேக வைக்கும்போது, 134 டிகிரி பாரன்ஹீட் வெப்பத்தில் வெண் கரு திரவ நிலையிலிருந்து மாறித் திட நிலைக்கு மாறுகிறது.

'ஆம்லெட்' தயாரிக்கவும், 'சூப்' தயாரிக்கவும் முட்டை பயன்படுகிறது. குளிரச் செய்யப்பட்ட மற்றும் உலர்த்தப்பட்ட முட்டைகள் ரொட்டி, பிஸ்கட் தயாரிப்பதில் முக்கியத்துவம் பெறுகிறது.

உணவாக உபயோகமாவதைக் காட்டிலும், மற்ற வகையில் முட்டைகள் அதிகம் பயன்படுகின்றன. அம்மை மருந்து, கால்நடைத் தீவனம், இரசாயன உரங்கள் ஆகியவை தயாரிக்க முட்டைகள் பயன்படுகின்றன. பெயிண்டுகள், வார்னிஷ்கள், மை, சோப்பு, ஷாம்பு, அச்சிடுவதற்கு ஏற்ற மை ஆகியவை தயாரிக்க முட்டைகள் பயன் படுத்தப்படுகின்றன.




ஆனால், நமக்குத் தேவையான சக்தியைப் (கலோரி) பெறுவதற்கு நாம் முழு அளவில் முட்டையை நம்பி இருக்கக் கூடாது. ஏனெனில் முட்டையின் சக்தி கொடுக்கும் தன்மை மிகவும் குறைவு. சராசரி பருமனுள்ள ஒரு முட்டையிலிருந்து சுமார் 75 முதல் 80 கலோரி சக்தியே கிடைக்கிறது.

### முட்டையின் பாதுகாப்பு

நாம் உணவுக்காகப் பயன்படுத்தும் முட்டைகளைக் குளிர்ச்சியான இடங்களில் வைத்திருப்பதே நல்லது. வெப்பம் மிகுந்த இடத்தில் வைத்திருந்தால் கெட்டுவிடும். முட்டைகளை வெங்காயம், பூண்டு போன்ற மணப் பொருள்களுடனே, மண்ணெண்ணெய், சோப்பு முதலியவைகளின் அருகிலோ வைக்கக் கூடாது. அப்படி வைத்திருந்தால் கெட்டுவிடும்.

சேவல் சேராமல் ஏற்பட்ட முட்டைகள் (கன்னி முட்டைகள்) வெய்யில் காலத்திலும், நீண்ட நாட்களுக்குக் கெடாமல் இருக்கும். சேவல் சேர்ந்ததால் ஏற்பட்ட முட்டைகளெனில்வெய்யில் காலத்தில் சீக்கிரம் கெட்டுவிடுமாதலின் அவைகளை உடன் பயன்படுத்தி விடவேண்டும்.

முட்டைகளைப் பச்சையாகவோ, சமைத்தோ, சூடாகவோ, ஆறவைத்தோ, தனியாகவோஅல்லது மற்ற உணவுகளுடன் கலந்தோ சாப்பிடலாம். மிகவும் எளிதாக அவித்தும் உண்ணலாம். முட்டை எல்லா வயதினருக்கும், எல்லா இனத்தினருக்கும்ஏற்றது. சேவல் சேராமல் இடப்படும் முட்டைகளை 'சைவ முட்டை' ( Vegetarian egg ) என்றும் கூறப்படுவதால், சைவர்கள் இவ்வகை முட்டைகளை வாங்கி உண்ணுவதில் தவறில்லை.






கண்ணில்லாதவர்களைக் கண்டு நாம் கவலைப்படுகிறோம். ஆனால், பூவிருந்தவல்லியில் இருக்கும் கண்ணில்லாதவர்கள் பள்ளியில்—அவர்கள் அவ்வாறு கருதப்படுவதில்லை. கண்பார்வையுள்ள ஏனைய குழந்தைகளைப் போலவே அவர்கள் அங்கும் இங்கும் அலைவதற்கும் ஓடுவதற்கும் அனுமதிக்கப்படுகிறார்கள். பள்ளிக்கூடம் இருக்கும் பகுதியில் மட்டுமல்ல—பள்ளியைவிட்டு வெளியில்—நெடுஞ்சாலைகளில் அவர்கள் நடைபோட அனுமதிக்கப்படுகிறார்கள்.

இருவர், மூவர் சேர்ந்து தங்களுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொள்ளச் செல்கிறார்கள் — கண்களுக்குப் பதிலாகத் தங்களின் காதுகளைத் தெளிவாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சுற்றுப்புறங்களில் எழும் ஒலியைக் கேட்டு, அவர்கள் நடைபோடுகிறார்கள்.

உடற்பயிற்சி விளையாட்டு விழாக்களின் போது நாம் அங்குச் சென்று பார்த்தால், நிச்சயம் அதிசயத்தில் மூழ்குவோம். பொதுவாகக் கண்ணிழந்த குழந்தைகளின் விளையாட்டுக்கு ஒரு முறை கையாளப்படுவதுண்டு. அதாவது புறப்படும் இடத்துக்கும், சேர வேண்டிய இடத்துக்கும் இடையில் ஒரு கயிறு கட்டப்பட்டிருக்கும்; கண்ணில்லாத குழந்தைகள் அந்தக் கயிற்றைத் தங்களின் ஒரு கையால் பிடித்துக் கொண்டே ஓடவேண்டும். ஆனால் இங்கு நடைபெறும் விளையாட்டுப் போட்டி வேறு விதமாக இருக்கிறது.

நூறு மீட்டர் ஓட்டத்தில், விளையாடுவோர் வந்து சேர வேண்டிய இறுதி இடத்தில் ரிப்பனுக்குப் பதில் ஒலி எழுப்பும் ஒரு வகை மணியை அங்கே காணலாம். அந்த மணியின் ஒலியைக் கூர்ந்து கேட்டு, அது இருக்குமிடத்தைத் தெளிவாக அறிந்து, ஓடுகிறார்கள் இந்தச் சிறுவர்கள்.

கண் பார்வையற்றவர்களைத் தொல்லையாகக் கருதக்கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தைக் கண் பார்வையுள்ள ஏனையோருக்குப் பயிற்றுவிப்பதுதான் இந்தப் புதிய முறையின் குறிக்கோள்.

இந்தப் பள்ளியில் பயிலும் குழந்தைகள், ஏனைய பள்ளிகளில் பயிலும் கண் தெரிந்த குழந்தைகளைப் போலவே, சமூகப் பணி செய்வதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். இவர்களின் இந்தத் தொண்டினைப் பற்றிப் பள்ளி முதல்வர் குறிப்பிடுகிறார்.

''சில சமயங்களில் எங்களது கல்வி நிலையத்தைச் சேர்ந்த கண் பார்வையற்ற குழந்தைகள் அருகில் உள்ள சிற்றூர்களுக்குச் சென்று அங்குள்ளோருக்கு இன்னிசை விருந்தினை வழங்கி வருகிறார்கள். சிற்றூர் வாழ் மக்கள் இந்தக் குழந்தைகளின் வருகையை ஆவலுடன் எதிர்நோக்குகிறார்கள். பல வழிகளிலும் சமூகப் பணியை நிலைநாட்டுவதில் இந்தப் பள்ளி வெற்றியடைந்து வருகிறது.''

இந்தக் குழந்தைகளுக்குரிய பாடங்கள் 'பிரெய்லி' முறை எழுத்தில் உள்ளன. சென்னைச் சிறைச்சாலையில் உள்ள சில கைதிகள் இந்த பிரெய்லி முறையைக் கற்று வைத்துள்ளனர். அவர்கள் பிரெய்லி முறையில் சில புத்தகங்களை உருவாக்கியுள்ளனர். அந்தப் புத்தகங்கள்தாம், பார்வையற்ற குழந்தைகள் பயிற்சி பெறப் பயன்படுகின்றன. தற்சமயம் இந்தப் புத்தகங்கள் எல்லா மொழிகளிலும் கிடைப்பதில்லை.

இந்தப் பள்ளியில் செஞ்சிலுவைச் சங்கம் உண்டு. நாடகக்குழு உண்டு; இலக்கிய மன்றம் உண்டு; சாரணர் இயக்கம் உண்டு; இசைக்குழு உண்டு.

முதல் வகுப்பிலிருந்து பள்ளி இறுதி வகுப்பு வரை ஏனைய பள்ளிகளைப் போலவே இங்கும் பாடத்திட்டம் உண்டு. இங்குள்ள மாணவர்களுக்கு ஒன்றுக்கும் மேலான இந்திய மொழிகள் கற்பிக்கப்படுகின்றன

உயர்ந்த தளத்தையும், நீண்ட காரிடாரையும், பெரிய கூடங்களையும், அகன்ற மாடியையும் கொண்டு மிகவும் வசதியாக விளங்கும் இந்தப் பள்ளிக் கட்டடமும், அதன் சுற்றுப்புறமும் 30 ஏக்கர் பரப்பளவு கொண்டது.

படிப்பு, தங்கும் வசதி, மருத்துவக் கண்காணிப்பு,

### பரங்கிமலையில் பாங்கான பள்ளி

இது பள்ளிக் கட்டடமா? படகு வீடா? என்று எண்ணும் வகையில், பரங்கிமலை, கவுல் பஜாரில் ஒரு பள்ளிக் கூடம் மிக அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. தமிழக அரசின் ஆதரவோடு, ரோட்டரி சங்கத்தார் இதனைக் கட்டியுள்ளார்கள். இப்போது மூன்று பகுதிகள் கட்டப்பட்டு, ஐந்து வகுப்புவரை நடக்கின்றன. இன்னும் இரண்டு பகுதிகள் இதே போல்கட்டப்படவேண்டும். இதைக்கட்ட மொத்தச் செலவு ரூ. 60 ஆயிரம் ஆகும். இதன் சிறப்பு, தமிழ்நாட்டிலேயே இது போன்ற நவீன அமைப்பு உள்ள பள்ளி வேறு இல்லை என்பதே!

சாப்பாடு, புத்தகங்கள் அனைத்தும் இலவசம். கோடைக் கால விடுமுறைகளில், அவர்கள் சொந்த ஊர்களுக்குச் சென்று வருவதற்குரிய செலவையும் அரசே ஏற்றுக் கொள்கிறது.

வகுப்புகளில் 10 அல்லது 15 மாணவர்களே இடம் பெறுகிறார்கள். பயிற்றுவிக்கும் ஆசிரியர் ஒவ்வொரு மாணவரிடமும் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்ற உயர் நோக்கமே இதற்குக் காரணம்.

புவியியல், வரலாறு, மற்றும் எல்லாப் பாடங்களும் இங்கே பயிற்றுவிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பாடமும் சிறப்பான துணைக் கருவிகளுடனும், ஆசிரியர்களின் தெளிவான விரிவுரைகளுடனும் சொல்லித் தரப்படுவதால், கண் பார்வையற்ற மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ள முடிகிறது.

வகுப்பு நடைபெறும் போது மாணவர்கள் தங்கள் கவனத்தை வேறு எங்கும் சிதறவிடாமல், பாடத்திலே நிறுத்துகிறார்கள்.

பள்ளிக் கல்வி முடிந்துவிடுகிறது. அதன் பிறகு என்ன? இது அனைவருக்கும் அறிமுகமான பொதுக் கேள்வி. ஆனால், இந்தக் கேள்வி, கண் பார்வையற்றவர்களை வியப்புக்கும் அச்சத்துக்கும் ஆளாக்குகிறது.

மிகச் சிலர் கல்லூரிக் கல்வியைத் தொடர முடிகிறது. அதற்கு, உடன்பயிலும் பார்வையற்ற மாணவர்களின் துணை தேவைப்படுகிறது. அவர்கள் உரத்த குரல் எழுப்பிப் படிப்பார்கள். அந்த ஒலியை, பார்வையற்ற மாணவர்கள் கேட்டுக் கொள்வார்கள். தேர்வுகள் எழுதும் போதும், பார்வையற்றவர்கள், வினாக்களுக்கு வாய்மொழியால் பதிலிறுக்க, பார்வையுள்ள மற்றவர் தேர்வுத்தாளில் அதனை எழுதுவார்.

இன்னும் சில மாணவர்கள், தொழிற்கூடங்களை நாடிச் செல்கிறார்கள். ஏற்கெனவே இந்தப் பள்ளியில் தொழிற் கல்வி கற்பிக்கப்படுகிறது. பள்ளிப் படிப்பை முடித்ததும், இந்த மாணவர்கள் திண்டாடக் கூடாது என்பதற்காகவே— அவர்களே அலுவல் தேடிக் கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையிலே தான் தொழிற் கல்வி கற்பிக்கப்படுகிறது.

கிண்டியில் உள்ள சிறு இயந்திரப் பிரிவுக்கு இவர்கள் அனுப்பப்படுகிறார்கள். அங்கு இயந்திரங்களைப் பற்றிய அடிப்படைக் கல்வி இவர்களுக்குப் போதிக்கப்படுகிறது. கல்வியை முடித்துவிட்டுத் தொழிற்சாலைகளில் அலுவல் புரிவதற்கு இந்த அடிப்படைத் தொழிற் கல்விதான் மிகவும் பயன்படுகிறது.



இங்கே பயிற்சி பெற்ற ஒரு சிலர் தனியார் தொழிற்கூடங்களிலும், அரசினரின் தொழிற்சாலைகளிலும் அலுவல் செய்து வருகின்றனர்.

ஒருநாள் திடீரென்று இந்தப் பள்ளி முதல்வருக்கு ஒரு தொலைபேசி செய்தி வந்தது:

"நீங்கள் அனுப்பிய பார்வையற்ற மாணவர்கள், பார்வையுள்ள மாணவர்களைவிட விரைவாகச் செய்து முடிக்கிறார்கள். அதனால் பார்வையுள்ளவர்கள் பயப்படுகிறார்கள். தங்களால் அந்த அளவு வேகமாகப் பணியாற்ற முடியாது என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே உங்களவர்களைச் சற்றுத் தாமதமாகவே பணிபுரியச் சொல்லுங்கள்"—தொலைபேசிச் செய்தி இதுதான்.

விரைந்து பணி செய்பவர்களைத் தடுக்க முடியாது. தாமதமாகப் பணியாற்றுங்கள் என்று அவர்களுக்குச் சொல்லி அவர்களது ஆர்வத்தைத் தடை செய்வதும் நியாயமல்ல என்பதை உணர்ந்த பள்ளி முதல்வர் ஒரு புது வழியைக் கையாண்டார். பார்வையற்றவர்கள் செய்து முடிக்கின்ற பணிகளுக்குச் சோதனை ஒன்று வைப்பதன் வாயிலாக — பார்வையுள்ளவர்களுக்கு இணையாக்கலாம் என்று திட்டமிட்டார்.

இந்த நிகழ்ச்சியிலிருந்து பார்வையற்றவர்கள், பார்வையுள்ளவர்களை விடச் சிறந்தவர்கள் என்பது மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

"முன்பெல்லாம் பார்வையற்றவர்களைக் கண்டு மக்கள் பரிதாபப்பட்டார்கள்; பார்வையற்றவர்களும், தாங்கள் பரிதாபத்துக்குரியவர்கள் என்றுதான் எண்ணி வந்தார்கள். ஆனால் இப்போது இந்த எண்ணம் மாறிவிட்டது. நாங்களும் பயன்படக்கூடியவர்களே என்ற எண்ணம் பார்வையற்றவர்களின் இதயங்களில் படிந்து வருகிறது. இந்தத் தன்னம்பிக்கையை ஊட்டுவதுதான் எங்கள் பள்ளியின் புனிதத் தொண்டு" என்று பெருமிதத்துடன் கூறும் பள்ளி முதல்வரின் அருங்கருத்தை நாம் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கிறோம்.

**புழலில் புராதனக் கோயில்**

சென்னைக்கு அருகே உள்ள புழலில் ஒரு புராதன ஜைன ஆலயம் இருக்கிறது. இதன் வயது என்ன தெரியுமா? 2000 ஆண்டுகளாம். ஆதி பகவன் கோயிலான இதனை அக்கால மன்னர்களும், திருவள்ளுவரும் வந்து வழிபட்டார்கள் என்று வரலாற்றில் கூறப்பட்டுள்ளதாம். செங்கற்பட்டு மாவட்டத்தில் மிகப் புராதனமான கோயில் இது என்று கருதுகின்றனர். இவ்வாலயத்தில் கல்வெட்டும், பழங்காலத் தூண்களும் உள்ளன. இப்போது மிக அழகான முறையில் புதுப்பித்துள்ளார்கள்.

# ஏன் இந்தக் காதல்?

‘‘சின்னம்மா, சின்னய்யா—ரெண்டு பேரையும் எங்காச்சும் வெளியூருங்களுக்குப் போய்த் தனியா சுத்திப் பார்த்திட்டு வாங்கண்ணு அனுப்பி வச்சா என்ன?’’

—என்று கேட்டாள் சமையற்காரி சண்பகம்.

‘‘சிங்கப்பூரிலிருந்து பெரியவரும் கூட அப்படித்தான் எழுதியிருக்கிறார். காஷ்மீருக்கே கூட அவர் அனுப்பச் சொல்லியிருக்கிறார், தேனிலவுக்கு! ஆனால் மாதவன் அதற்கு இணங்க வேண்டுமே!’’

—அலுத்தாற்போல் கூறினாள் பூங்கொடி.

‘‘ஆமாம்மா; அவர் ஒரு பிடிவாதக்காரர், ஆனா, தன் அம்மாவோட சொல்லை அவர் தட்டவே மாட்டார்னு சொல்றாங்க. அந்த அம்மாளையே கேட்போமே, பெண்ணும் பிள்ளையும் தனியா குடும்பம் நடத்தாமே எவ்வளவு காலத்துக்கு இப்படிப் பிரிஞ்சு இருக்கிறதுண்ணு! அவுங்களை விட்டே சின்னய்யாவையும் சின்னம்மாவையும் வெளியூருங்களுக்குக் கிளப்பிவிடப் பார்ப்போமே!’’

‘‘அதுவும் சரியான யோசனை தான் சண்பகம். அந்த அம்மாளைக் கொண்டு தான் மாதவனின் மனத்தை நாம் மாற்ற முயலணும்.’’

‘‘அது சரிம்மா; நானும் உங்களை ரொம்ப நாளாவே கேட்கணும்னு நினைச்சிருந்தேன்.’’

‘‘என்ன சண்பகம்?’’

‘‘நீங்க ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கலே.’’

சமையற்காரி சண்பகம் இப்படியொரு சங்கடமான கேள்வியைத் திடீரென்று கேட்டுத் தன்னைத் தடுமாற வைப்பாள் என்று பூங்கொடி எதிர்பார்க்கவே இல்லை.

## 18. மாமல்ல புரத்தில் . . . ?

அ. மனாறமலையான

அவள் முகம் கவிழ்ந்தது; பார்வை சன்னலின் வழியே தோட்டத்தின் பக்கம் சென்றது.

அங்கே பள்ளிச் சிறுவர்—சிறுமியர் சீருடை அணிந்து அணி அணியாகச் சிரித்து நிற்பதைப் போல, வரிசை வரிசையான செடிகளில் வகைவகையான மலர்கள்.

அவற்றின் மீது வண்டுகளும் வண்ணத்துப் பூச்சிகளும் பறந்து பறந்து மிதந்து மிதந்து இன்னிசையை எழுப்புகின்றன.

அவற்றோடு சேர்ந்து பூங்கொடியின் எண்ணங்களும் ‘தொட்டில் ராட்டினம்’ ஆடுகின்றன.

‘. . . . இந்த உலகமே ஒரு பூந்தோட்டந்தானே! இதிலே பெண்கள் எல்லாரும் வண்ணப் பூக்கள்தான்; ஆண்கள் அனைவரும் வண்ணத்துப் பூச்சிகள் தான்! . . —

‘. . . . எதற்கோ காலாகாலத்திற்கும் கட்டுப்பட வேண்டியிருக்கிறதே என்கிற இறுக்கமான நெஞ்சச் சுமைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட நிலையில் — தங்களுக்குரிய இச்சைப்படியான போக்கில் —அந்தப் பூக்கள் சிரிக்கின்றன; பொன் வண்டுகளும் பறக்கின்றன. ஆனால் மனிதர்கள் . . . .? அவர்களால் அப்படி முடியுமா?

‘. . . . என்றாலும் கணவன், மனைவி, குடும்பம், குழந்தை—என்றெல்லாம் பிணைப்புகள் பெருகப் பெருகத் தன்னலந்தானே தலைவிரித்தாடுகிறது! தன் பிள்ளைக்குத் தருவது எதுவானாலும் அதையே எதிர் வீட்டுப் பிள்ளைக்கும் சரிசமமாகப் பகிர்ந்து தருவோம் என்கின்ற கருணையே கருக்கொள்ளாமல் மலடாகத் தானே மனித மனங்கள் மாறுகின்றன! தனக்கென்று சேமித்துவிடவேண்டும் என்கின்ற பேராசை வெறியில் தியாக உணர்வுகள் எல்லாம் சிறகொடிந்து தானே கீழே விழுகின்றன! கவலைகள், கலக்கங்கள், ஆசைகள், அல்லல்கள் எல்லாமே வானத்தைப் போலத்தானே வளர்ந்து கொண்டே போகின்றன ஒவ்வொரு நாளும்!

‘தன்னுடைய உடற்பசி, உள்ளப் பசிதனை ஓரளவு உதறியெறிந்து விட்டு—தன் சொந்த இன்பத்தை, எதிர் காலத்தை, பெற்றோரை, சுற்றத்தாரை இயன்றவரை மறந்து விட்டு—‘‘தொண்டு’’— என்கிற சுடர் விளக்கை மட்டுமே கையிலேந்தி வழி நடக்கும் போது—

நெஞ்சத்தினுள்ளே எவ்வளவு அற்புதமான நிறைவு—தெளிவு—அமைதி—மகிழ்வு—பொங்கி வழிகின்றன! — . . . ,

—தன் மனக் கடலின் அடியில் எம்பிய இந்த நினைவலைகளையெல்லாம் சண்பகத்திடம் வெளிப்படுத்தவில்லை பூங்கொடி.

ஆனால், அவளது இதயச் சலனங்களுக்கிடையே ஒரு வியப்புக் குறியும் எழாமல் இல்லை.

சில காலமாகத் தன் தோழிகளோ சொந்தக்காரர்களோ தன்னைக் கேட்பதற்கு நினைக்காத அல்லது—விரும்பாத—ஒரு சிக்கலான கேள்வியை இந்தச் சாதாரணச் சமையற்காரியினால் எப்படி இவ்வளவு எளிதாகத் துணிவாகத் தொடுக்க முடிந்தது என்பதே அது.

மென்மையான துளிர்நிலை மாறி, இளைப் பருவத்தின் தடிப்புப் பரவத் தொடங்கி விட்ட அந்த டாக்டரின் முகத்தில் வெறும் அசட்டுச் சிரிப்பே நெளிந்தது.

நெஞ்சம் விம்மித்தாழ பெருமூச்சொன்றும் நெட்டுயிர்த்து வெளி வாங்கியது.

''எதற்கும் நேரம்—காலம் வர வேண்டாமா?''

—சண்பகத்தை நேருக்கு நேர் நோக்கியவாறே கூறினாள் பூங்கொடி.

''நேரமும் காலமும் தானாவாம்மா வரும்? நாமாகத்தான் அதைத் தேடிப் போகணும்!''

—அவள் இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் பொழுதே வாசல் பக்கத்திலிருந்து கலகலப்பான சிரிப்பொலிகள் மெள்ள மிதந்து வந்தன.

பெண்கள் இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

தேன்மொழியும் மாதவனும் மட்டும் அல்ல, அரவிந்தன் என்னும் வங்காளி இளைஞனும் தன் இளம் மனைவியோடு வந்து கொண்டிருந்தான்.

முதலில் அவனை அவ்வளவு தெளிவாக அடையாளங் கண்டு கொள்ள முடியவில்லை பூங்கொடியினால்; எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே என்னும் மங்கலான நினைவே அவள் மனத்தினுள் ஓடியது.



ஆனால், அரவிந்தன்தான், அவளை மறக்காதவனாக ஆர்வத்துடன் ஓடிவந்து அவளுக்கு வணக்கம் புரிந்தான்.

''இவனைத் தெரிகிறதா டாக்டர்? இவன்தான் என் விளையாட்டுத் தோழன் அரவிந்தன்; கல்கத்தாவிலிருந்து வந்திருக்கிறான்'' — என்றான் மாதவன்.

''கவிஞர் தாகூருக்கு எட்டின உறவு என்பீர்களே அவர் தானே இவர்?'' —என்று கேட்டாள் பூங்கொடி.

''அவனேதான், டாக்டர்! நன்றாக நினைவு வைத்திருக்கிறீர்களே!''

''இப்போதும் 'டேபிள் டென்னிஸ்' பந்தயத்தில் கலந்து கொள்ளத்தான் வந்திருக்கிறாரா?''

''ஆமாம், டாக்டர். ஆனால், சென்ற முறை என்னிடம் தோற்ற மாதிரி இந்த முறை தங்கப்பனிடம் தோற்றுவிடவில்லை.''

''உன்னோடு ஆடியிருந்தால், இந்தத் தடவையும் தோற்றிருப்பேன். நீதான் பந்தயத்திலேயே கலந்து கொள்ளவில்லையே! ஆமாம், நீ ஏன் அப்படி ஒதுங்கிக் கொள்ள வேண்டும்?''—என்று கேட்டான் அரவிந்தன்.

''பாவம், இவர் என்ன செய்வார்? இவருடைய மாமனார் எல்லாப் பொறுப்புகளையும் இவர் தலையிலே கட்டிவிட்டுச் சிங்கப்பூர் சென்றுவிட்டார். இவருடைய அக்காளுக்கு வேறு உடல் நலம் இல்லை. இந்த நிலையில் இவரால் எப்படிப் பந்தயங்களில் கலந்து கொள்ள முடியும்?''—டாக்டர் பூங்கொடியே மாதவனுக்காகப் பரிந்து பேசினாள்.

அரவிந்தன் அவளைத் தன் மனைவிக்கு அறிமுகப்படுத்தினான்.

''சென்ற முறை டேபிள் டென்னிஸ் ஆடச் சென்னை வந்த பொழுது நான் மயக்கம் அடைந்து விழுந்து விட்டதாகக் கூறினேன் இல்லையா? அப்போது உடனே எனக்குச் சிகிச்சை அளித்தவர் இந்த டாக்டர் அவர்கள்தான்.''—தன் கணவன் இவ்வாறு கூறியதும், சுனிதாவும் நன்றியுணர்வோடு பூங்கொடிக்கு வணக்கம் புரிந்தாள்.

சிறிது நேரம் உரையாடிய பிறகு, அந்த வங்காளக்குயில்களுக்கு என்ன வகையான விருந்தளிப்பது என்று சிந்திப்பதற்காகத் தேன்மொழியும் மாதவனும் பின்கட்டுக்குச் சென்றனர்.

அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு சுனிதா—அரவிந்தன் இருவரிடமும் குசுகுசுவென்றாள் பூங்கொடி.

அவள் பேசப்பேச அவர்களுடைய விழிகள் விரிந்தன அகலமாக; சிரிப்பொலிகளும் எழுந்தன மணியோசையாக!

• • • •

மறுநாள்:

இரண்டு பளபளப்பான படகுக் கார்கள் இரண்டு காதல் இணைகளைத் தனித் தனியே சுமந்து கொண்டு, மாமல்லபுரத்தை நோக்கி வெகு வேகமாகப் பறந்து சென்றன.

தன் தமக்கையைக் கவனிப்பதிலேயே தன்னை மறந்து ஈடுபட்டிருந்த மாதவனோடு தான் இப்படியொரு மகிழ்ச்சிப் பயணத்தைத் தனியாக மேற்கொள்ள முடியும் என்று தேன்மொழி நினைக்கவே இல்லை.

அவளுடைய மனம் டாக்டர், பூங்கொடிக்குத் தன்னுள் நன்றி கூறிக்கொண்டது.

அதற்கு ஒப்புதல் முத்திரை அளிப்பதைப்போல மாதவனும் அவளது வாயைக் கிளறினான் காரை ஓட்டிக் கொண்டே!

''என்ன இருந்தாலும் உங்கள் குடும்ப டாக்டர் பூங்கொடி பொல்லாத ஆசாமி தான்!''

''ஏங்க அப்படிச் சொல்றீங்க?''—முன்னிருக்கையில் தன் கணவனோடு நெருங்கியமர்ந்து, அவனது பின் கழுத்தை வருடி, தலை முடியையும் கோதியவாறே கேட்டாள் தேன்மொழி.

பின்னே என்ன? இந்தப் பக்கம் அரவிந்தனைக் கிளப்பி விட்டு, 'கல்கத்தாவிலிருந்து முதல் முறையாக மனைவியோடு வந்திருக்கிற என்னை, மாமல்லபுரத்திற்குக்கூடக் கூட்டிக் கொண்டு போய்க் காட்டக்கூடாதா?' என்று அவன் என்னை வற்புறுத்தி அழைக்குமாறு செய்து விட்டார். அந்தப் பக்கம், என் அம்மாவைத் தூண்டிவிட்டு, 'அந்த வடநாட்டுக்காரர்களை நீ மட்டும் தனியாக அழைத்துக்கொண்டு போய்க் காட்டி வருவது முறையில்லை. தேன்மொழியையும் கூடவே கூட்டிக் கொண்டு போய்த்தான் ஆக வேண்டும்—என்று கண்டிக்கும்படியும் செய்துவிட்டார்.''

''ஏன், அவர் இப்படி நம்மை வெளியூர்ப் பயணத்துக்குக் கிளப்பி விட்டது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?'

''எனக்கு ஒன்றும் பிடிக்காமல் இல்லை தேன்மொழி. ஆனால், என் அக்காள் கிடக்கிற மோசமான நிலையில் மற்றவர்கள் என்ன சொல்லி விடுவார்களோ என்கிற அச்சந்தான் என் ஆசைகளையெல்லாம் அடக்கி ஒடுக்கியிருக்கிறது.''

''சரி; இன்றைக்கு ஒரு நாளாவது உங்கள் அக்காளை மறந்து விட்டு உங்கள் மனத்திலே எனக்கும் கொஞ்சம் இடம் கொடுக்கக் கூடாதா?''—அவள் குரலே மிகவும் பரிதாபமாக இழைந்தது. விழிகளும் பளபளத்தன நீரில் மிதந்து.



மாதவனின் நெஞ்சம் கரைந்து விட்டது பாகாக. ஒரு கை 'ஸ்டியரிங்கை'ப் பற்றியிருக்க மறுகையால் தன் மனைவி

யின் முதுகைப் பரிவோடு பற்றி அணைத்துக்கொண்டான் அவன்.

''என்ன தேன்மொழி அப்படிச் சொல்லி விட்டாய்? என் மனத்திலே உனக்குக் கொஞ்ச இடமாவது..? உன்னை மிகவும் புண்படுத்தி விட்டேன் என்றே நினைக்கிறேன். இல்லாவிட்டால் இப்படிச் சொல்வாயா? ஆனால், என் மனம் என்பதே நீ தானே! நீயே என் மனம்தானே!''

''இந்த ஒரு வார்த்தையே எனக்குப் போதுங்க!''—தேன்மொழி, அளவு கடந்த பூரிப்பிலே மூழ்கியவளாக அவனது திரட்சியான தோள் மீதே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

• • •

மாமல்லபுரத்தை வந்தடைந்ததும், ''முதலில் கோவிலுக்குப் போய் விட்டுத்தான் மறுவேலை''—என்று காரைவிட்டுக் கீழே இறங்கும் பொழுதே கூறினாள் சுனிதா.

''ஆனால், நான் வரமாட்டேன்''—என்று அழுத்தமாகக் கூறிவிட்டான் அரவிந்தன்.

''உங்கள் சங்கதி எனக்குத் தெரியாதா? நீங்கள் வராவிட்டால் என்ன? இதோ தேன்மொழி இருக்கிறார்; இவரை அழைத்துக்கொண்டு நான் கோவிலுக்குப் போகிறேன்.''

''சரி, சரி; அதுவும் நல்லதுதான். ஆனால், தேன்மொழியிடம் என்னைப் பற்றித் தவறாகச் சொல்லி விடாதே! நானும்கோவில்களுக்குப்போகிறவன்தான்; ஆனால், உன்னைப் போல கல் தெய்வங்களை மட்டும் கும்பிட அல்ல; இதோ இந்த மனித தெய்வங்களையும் வழிபட!''—என்ற அரவிந்தன் கோவில் வாசல் பக்கம் குழுமியிருந்த பிச்சைக்காரர்களின் பக்கம் சென்றான்.

அந்த வங்காளக் கணவனும் மனைவியும் புரிந்து கொண்ட வாதங்களைக் கேட்டு மாதவனும் தேன்மொழியும் உள்ளூரச் சிரித்தவாறே ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

தேன்மொழி சுனிதாவுக்குத் துணையாகக் கோவிலுக்குள் சென்றாள்.

மாதவன், அரவிந்தனைப் பின்தொடர்ந்து பிச்சைக்காரர்களின் அருகே போனான்.

அரவிந்தன் தன் பணப்பையிலிருந்து — மணிப்பர்சிலிருந்து —ஒரு ரூபாய் நோட்டுக்கற்றை ஒன்றை வெளியில் எடுத்தான்; அதைப் பார்த்ததுமே கோவில் வாசலில் சோம்பலாக எச்சிலை உமிழ்ந்து கொண்டு—பீடியைப் பற்ற வைத்துக் கொண்டு—உடம்பையெல்லாம் சொரிந்து கொண்டு அமர்ந்திருந்த பல வகையான பிச்சைக்காரர்களும்'



சுறுசுறுப்போடு எழுந்தோடி வந்தனர். அந்த இரண்டு இளைஞர்களையுமே, முற்றுகையிட்டு மொய்த்துக் கொண்டனர்.

அவர்கள் அப்படித் தன்னை இடித்து நெருக்கியும் கூட எரிச்சல் கொள்ள வில்லை அரவிந்தன்; இரக்கவுணர்வோடேயே சிரிப்பைச் சிந்தினான். தொழு நோயாளிகளுக்கும், குருடர்களுக்கும் தலைக்கு ஐந்து ரூபாயும், நொண்டி நுடங்களுக்கு மூன்று ரூபாயும் மற்றவர்களுக்கு ஒரு ரூபாயும், என்று பணத்தை அள்ளி விட்டான் அந்த இருபதாம் நூற்றாண்டுப் பாரி வள்ளல்! குறைந்த அளவு முந்நூறு ரூபாயாவது தீர்ந்திருக்கும் என்று எண்ணிக் கொண்டான் மாதவன்.

பணம் இப்படிக் கணிசமாகக் கிடைக்கிறது என்றதும், பிச்சை எடுக்காதவர்களுக்குக் கூடப் பிச்சை யெடுப்பதற்கு ஆசை வந்து விடுமே என்று அஞ்சினான் அவன். எனவே, கோவில் வாசல் பிச்சைக்காரர்களுக்கு ஓரளவு கொடுத்து முடிந்ததும், அந்த இடத்தை விட்டுத் தன் நண்பனை நகர்த்திச் சென்றான் ஓர் ஒதுக்குப்புறமாக.

அந்த வழியாக இரண்டு மேனாட்டுப் பெண்கள் தோள்களில் பைகளைத் தொங்கவிட்டுக் கொண்டு மெள்ள நடந்து சென்றனர். வெள்ளரிப் பழம்போல் பளபளப்பான அவர்கள் மேனி, சாதாரண வெய்யிலைக் கூடத் தாங்காமல் கன்றிச் சிவந்து எண்ணெய் வழிகிற மாதிரி காணப்பட்டது. மிகக்குறைவான ஆடைகளே அவர்கள் அங்கங்களைச் சிறைசெய்ய முயன்று தோற்றுக் கொண்டிருந்தன.

ஒருத்தி சொன்னாள்!

''இந்தத் தமிழ்நாடு பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக—வளமாக—இருக்கிறது!''

அதற்கு மற்றொருத்தி,

''....ஆனாலும் இந்தத் தொழு நோயாளிகளும், பிச்சைக்காரர்களும் இந்த நாட்டின் அழகையெல்லாம் கெடுத்து விடுவார்கள்போல் இருக்கிறதே!''—என்றாள் சலிப்போடு.

வெள்ளைக்காரிகள் இருவரும் தங்களைக் கடந்து சென்றதும்,

''அவர்கள் பேசிக்கொண்டு போவதைக் கவனித்தீர்களா?''—என்று மாதவனை நோக்கிக் கேட்டான் அரவிந்தன்.

''ஓ! கவனித்தேனே! அவர்கள் சொல்வதும் நியாயந்தானே! தொழு நோயாளிகளும், நொண்டி நுடங்களும் அலைந்து திரிந்து அவதிப்படாமல், ஒரே இடத்தில் இருந்து தங்கள் வயிற்றைக் கழுவிக் கொள்ள உருப்படியான முறையில் என்ன செய்திருக்கிறோம்? அவர்கள் நடமாடுவது நம் நாட்டுக்கே இழுக்குத்தான். அவர்களுக்கு என்று தனி இல்லங்களை அமைத்து வாழ்வைக்

கொடுத்தால்தான் நம்முடைய நாடு வறுமையில்லாத நாடு—நோயாளிகளிடமும் கருணையுள்ள நாடு—என்பதாக நாம் நெஞ்சை நிமிர்த்தி வெளியுலகிலே பறை சாற்றிக் கொள்ளலாம்.''

''நீங்கள் சொல்வதும் சரிதான், மாதவன். பிச்சை எடுப்பதே இழிவு என்கிற மனப்போக்கைத் தோற்றுவிக்கிற முறையில் தான் ஏதாவது ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.''—என்று அரவிந்தனும் ஒப்புக்கொண்டான்.

அவர்கள் கண்டார்களா, அடுத்த சில ஆண்டுகளில், தமிழகத்திலே மாபெரும் அரசியல் மாற்றம் ஒன்று நிகழ்ந்து அறிஞர் அண்ணாவின் அடிச்சுவட்டில் பிச்சைக்காரர்கள்—தொழு நோயாளிகள்—இவர்களுடைய மறுவாழ்வுக்காகக் கலைஞர் அவர்களே மிக நல்ல திட்டங்களைத் தீட்டக் கூடும் என்று?

• • •

சிறிது நேரத்தில், கோவிலுக்குள் சென்றிருந்த சுனிதாவும் தேன்மொழியும் வெளியே வந்தனர்.

நால்வரும் சேர்ந்து, மேற்கு நோக்கி நடந்தனர். கல்லே கலையாகிச் சிரிக்கும் அற்புதங்களைக் கண்டு களித்தனர்.

மலைகளைக் குடைந்து உருவாக்கப் பெற்ற மண்டபங்கள், அந்த மண்டபக் கம்பங்களில் செதுக்கப்பட்ட சிங்க முகங்கள், மலைச் சுவர்களில் ஆங்காங்கே வடிக்கப்பட்ட யானை மற்றும் மனித வடிவங்கள், கல் தேர்கள், கட்டுமானக் கோவில்கள் எல்லாமே விழிகளைக் கவர்ந்தன; வியப்பைக் கொடுத்தன.

முதலாம் நரசிம்ம வர்மன் என்னும் மாமல்லனும், அவனுக்குப் பின் வந்த முதலாம் பரமேச்வர வர்மனும், இரண்டாம் நரசிம்ம வர்மன் என்னும் இராச சிம்மனும் தங்கள் கற்பனைகளையெல்லாம், அங்கே உயிர்பெற்றுச் செழிக்கச் செய்துள்ளனர் சிற்பங்களாக.

பஞ்ச பாண்டவ மண்டபம், அருச்சுனன் தவம், கணேச ரதம், வராக மண்டபம், இராமானுச மண்டபம், தருமராச மண்டபம்; மகிட மர்த்தினி மண்டபம், என்று ஒன்றையும் விடாமல் அந்த இளஞ் சிட்டுகள் பார்த்து மகிழ்ந்தனர்.

எல்லாவற்றையும் பற்றி மாதவனே விளக்கிக் கொண்டு வந்தான்.

சதுரமான தளங்களுடனும், எண்பட்டைச் சிகரங்களுடனும் உள்ள இரதங்களைக் கண்ட போது, அவை திராவிடச் சிற்பக் கலை விமானத்திற்கு இலக்கணமாகத் திகழ்பவை என்பதை அவன் குறிப்பிடத் தவறவில்லை. எல்லாச் சிற்பங்களையும் ஆர்வத்தோடு பார்த்து வந்த போதிலும், மலை உச்சியிலுள்ள ஈசுவரன் கோவிலுக்குத் தன்னால் நடந்துவர முடியாது என்று உட்கார்ந்து விட்டாள் சுனிதா. கி. பி. 1900-க்கு முன்னர் கலங்கரை விளக்கமாகவே பயன்பட்ட அந்தக் கல் ஆலயத்தைக் காண்பதற்கு அரவிந்தன் எவ்வளவோ வற்புறுத்தியும் அவள் கேட்கவில்லை.



பின்னர், தெற்குப் புறமாக மலைப் பாறைகளை விட்டுக் கீழே இறங்கிய அவர்கள், கடற்கரையை நோக்கி நடந்தனர்.

இடை இடையே, இளநீரைப் பருகவும், முறுக்கு முதலான தின் பண்டங்களை வாங்கித் தின்று தெம்பூட்டிக்கொள்ளவும் அவர்கள் தவறவில்லை.

கடல் அலைகள் முத்தமிட்டுத் திரும்புமாறு அமைந்துள்ள கற்கோவிலைக் கண்டதும், அங்கேயே தாங்கள் படம் எடுத்துக் கொண்டால் என்ன என்னும் ஆர்வத்தை வெளியிட்டாள் தேன்மொழி.

அவள் விரும்பியவாறே தேன்மொழியும் மாதவனும் தனியாக நிற்குமாறு வைத்துப் படம் எடுத்தான் அரவிந்தன்.

பின்னர், நால்வரும் சேர்ந்து நின்றும் படம் எடுத்துக் கொண்டார்கள்.

அந்தக் கடற்கரைக் கோவிலையே விடாமல் பார்த்துக் களித்த அரவிந்தன்,

''இங்கே ஒரு புதுமையைக் கவனித்தீர்களா?''—என்று கேட்டான்.

''என்ன புதுமை?''—என்றான் மாதவன்.

''இங்கேயும் புதிதாகத் தெய்வ சிலைகளைத்கொண்டுவந்து வைத்து அர்ச்சனை, ஆராதனை என்று செய்யாமல் விட்டார்களே அதைத் தான் சொல்கிறேன்.''

இதற்கு மாதவன் மறுமொழி ஏதும் கூறவில்லை; புன்னகை மட்டுமே புரிந்தான். தான் ஏதாவது தன் உள்ளத்தில் தோன்றிய உண்மையை ஒளிக்காமல் சொல்லப்போக, அதை நடுநிலையோடு அணுகி ஆராயாமல் 'தங்கள் மனம் புண் பட்டு விட்டது!'—என்று, அந்தப் பெண்கள் இருவரும் வீண்வம்பு இழுத்தால் என்ன செய்வது என்கிற அச்சம் போலும் அவனுக்கு!

• • •

பெண்களின் வாயைக் கண்டுதான் மாதவன் அஞ்சினானே அல்லாமல் அந்தப் பரந்த கடலையோ, அதிலே சீறிப் பொங்கும் பயங்கரமான அலைகளையோ பார்த்து அவன் அஞ்சவில்லை.

ஆம்; சில மணித்துளிகளில், அந்தக் கற்கோவிலுக்கு வடபுறமாக நடந்து சென்று கடலிலே குளிக்கக் கிளம்பிவிட்டான் அவன். அரவிந்தனுக்குக் கடலில் காலை நனைப்பதற்கே நடுக்கம். அவனும் சுனிதாவும் ஒரு சவுக்கு மர நிழலில் ஓய்வெடுக்கச் சென்றுவிட்டனர்.

தேன்மொழி அவர்களோடு செல்லவில்லை. கடல் அலைகளை ஊடுருவிச் செல்லும் தன் கணவனைப் பார்த்தவாறு கரையிலேயே நின்றிருந்தாள்.

அப்போது ஒரு பெரிய அலை ஓங்காரமாகச் சீறிப் படமெடுத்துப் பாய்ந்து வந்தது. அடுத்த கணமே—''அய்யய்யோ! அத்தான்!''—என்று அலறினாள் தேன்மொழி.

(வளரும்)

திறமைக்கும், சிக்கனத்திற்கும் ஒரு பம்பை எப்படி சோதிப்பீர்கள்?

# கிர்லோஸ்கர் 'KD' மோனோப்ளாக் பம்பு




## செலவுகள் மிச்சப்படுவதனால், கிர்லோஸ்கர் கேடி பம்பின் விலைக்கு விரைவில் ஈடுசெய்துவிடலாம்; அதற்காக வாங்கிய கடன் சீக்கிரம் அடைந்துவிடுவது உறுதி.

எளிய டிஸைன், உன்னதமான வேலைப்பாடு, வலுவான மற்றும் கச்சிதமான அமைப்பு போன்ற விசேஷ அம்சங்களின் பயனாக கிர்லோஸ்கர் கேடி பம்புகள், திறன்மிக்கவையாக விளங்கி, அதிக அளவில் தண்ணீர் இறைக்கின்றன.

**கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிமிடெட்**, உத்யோக் பவன், திலக் ரோடு, பூனா-2




வாழ்க்கை என்பது என்ன? ‘வாழ்’ ‘கையை’ நம்பி என்று சொல்வது பொருத்தமாக இருக்கும் இல்லையா? அதனாற்றானோ என்னவோ ‘தன் கையே தனக்குதவி’ என்ற பழமொழி எழுந்தது போலும்!

சித்திரம் தீட்டுவதும் செந்தமிழை எழுதுவதும் இந்தக் கைதானே! அரவணைப்பதும், அடிப்பதும் இந்தச் சின்னஞ்சிறு கைகளே. உலகத்திலுள்ள அத்தனை செயல்களுக்கும், அழிவுக்கும் இந்தக்கரமே காரணம்.



கை இல்லாதவன் கண்ணில்லாதவனுக்குச் சமமாவான். கையற்ற வெறும்மெய் இருந்து மனிதனுக்கு என்ன பயன்? நாட்டைக் காக்கவும், வீட்டைக் காக்கவும் கைகள்தாமே மூல காரணம். ‘செத்தும் கொடுத்தான் சீதக்காதி’ என்பார்கள். இப்படி வரையாது வழங்கியதாலன்றோ கடையேழு வள்ளல்களின் கரங்கள் சிவந்திருந்தன.



‘கைது’ என்பது கூடக் கை என்பதிலிருந்து தானே வந்திருக்க வேண்டும்? குற்றவாளியின் கைகளைக் கட்டி—விலங்கிட்டு அழைத்துச் செல்வதாலும், கைகளைக் கொண்டு அவனைக் கைது செய்வதாலும் கைதி என்று சொல்லலாமே! கள்வனைக் கையும் மெய்யுமாகப் பிடித்தார்கள் என்று நாம் கேள்விப்படவில்லையா என்ன?



‘இவர் தொட்டது துலங்கும்’ என்பார்கள்; ‘இவர் கைராசிக்காரர்’ என்று புகழ்வார்கள். ‘ஐயோ, இவரா? இவர் கைபட்டால் அதோ கதிதான்!’ என்று அஞ்சி ஓடுவாரும் உளர்.



நாகரிக மோகம் தலைவிரித்தாடும் இந்நாளில் கைகளுக்குத்தான் எத்தனை அணி வகைகள்! கைவிரல் நகங்களைச் சிலர் சாமியார் போல வளர்த்துக்கொண்டு, அதற்கு மெருகு ஏற்றுவதும், விதவிதமான மோதிரங்களை அணிந்து அழகு பார்ப்பதும் நாம் அன்றாடம் காணும் காட்சியல்லவா? ‘குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்’ என்பது இதனாலன்றோ?




‘ஒரு முழம் பூ’ என்று பூக்காரரிடம் வாங்கும்போது, அவர் தம் முழங்கையால் அளந்து தருகிறார். ஒரு பிடி சோறு போடுவதும் இந்தக் கைதான். கடைசியில் இந்த உடம்பு சாம்பலாவதும் ஒரு கைப்பிடி அளவுதானே!

பண்டைக்காலத்தில் மனிதன் பேசுவதற்குமுன் முகக்குறிப்புக்கள், கை அசைவுகள் முதலான சைகைகள் மூலமாகத் தன் கருத்துக்களை உணர்த்தி வந்தான். நாளடைவில் அவன் பேசத் தெரிந்த பிறகும்கூட கை அசைவுகள் நிகழ்ந்து கொண்டுதானிருக்கின்றன.

கை அசைவுகள் என்றதும், நடனக்கலை நமக்கு நினைவுக்கு வருகிறது. நடன நங்கை கை அசைவுகளின் மூலமாகக் கருத்தை உணர்த்துவதைக் கண்டு மகிழ்ந்து நாம் கைதட்டுகிறோம். கை நடிப்புகளில், ஒரு கையினால் அசைத்துக் காட்டுதல், இரு கைகளால் அசைத்துக் காட்டுதல் என்னும் பிரிவுகளை அக்காலத்திலேயே தமிழர்கள் பகுத்து வைத்திருந்தனர்.

ஒரு கையினால் நடித்துக்காட்டும் நடிப்புகள் முப்பத்து மூன்று வகையாகவும், இரு கைகளால் அசைத்துக் காட்டும் நடிப்புகள் பதினைந்து வகைகளாகவும் கூறி, இவற்றுக்கெல்லாம் இலக்கணமே அமைத்துப் பாடியிருக்கின்றனர் பண்டைப் புலவர்கள்.

கை முதலியவற்றால் நடித்துக் காட்டுவதில் நடிப்பவர் நோக்கத்

திணை மூவகையாகக் கூறுகின்றனர் புலவர்கள். 1. அழகுக்காக நடிப்பதை 'எழிற்கை' என்றும், 2. கருத்தை உணர்த்துவதற்காக நடிப்பதை 'பொருட்கை' என்றும், 3. இந்தக் கருத்து செயற்படுவதற்காக நடிப்பதை 'தொழிற்கை' என்றும் வகுத்த நம் முன்னோரின் நுண்ணறிவை என்னென்பது.

நாட்டியம் என்று சொல்லும் போதே அபிநயம் நம் கண்முன் வரும். அழகிய கைகளின்றேல் ஆட்டமேது? இன்னிசை கீதங்கள் ஏது? குருவைக் கண்டால் மாணவன் கைகட்டி வாய் பொத்தி நிற்பதும் பைத்தியத்தைக் கண்டால் கைகொட்டி வாய்விட்டுச் சிரிப்பதும் நாம் காணாததா என்ன?

கும்பிடுவதும் இந்தக் கை தான்; கொலை வாளை எடுப்பதும் இந்தக் கை தான். கைநாட்டு, கையூட்டு (லஞ்சம்), கைவரிசை, கைவண்டி, எல்லாம் இந்தக் கைதான்!

உறவுக்குக் கை கொடுப்போம் என்பதும், நேசக்கரம் நீட்டுவோம் என்பதும், கை விரிப்பு, கைதட்டல், கைப்பற்றுதல், காட்டிக் கொடுத்தல், கைக்குழந்தை, கைக்குட்டை, கைச்சட்டை, கைப்பை, கைத்தடி, கையெழுத்து, கைவண்ணம் ஆகியவற்றுக்கும் கைதான் காரணம்.

'' உடுக்கை இழந்தவன் கை
போல ஆங்கே
இடுக்கண் களைவதாம்
நட்பு. ''

என்று வள்ளுவரும் கையின் தன்மையைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

காதலி தன் தோழியிடம் '' கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி '' என்று ஆண்டாள் திருப்பாசுரத்தில் வருவதும், '' வளைமுன் கை பற்றிக் கைநெகிழப் பொய்யாக வீழ்ந்தேன், அவன் மார்பில்; '' கொடிச்சிரியர் கூப்பி வரை தொழுகை போல் '' என்ற அடிகள் கலித்தொகையில் வருவதும் கைகளைப் பற்றியேயாம்.



வானளாவக் கட்டடத்தை எழுப்புவதும் இடித்துப் பொடிப் பொடியாக்குவதும் இந்தக் கைகளின் செயலேயாகும்!

ஒரு கையின் ரேகையைக் கொண்டே எதிர் காலத்தையும் கூறுகிறார்கள். ஏமாற்றுபவனையும் கண்டு பிடிக்கிறார்கள். கையைக் கொண்டே அவன் வாழ்க்கையை வருணிக்கும் 'கைரேகை' சோதிடர்களைப் பார்த்திருக்கிறோம். ஒருவனது உடல் நிலையைக் காண மருத்துவர் 'கைநாடி'யைப் பிடித்து அறிவதைக் காண்கிறோம். பிழை புரிந்தால் அழ வைக்கக் 'கையை நீட்டு' என்று மிரட்டும் ஆசிரியரை நாம் மறந்து விட்டோமா என்ன?

கைப்பட எழுதப்படுவதால் 'கையெழுத்துப் பிரதி' என்றும், கையைப் போல சுட்டிக் காட்டுவதால் 'கைகாட்டிமரம்' என்றும் கூறுகிறோம். கொலை, கொள்ளை, முதலிய கொடுமைகளைப் புரியும் கள்ளர்களைக் கண்டுபிடிக்கக் 'கைரேகை'யே பயன்படுகிறது. கையினால் செய்யப்படும் தொழிலுக்குக் 'கைத்தொழில்' என்றும், 'கைத்தறி' என்றும் வழங்கப்படுகிறது. நாமக்கல் கவிஞர், 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள், கவலை உனக்கில்லை ஒத்துக் கொள்' என்று பாடினார்.

தானும் உண்ணாமல் பிறர்க்கும் அளிக்காமல் வாழும் உலோபியைப் பார்த்து, '' எச்சில் கையினால் கூடக் காக்கையை ஓட்டாதவன் '' என்று கூறவில்லையா என்ன?

காந்திக்கு 'வலக்கை' போன்றவர் நேரு என்பர். 'உனக்குக் கையா இல்லை? உழைத்துச் சாப்பிடேன்' என்று கூறாதவருண்டா?

அமெரிக்கப் பெண்மணி ஹெலன் கெல்லரைப் பற்றி நாம் அறிவோம்; அவரது வாழ்க்கை வரலாற்றில் ஒருபகுதி:

'' நிசப்தமான இருளிலே ஹெலன் கெல்லர் வாழ்ந்தாள். ஆயினும் தன் சொந்தக் கையைக் கொண்டே அழகையும் வலிமையையும், பலவீனத்தையும், விநோதத்தையும் அவள் உணர்ந்து கொள்ள முடிந்தது. அவள் கையே அவளுடைய உலகத்தை மற்றவருடைய உலகத்தோடு ஒட்ட வைத்தது. கை என்ற சொல்லிலேதான் எவ்வளவு சரித்திரம் அடங்கியிருக்கிறது. கை நூற்கிறது, நெய்கிறது, உழுகிறது, அறுக்கிறது. களிமண்ணைச் சுவராக எழுப்புகிறது. காட்டு மரங்களைக் கூரையாக ஏற்றி விடுகிறது. கைக்குறிப்பு, கைத்தொழில், கையாளுதல், கைவேலைப்பாடு, கைவிலங்கு இப்படி எத்தனை விஷயங்களில் கை இணைகிறது. ஆசியும், சாபமும், அடியும், அழிவும், ஆலய ஆக்கமும், பலிபீட அமைப்பும், மண்ணுலகை உருவும் திருக்கரத்தின் காரியமே. நீராவி எஞ்சினில் விசைப் பிடியைப் பிடித்திருக்கும் டிரைவரின் கையை நம்பி அதனிடம் தங்கள் உயிரை எல்லாம் ஒப்படைத்து விட்டுத் தினந்தோறும் எத்தனை எத்தனை மக்கள் பயணம் செய்கிறார்கள்.''

கையைப்பற்றிப் பலநாட்டுப் பழமொழிகளாவன:

'' முறிந்த கையைக் கொண்டு உழைக்க முடியும்; ஆனால், உடைந்த உள்ளத்தைக் கொண்டு உழைக்க முடியாது'' என்பது பாரசீகப் பழமொழி. '' மூடின கைகளுடன் மனிதன் உலகிற்கு வருகிறான்; திறந்த கைகளுடன் அவன் அதை விட்டுப் போகிறான் ''. இது இந்தியப் பழமொழி. '' ஒருகை மற்ற கையைக் கழுவுகிறது. இரண்டும் சேர்ந்து முகத்தைக் கழுவுகின்றன '' என்று அல்பேனியாவும், '' வாயும் கையும் சுத்தமாக இருந்தால் உலகமுழுவதும் செல்லலாம் '' என்று எஸ்தோனியாவும் சொல்கின்றன.



கையைப்பற்றித்தான் எத்தனை மொழிகள் :

(1) அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டது போல.

(2) அன்பற்ற மாமியாருக்குக் கால் பட்டால் குற்றம் கைபட்டால் குற்றம்.

(3) இரும்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்த கையும் சும்மா இரா.

(4) வெறும் கை முழம் போடுமா ?

(5) கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான்; மரம் ஏறிக் கை விட்டவனும் கெட்டான்.

(6) கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு.

(7) குட்டுப் பட்டாலும் மோதிரக் கையாலே குட்டுப் பட வேண்டும்.

மாங்குயில் கூவி இவ்
வண்ணத் தமிழ்மொழி

விற்கும்—இந்த
வையமெலாம் அதைக்
கற்கும்—களி

தாங்காது தோகை
விரித்தாடி மாமயில்
நிற்கும்.

—பாவேந்தர் பாரதிதாசன்

(8) கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.

(9) கைப்பொருளற்றால் கட்டினவளும் பாராள்.

(10) கையிலே காசு வாயிலே தோசை.

(11) கையில் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம்பேர்.

(12) கையில் பிடிப்பது துளசி மாலை கக்கத்தில் இடுக்குவது கன்னக் கோலை.

(13) சித்திரமும் கைப் பழக்கம், செந்தமிழும் நாப் பழக்கம்.

(14) செருப்பால் அடித்தாலும் திருட்டுக் கை நிற்காது.

(15) தவிட்டுக்கு வந்த கைதான் தங்கத்துக்கும் வரும்.

எனவே மெய்யினில் கையின்றேல் மேதினியில் வாழ்வது கடினம்!



# "இராசேந்திரா" போர்ப் பயிற்சிக் கப்பல்

இராசேந்திர சோழன்!

ஈழத்தை வென்று ஈழ மன்னன் ஐந்தாம் மகிந்தனைச் சிறைப் படுத்திச் சோழ நாட்டுக்கு அனுப்பியவன்; தென்னகத்தில் பாண்டியரையும், சேரரையும் வென்றவன். தமிழ்நாடு முழுவதுக்கும் ஈழத்துக்கும் மன்னனாகத் திகழ்ந்தவன்; "கங்கை கொண்ட சோழன்" என்று புகழப்படுபவன். கப்பல் வாணிகத் தலங்களாக இருந்த கடாரம் போன்றவற்றைக் கைப்பற்றி வணிகவளம் பெருக்கியவன். இத்தகைய சிறப்புகளுக்குரியவன் பெயரிலே ஒரு போர்க் பயிற்சிக் கப்பல் உருவாக்கப்பட்டுத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களிடம் அண்மையில் அளிக்கப் பட்டிருக்கிறது.

"இராசேந்திரா" என்னும் இக்கப்பல் விசாகப்பட்டினத்திலுள்ள இந்துஸ்தான் கப்பல் கட்டும் நிறுவனத்தினரால் கட்டப்பட்டது. கடற்படை வீரர்களுக்குப் பயிற்சி அளித்து, நாடு காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. "இராசேந்திரா" இதற்குமுன் அறுபத்தேழு ஆண்டுகள் பயிற்சிக் கப்பலாக இருந்த "டப்பரின்" பழுதாகிவிட்டதால், "இராசேந்திரா" உருவாக்கப்பட்டிருக்கிறது.

மேலை நாட்டினரின் உதவி எதுவுமில்லாமல் இந்திய அதிகாரிகளின் மேற்பார்வையில் கட்டப்பட்ட இந்தக் கப்பலின் மதிப்பு ரூ. 2 கோடியே 11 இலட்சம். இதில் ஒரே சமயத்தில் 270 போர் வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கலாம். இவர்களைத் தவிர 160 பணியாளர்களும் இந்தக் கப்பலில் இருப்பார்கள். 300 பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய குளிர் சாதனத் திரைப்பட அரங்கம் கப்பலில் இருக்கிறது.

நீச்சல் குளம், விளையாட்டுத் திடல், தீயணைப்புக் கருவிகள், நவீன போக்குவரத்து-ஒலிபரப்புச் சாதனங்கள், நவீன இயந்திரச் சாதனங்கள் முதலிய வசதிகளைக் கொண்ட இந்தப் போர்ப் பயிற்சிக் கப்பலின் நீளம் 374 அடி, அகலம் 59 அடி.

பாராண்ட தமிழ் மன்னன் பெயரில், இந்தியப் போர் வீரர்கள் பயிற்சி பெறுவதற்காகக் கப்பல் ஒன்று கட்டப்பட்டிருக்கிறதென்றால் நமக்கெல்லாம் பெருமையாக இல்லையா?


இங்கே
ஓர்
ஆராய்ச்சி!

கண்ணாடிக் குடுவைகள், குப்பிகள் வண்ணத் திரவங்கள் இவைகளோடு அந்த அமைதியான விஞ்ஞான ஆய்வுக்கூடத்தில் மாணவர்கள் சுறுசுறுப்பாக இயங்குகின்றனர். உள்ளே நுழைகிறோம்.

ஒரு சோப்புக்கட்டியை வைத்துக் கொண்டு அதில் என்னென்ன இரசாயனங்கள் அடங்கியிருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து, பிறகு 'மாதிரி' சோப்பு ஒன்றும் உருவாக்குகின்றனர். இதே போல நிலத்துக்குப் போடும் உரத்தையும், எண்ணெய்யையும், தண்ணீரையும் சோதித்து அதன் தன்மைகளை அறிந்து கொண்டிருக்கின்றனர்.

சென்னை அடையாறிலுள்ள 'இரசாயனத் தொழில் நுட்பக் கல்வி நிலையத்தில்' (Institute of Chemical Technology) இக்காட்சிகளைப் பார்க்கும்போது நமக்குள்ளே ஒரு புத்துணர்ச்சி உண்டாகிறது. நாளையச் சமுதாயம் செழித்து வளர இன்றைய மாணவர்கள் பல துறைகளில் சிறந்து விளங்கும் வகையில், இத்தொழில் நுட்ப நிலையம் மாணவர்களுக்குத் தக்க பயிற்சி அளித்து வருவதைப் பாராட்டவேண்டும்.

1963-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்நிலையத்தில் இப்போது இருநூறு மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். இவர்களில் சிலருக்கு உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே முதலாவதாகத் தோன்றிய இந்நிலையத்தில், நான்கு பிரிவுகள் உள்ளன. பௌதிகம், இரசாயனப் பொறியியல், இரசாயன மாற்றம் ஆகிய செய்முறைக் காட்சிக் கூடங்களும், தொழிற் பயிற்சிக் கூடம் ஒன்றும் உள்ளன. இவைகளில் எட்டு விரிவுரையாளர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றனர்.

ஒரு உரத்தொழிற்சாலை அல்லது பெட்ரோலியத் தொழிற்சாலை துவங்க வேண்டும். அவற்றுக்கு அடிப்படையிலிருந்து என்னென்ன தேவை என்பதை ஒன்றுவிடாமல் குறித்து, அதன் அமைப்பு முறைகளை விரிவாகக் காட்டி ஒரு திட்ட அறிக்கை (Project Report) யினைத் தயாரிக்க வேண்டும். இந்த அறிக்கையினை இங்கு பயிலும் மாணவர்களே தயாரிக்கின்றனர். ஒழுங்காக 'டைப்' செய்யப்பட்ட இந்த அறிக்கைகள் இங்கு ஏராளமாக உள்ளன. தொழில் தொடங்க வேண்டும் என்று எண்ணுபவர்களுக்கும், தொழில் சம்பந்தமான யோசனை கேட்பவர்களுக்கும் இந்த அறிக்கைகள் மிகவும் பயன்படுகிறது.

இரசாயத் தொழிலுக்கு வேண்டிய தொழில் நுட்ப வல்லுநர்களைப் பெறுவதுதான் இந்தப்படிப்பை ஏற்படுத்தியதின் முக்கிய நோக்கமென்றாலும், எந்த முறையில் பயிற்சி தருவது என்பதைக் கேட்டறிவதே இதன் முதல் நடவடிக்கையாக அமைந்தது. இதற்காக இரசானயத் தொழில்களைச் சார்ந்தவர்களுக்கு ஒரு வினாப்பட்டியல் தயாரித்து அனுப்பப்பட்டது.

இரசாயனத் தொழில் நிபுணர்களுக்குப் பயிற்சி அளிக்க இந்திய அரசு வகுத்தளித்த திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, இந்த நிறுவனத்தை அமைப்பதற்கான யோசனைகளைக் கூற, மாநிலத்தில் இரசாயத் தொழில்களைச் சேர்ந்த முக்கியமானவர்களையும், இரசாயனப் பொறியியல் தொழில் நுட்பப் பேராசிரியர்களையும் கொண்ட ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டது.

பல நடுத்தரத் தொழில்களையும், சிறு தொழில்களையும் தொடங்க வாய்ப்பு அளிப்பது இரசாயத் தொழிலில் ஒரு சிறப்பு அம்சமாகும். மிகச் சிறந்த வளர்ச்சி அடைந்துள்ள அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கூட, அடிப்படை ரெசின், பிளாஸ்டிக் போன்றவை சில பெரிய இரசாயன நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன என்றாலும் பல சிறு நிறுவனங்கள் இந்த இரசாயனங்களைப் பயன்படுத்தி வர்ணங்கள் வார்னிசுகள் போன்றவைகளைச் செய்வதில் ஈடுபட்டுள்ளன. பிளாஸ்டிக் இணைப்பு, சோப்பு உற்பத்தி, மின்முலாம் பூசுதல் போன்றவைகளிலும் இதே நிலைமை இருந்து வருகிறது. எனவே, சிறு அளவு தொழிற்சாலைகளைத் தொடங்க—நடத்த ஆற்றல் உள்ளவர்களையும் பெற வேண்டும் என்பதுதான் இந்த 'டிப்ளாமா' படிப்பின் நோக்கமாகும்.

ஆந்திரா, கேரளா, பம்பாய் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் இங்கு வந்து படிப்பதிலிருந்து இந்தச் சென்னை நிலையத்தின் பெருமையை நன்கு உணரலாம். இங்கு படிக்கும் ஒரு பகுதி மாணவர்கள் பிற இரசாயனத் தொழிற்சாலைகளிலும் பயிற்சி பெறுகிறார்கள். பாரி கம்பெனி, நெய்வேலி நிறுவனம், இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், ஷாவாலஸ் கம்பெனி, சென்னை அரசினர் கண்ணாடித் தொழிற்சாலை, அடிசன் பெயின்ட்ஸ், சேலம் மேட்டூர் கெமிக்கல்ஸ் முதலிய இரசாயனத் தொழிற்சாலைகளில் பயிற்சி பெறுகின்றனர். இந்தப் பயிற்சிக்காலம், இருபது வாரங்களாகும்.

இங்குள்ள தொழில் நுட்ப நிலையத்தைப் பிற மாநில அதிகாரிகளும், வெளிநாட்டினரும் பார்த்துப் பாராட்டியிருக்கின்றனர். சிலர் இதைப்போலத் தங்கள் மாநிலங்களிலும் துவக்க யோசனை கேட்டுள்ளனராம்.

இந்த இரசாயனத் தொழில் நுட்பக் கல்வி நிலையத்தோடு சர்க்கரைத் தொழில் நுட்பக் கல்வி நிலையமும் (Sugar Technology) கடந்த ஆண்டு இணைக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான நிலையமொன்று கான்பூரில் முதன்முதல் அமைக்கப்பட்டது. சென்னையில் இரண்டாவது நிலையமாகத் திகழும் இதனை மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் தொழிலதிபர்கள் பலர் முன் வந்துள்ளதையும் குறிப்பிடவேண்டும்.

கரும்பிலிருந்து சர்க்கரை வரையிலுள்ள எல்லாவிதமான நுணுக்கங்களும் இங்குக் கற்றுத் தரப்படுகிறது. இங்கே பயிலும் மாணவர்கள் நேரடிப் பயிற்சிக்காகச் சர்க்கரைத் தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகின்றனர். திருச்சி, மதுரை, வடார்க்காடு, தென்னார்க்காடு, செங்கல்பட்டு, கோவை, தஞ்சை மாவட்டங்களிலுள்ள சர்க்கரை ஆலைகளில் இருபது வாரங்களுக்குப் பயிற்சி பெறுகின்றனர்.

**இங்கு பயின்ற மாணவர்கள் இன்று பெரிய தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருகின்றனர்.**

இங்கு பயிற்சி பெற்று வெளி வருகின்ற ஒரு மாணவனுக்கு இரசாயனத் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட எல்லா விவரங் களும் தெரியும். அதனால் அவனுக்கு உடனே வேலை கிடைத்து விடுகிறது. ஆண்டு தோறும் இந்த நிலையங்களுக் காகத் தமிழ்நாடு அரசு ரூபாய் 2 இலட்சத்து 50 ஆயிரம் செலவு செய்கிறது.


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,

தமிழரசு அலுவலகம்,

அரசினர் தோட்டம்,

சென்னை - 2


"அடுத்த ஆண்டில் பிளாஸ்டிக், பெட்ரோ கெமிக்கல் போன்ற தொழில் நுட்பங் களைக் கற்றுத் தருவதற்கான புதிய திட்டங்கள் உள்ளன. மாணவர்கள் இத்துறையில் சிறந்து விளங்க அரசு உதவிகள் செய்து வருகிறது. இந்த இரசாயனத் தொழில் நுட்பக் கல்வி நிலையம், வருங்கால இரசாயனத் தொழில் வளத் துக்குப் பெருந்துணை புரியும் என்று பெருமையோடு சொல்லி கொள்ள விரும்புகிறேன்." என்கிறார் இதன் தனி அலுவலர் திரு எஸ். வரதராசன்.

ஆக்கப்பணிகளுக்கு ஊக்க மூட்டும் வகையில் இத்தொழில் நுட்பக் கல்வி நிலையம் விளங்கி வருகிறது. தொழில் வளம் மிகுந்த மாநிலமாகத் தமிழகம் திகழ்வதற்கு இது போன்ற நிலை யங்கள் பெரிது உதவும் அல்லவா?

## தியாகிகளுக்கு

இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது சிறை சென்ற தியாகிகளுக்கு, கிராம வளர்ச்சித் துறையில் சமூக நல ஊழியர் பணி தரப்பட்டது. ஏனைய அலுவலர்களுக்கு நிர்ண யிக்கப்பட்டது போலவே, தியாகிகளான ஊழியர்களின் பதவி ஓய்வு பெறும் வயதும் 55 என்று நிர்ணயிக்கப் பட்டிருந்தது.

## அரசு தரும்

பல விடுதலைப் போராட்டத் தியாகிகள் தங்களது ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கி- அவர்கள் இந்திய விடுதலைக்கு ஆற்றியுள்ள அருஞ்சேவையை எண்ணி-சமூக நல ஊழியர்களாகப் பணிபுரியும் தியாகி களின் ஓய்வு வயதை 60 ஆக உயர்த்தத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

## புதுச் சலுகை

எனவே, 1970-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ஆம் தேதியன்று அல்லது அதன் பிறகு சமூக நல ஊழியர்கள் அலுவலில் இருந்து ஓய்வு பெற்றிருந்தால், அவர்கள் மீண்டும் அதே அலுவலில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அவர்கள் 60 வயது வரை பணியாற்றலாம்.




வேளாண்மை வினாக்களோ கேட்கப்பட வேண்டும்

வினா :—'போர்மியம் டெனக்ச்' என்ற பூ நார்ச் செடி பயிரிட நாற்று எங்கு வாங்கலாம்? அச் செடியிலிருந்து சணல் தயாரிக்கும் சிறுதொழில் இயந்திரம் எங்கு கிடைக்கும் ?

—பி. எஸ். ஆறுமுகச்சாமி,
சிவகாசி.

விடை :—'போர்மியம் டெனக்ச்' என்ற செடியை விதையின் மூலமாகவும், தாய்ச் செடியை வேருடன் பிரித்து நடுவதின் மூலமாகவும் இனப்பெருக்கம் செய்யலாம். விதையின் மூலம் வளரும் செடி மெதுவாகவே வளரும். இதன் விதைகள் பெற உதக மண்டலத்தில் உள்ள அரசினர் பூங்கா காப்பாளர் அவர்களுக்கு எழுதிப் பார்க்கவும். விதை இருந்தால் அவர் அனுப்பி வைக்கக்கூடும். ஆனால் இச் செடி உதகை போன்ற குளிர்ச்சியான பகுதியிலேயே நன்கு வளரக்கூடும். சிவகாசியில் இச்செடி நன்கு வளருமா என்பதைச் சோதனை செய்து பார்த்தால்தான் கூற முடியும். இதுபற்றி உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலரின் ஆலோசனையைப் பெறுவதே நல்லது. இச் செடியிலிருந்து நார் எடுக்க இயந்திரம் தேவையில்லை. இச்செடியிலிருந்து நார் எடுக்கும் இயந்திரம் இருப்பதாகவும் தகவல் இல்லை. எனவே நார் எடுப்பதற்குக் கீழ்க்கண்ட முறையை மேற்கொள்ளவும்.



நன்றாக முற்றின இலைகளை வேரிலிருந்து 2 அங்குலம்வரை விட்டு, அறுத்து எடுத்து, கொதிக்கும் நீரில் சுமார் அரை மணி நேரம் வைத்திருக்க வேண்டும். அதன்பின் சில நிமிடங்கள் குளிர்ந்த நீரில் ஊற வைக்க வேண்டும். பின்பு 3 அல்லது 4 இலைகளை ஒன்றாகக் கட்டிக் கொண்டு மரப்பலகையின் மீது வைத்து, மரத்தினால் செய்யப்பட்ட உருளைகளைக் கொண்டு நன்றாக அடிக்க வேண்டும். அவ்வாறு அடிக்கும்போது அடிக்கடி தண்ணீர் விட்டு இலைகளை அலசவேண்டும். இதனால் நாரில் ஒட்டியுள்ள தசைகள் அகலும். இவ்வாறு எடுக்கப்படும் நார்களைக் குளிர்ந்த நீரில் நன்கு அலசி, பின்பு வெய்யிலில் உலர வைக்க வேண்டும். உலர்ந்த நார்களைக் கொண்டு கயிறு, சரடு ஆகியவை தயாரிக்கலாம். இக் கயிறுகளும், சரடுகளும் மிகவும் உறுதி வாய்ந்தவையாக இருக்கும்.

வினா :— தென்னார்க்காடு மாவட்டத்தில் நெல் தரிசு நிலங்களில் பி.ஆர். எஸ். 72 பருத்தி பயிரிடலாமா? மாசி மாதத்தில் விதைக்கலாமா ? நெல் அறுவடைக்குப் பின் வயலை உழுது விதைப்பதா ? அல்லது உழாமல் விதைப்பதா ? விதைப்பது முதல் அறுவடை வரை மேற்கொள்ளவேண்டிய எல்லா முறைகளையும் அடுத்து வரும் 'தமிழரசு' இதழில் விளக்கமாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

—ஆ. பச்சமுத்து,
மன்னம்பாடி,
தென்னார்க்காடு மாவட்டம்.

விடை:— தென்னார்க்காடு மாவட்டத்தில் நெல் அறுவடைக்குப் பிறகு பி.ஆர்.எஸ். 72 பருத்தி பயிரிடலாம்; மாசி-பங்குனி மாதங்களில் விதைக்கலாம். தாங்கள் கேட்டுள்ள எல்லா விவரங்களும் 'தமிழரசு' பிப்ரவரி 16-ஆம் தேதிய இதழில் பக்கம் 24-ல் வெளியிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பருவத்திலும்செய்யவேண்டிய பயிருக்கு, வேண்டிய விளக்கங்கள் குறைந்தது 15 நாட்களுக்கு முன் கூட்டியே 'தமிழரசு' இதழில் வெளியிடப்படுவதால், தமிழரசு இதழைத் தொடர்ந்து படித்து வந்தால், 'பருவத்தே பயிர் செய்' என்ற பழமொழிக்கேற்ப, முன்கூட்டியே விவரங்களைத் தெரிந்து கொண்டு சாகுபடி செய்து பயன் பெறலாம்.

(குறிப்பு.—பி.ஆர். எஸ். 72 பருத்தியைப்பற்றி கடலூரிலிருந்து திரு உதயகுமார் என்பவரும், தஞ்சை மாவட்டம் மடிகை கிராமத்திலிருந்து திரு சந்திரபோஸ் என்பவரும் கேட்டுள்ளதால், அவர்களையும் 'தமிழரசு' பிப்ரவரி 16-ஆம் தேதிய இதழில் பக்கம் 24-ஐ படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.)




வெளிநாட்டார் போற்றும்
பயன்பொருள்
கலைக்கூடம்
குறளகம்
கதர் கைத்தொழில் அங்காடி, சென
கைவண்ணப் பொருள்க
களஞ்சியம்
20461
20462 20463

# வெண்பாப் போட்டி

## 29. காரம் இனித்திடுமே காண்

''கற்கண்டும் தேனும் கரும்பும் இனிக்காதே
நற்செல்வர் நாவில் நடைபார்தைக்—கற்குவியல்
ஓரம் படுத்துறங்கும் ஒன்றுமில்லார்க்(கு) உப்பில்ஆ
காரம் இனித்திடுமே காண்.

—கு. சுலோசனா, தேவத்தூர்.

முற்காவார் கொண்ட முயற்சி பிழைபடுமே
சொற்காவார் வாழ்வு சுவைகெடுமே—தற்காவாத்
தாரம் கசந்திடுமே சான்றோர்க்குச் செய்தஉப
காரம் இனித்திடுமே காண்.

—செ. ஜெய்லானி, நாகர்கோவில்.

பொன்னிற மேனியும் பொக்கைவாய்த் தேன்சிரிப்பும்
பின்னும் நடையழகும் பெற்றசேய்—தன்னாசை
தீரவே வாய்திறந்து தீந்தமிழைப் பேசுமலங்
காரம் இனித்திடுமே காண்.

—மு. நாராயணன், சத்திரப்பட்டி.

முப்பாலும் முக்கனியும் முத்தமிழும் தித்திக்கும்
ஒப்பேதும் இல்லாத ஒண்டமிழில்—செப்பரிய
சேரத் திளங்கோவன் செய்த சிலப்பதி
காரம் இனித்திடுமே காண்.

—சி. வேலாயுதம், கொத்தமங்கலம்.

மக்கள் குரலே மகேசன் குரலென்னும்
இக்கருத்தை அன்புடன் ஏற்றவர்கள்!—பக்குவமாய்க்
கூறும் அறிவுரையில் கோபமிருந் தாலுமதி
காரம் இனித்திடுமே காண்!

—நெல்லை ஆ. கணபதி, சென்னை-15.

எந்நாளும் சிந்தித்(து) இரண்டொன்றே பெற்றெடுத்துப்
பொன்னாகைப் பேணிப் புரப்பார்க்குச்—செந்நாப்போ
தாரின் திருக்குறளில் 'மக்கட்பே(று)' என்னு(ம்) அதி
காரம் இனித்திடுமே காண்.

—நா. கா. சோமசுந்தரம், திண்டிவனம்.



### பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :

செல்வி கு. சுலோசனா, 10-ஆம் வகுப்பு,
மணிமேகலை இளங்கோ உயர்நிலைப் பள்ளி,
தேவத்தூர் (அஞ்சல்) மதுரை மாவட்டம்.

சீரான பூஞ்சோலை சீர்த்திமிகு நீர்க்கேணி,
மாருது புள்ளினங்கள் வாழ்த்துகின்ற—தீராத
பார்புகழும் பண்ணேசை, பாங்காக வண்டினரீங்]
காரம் இனித்திடுமே காண்.

—உலகத் தமிழ்க் கழகம், தளவாய்ப் பட்டணம்.

மோனை எதுகையுடன் முத்தமிழைப் பேச்செழுத்தால்
தானைத் தலைவரண்ணு தம்பியர்கள்—தேனமுதாய்
வாரி இறைக்கின்ற வண்ணமிகு சொல்லலங்
காரம் இனித்திடுமே காண்.

—சேரை இரத்தினகுமார், பம்பாய்-5.

புற்றீசல் ஏடுகளில் போதோட்டும் பொற்றெடியே!
நற்றமிழ்க் காவின்கண் நாம்புகுந்து—சுற்றிடுவோம்
சேரன் சுவைகூட்டிச் செய்த சிலப்பதி
காரம் இனித்திடுமே காண்.

—தி. வெ. ஸ்ரீரங்கன், பெரணம்பாக்கம்.

இல்லை எனவந்தோர் இன்னெருவர் இல்நாடிச்
செல்லும் நினைப்பெல்லாம் சென்றேடச்—செல்வரெல்லாம்
ஈரமனம் கொண்டந்த ஏழையர்க்குச் செய்யுமுப
காரம் இனித்திடுமே காண்.

—சி. சௌ. கருப்பன்செட்டி, திருச்சி.

மன்னர்க் கொருநீதி மக்கட்கோ வேறென்னும்
இன்னு நிலைமாற்றி இந்நாட்டில்—பன்னலமும்
சேரக் குடிதழுவும் செங்கோல் அரசினதி
காரம் இனித்திடுமே காண்.

—சு. நாராயணசாமி, திருச்சி-3.

இன்பமிகு காதலும் ஈடிலா வீரமும்
தன்பொருளாய்க் கொண்ட தமிழன்தன்—அன்புணர்வை
வீரத்தைக் கொண்டு விளங்கும் பொருளதி
காரம் இனித்திடுமே காண்.

—அ. சற்குணராசு, தலைஞாயிறு.

என்னுடைய பெற்றேர்கள் என்னிடத்தில் அன்றுடம்
அன்புடனே செய்யுமதி காரத்தில்—இன்பமிலை
ஆரமுதாம் என்மனைவி அன்புடனே செய்யுமதி
காரம் இனித்திடுமே காண்.

—கு. பஞ்சநாதன், திருவெண்ணெய்நல்லூர்.

தண்டா யுதம்கொண்ட திண்டோள் முருகனைஉள்
கொண்டால் அகங்காரம் துண்டாகும்—வண்டுகள்ரீங்
காரம்செய் யும்தார் கடம்பணிவேல் கந்த(ன்) அலங்
காரம் இனித்திடுமே காண்.

—சுப்பிரமணியன், பழனி.

பூவிற்கு ரீங்காரம்; பெண்ணுக் கலங்காரம்;
நாவிற்கிங் கோம்காரம்; நம்கலைஞர்—பாவிற்கே
ஏறும் புகழாரம்; என்மனைவிக் கென்பெயர்சிங்
காரம் இனித்திடுமே காண்.

—சிவல்புரி சிங்காரம், பி.ஏ, அளகாபுரி.

அறியாமை தன்னை அறவே துரத்தும்
குறியோடு, நாளெல்லாம் கொல்லும்—வறுமையிலும்
ஆரம்ப ஆசிரியர் அன்போடு செய்யுமுப
காரம் இனித்திடுமே காண்.

—சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

மேடைத் தமிழில்லை முன்னமெனப் பூமதுர
ஓடைத் தமிழ்நடையால் ஒண்டமிழ்க்கோர்—மேடைகண்ட
பேரறிஞர் அண்ணுவின் பேச்சொலியில் தண்டியலங்
காரம் இனித்திடுமே காண்.

—பு.மு. கோவிந்தசாமி, பி.காம், பி.எல்., சோளிங்கர்.

நீலவண்ணப் பட்டுடுத்தி நித்திலமாம் தாரகைகள்
கோல நகையணிந்து கொள்ளைகொளும்—சீலமுடன்
பாரமுதம் ஊட்டுமன்னை பால்மதியைச் சூடும்அலங்
காரம் இனித்திடுமே காண்.

—ச. சுந்தரேசன், பூட்டுத்தாக்கு.

தென்றல் இசைபாடும்; தீஞ்சோலை சாய்ந்தாடும்;
கொன்றை மலர்அலரும்; மஞ்சுசூழ்—குன்றதன்
ஓரத்தில் பூம்பொழிலில் மொய்க்கின்ற வண்டினரீங்
காரம் இனித்திடுமே காண்.

—கா. வாலிதாசன், சென்னை-35.

'போதுமே' என்றமனம் பூவுலகில் நாம்பெற்ருல்
யாதுமே பொன்னுய் இவண்காண்போம்—பேதமில்லை
பாரில் எவர்க்கும் பழஞ்சோற்றி னுள்ளநீரா
காரம் இனித்திடுமே காண்.

—எஸ். சுந்தரம், வெண்பாவூர்.

தொகைநா லெட்டுந் தொடர்பத்துப் பாட்டுந்
தகையாய காப்பியங்க ளைந்தும்—வகையோடு
சேரப் பயில்வார்க்குச் சொற்றெடர் கூறுமலங்
காரம் இனித்திடுமே காண்.

—ச. கோபாலன், மதுரை-10.

நாட்டுக்கு நல்திட்டம் செய்து குடியோம்பி
வாட்டத்தைப் போக்கவழி செய்ய, தமிழ்—நாட்டின்சீர்
பாரம் சுமக்கும் கலைஞர் விரும்புமதி
காரம் இனித்திடுமே காண்.

—எஸ். வைகுண்டமணி, சென்னை-6.

1—4—75

பட்டினியால் வாடிப் பசியுடனே வந்தார்க்குத்
திட்டி யெதுதரினும் தித்திக்கா—தட்டின்றிச்
சாரம் சிறிதெனினும் சாய்த்துத் தரும்நீரா
காரம் இனித்திடுமே காண்.
—சி. இராமகிருட்டிணன், மேல்பட்டாம்பாக்கம்.

சீறும் அகங்காரம் செல்வனுக்கு, நெஞ்சுவக்கக்
கூறும் வணக்கந்தான் நல்லோர்க்கு—மாறும்சிங்
காரம் வனிதையர்க்கு, ஏழையர்க்குக் கூழெனும்ஆ
காரம் இனித்திடுமே காண்.
—துறவி, சென்னை-12.

மக்களில்லாக் காரணத்தால் மாண்புமிகு வாழ்வுபெற்றும்
துக்கத்தால் நைந்திருக்கும் தம்பதிகாள்!—வெட்கமேன்?
சீரும் சிறப்புமுள்ள சந்ததிக்கு நற்சுவீ
காரம் இனித்திடுமே காண்!
—கா. பவுன், எருமலை நாயக்கன்பட்டி.

உச்சிமுதல் கால்வரையில் ஒவ்வா உடை,அணி ஏன்?
அச்சமடம் நாணம் பயிர்ப்பென்றே—மெச்சியிவண்
கூறும் குணம் நான்கால் கோதைநீ செய்யுமலங்
காரம் இனித்திடுமே காண்.
—மு. தங்கவேல், வேடசந்தூர்.

விழிகட்கு மையெழுதி வேண்டும் அணிபுனைந்து
சுழிக்கும் திலகமிட்டுச் சொக்கும்—மொழிக்கனிக்குச்
சாரம் நிறைக்கும் மழலைக்குச் செய்யுமலங்
காரம் இனித்திடுமே காண்.
—செல்வியழகன், அம்பர்பேட்டை.

நல்ல விருந்தென்றால் நற்சுவை அங்கேதான்
எல்லோரும் வந்தே இடம்பிடிப்பர்—கொல்பசி
தீர உணவருந்தும் சிற்றுண்டி யில்பல
காரம் இனித்திடுமே காண்.
—நாராயணன், பெருமாள்தேவன்பட்டி.

துள்ளுமெழில் மங்கையர்பால் தோன்றுமலங் காரமெலாம்
எள்ளளவும் எங்கட் கினிப்பதில்லை;—உள்ளமெலாம்
ஆரப் பருகிவந்த அண்ணாவின் பேச்சினலங்
காரம் இனித்திடுமே காண்.
—செல்வி ஞா. சித்திரை, கோயம்புத்தூர்-18.

நாட்டுநலம் தான்வளர்க்கும் நல்லதமிழ்ப் பாட்டெழுதிப்
போட்டுவிட்டுப் போய்விட்டான் பொன்னுலகம்—பாட்டி
னுக்கோர்
பாரதி யாகுமந்தப் பாவலனின் செந்தமிழ்ரீங்
காரம் இனித்திடுமே காண்.
—சு. கிருட்டிணன், திருப்பூர்-1

அங்கங் குறைந்தழுகி அல்லல் மிகப்பட்டே
எங்குந் திரிந்தலைந்(து) ஏங்குவோர்க்—கிங்குநன்
நேரம் அறிந்தே நமதர சாற்றுப
காரம் இனித்திடுமே காண்.
—ஆ. இரா. சந்திரன், ஆத்தங்குடி.

எத்தனையோ நானெழுதி என்னுள்ளம் சோர்ந்ததையோ!
பித்தனகி நானே பிதற்றுவதோ?—கத்துவதோ?
வாராதோ என்வெண்பா! 'வாதிடுவேன்' என்னுமதி
காரம் இனித்திடுமே காண்.
—வித்துவான் லெ. சி. குப்புசாமி, கோவிந்தபுரம்.

சொற்சுவையைத் தூய பொருட்சுவையைத் துய்த்தாலும்
நற்றவத்தோர் நாவால் நவின்றாலும்—நற்றமிழின்
சாரம் அனைய தமிழ்நூல் சிலப்பதி
காரம் இனித்திடுமே காண்.
—சி. முத்துக்குமாரவேலு, வால்பாறை.

முற்றும் துறந்தாலும் முத்தமிழ்மேல் கொண்டிருந்த
பற்றினால் எம்இளங்கோ பாடினான்;—நற்றமிழ்ப்பூ
ஆரத்தால் செய்தளித்தான் அள்ளும் சிலப்பதி
காரம் இனித்திடுமே காண்.
—அமராவதியான், அரக்கோணம்.

வள்ளுவர்செய் வான்குறளை வாசித்தால் வாய்மணக்கும்
உள்ளுதொறும் நெஞ்சினிக்கும் ஒண்டொடியே!—அள்ளஅள்ள
தீராத கற்பகமாம் தேனூற்றும் அவ்வதி
காரம் இனித்திடுமே காண்.
—சி. க. அரசன், செக்கச்சமுத்திரம்.

ஓடியாடி நன்று யுழைத்திருந்து வீடுதேடி
வாடிவரும் என்னை, மனைவியவள்—ஊடாமல்
ஓரவிழி காட்டி உவப்பாய்த் தரும்பல
காரம், இனித்திடுமே காண்.
—ப. அ. இசுமாயில், கல்கத்தா.

பசுமைப் புரட்சியிலே பார்தாங்காச் செம்மை
விசும்பின்றி நெற்குவியல் வீற்றிருக்கப்—பேசும்'ஐ
ஆரெட்டு'ம் வள்ளுவத்தை ஆற்றுகிற ஆட்சியதி
காரம் இனித்திடுமே காண்.
—அ. மலர்வேந்தன், அனுமந்தன்பட்டி.

காவெலாம் வண்டிசைத்துக் கானாறு சத்தமிட்டு
மாவெலாம் புள்ளிசைத்து மாங்குயிலும்—பாவிசைத்துச்
சாரலிடை வேடுவர்கள் வில்லிறுத்த நாணொலிரீங்
காரம் இனித்திடுமே காண்.
—மொ. எதிராசன், ந.பி.பெற்றூள்

# காளான் குழம்பு சாப்பிடலாமே!

"சார்! உங்களைத் திருமணம் செய்து கொள்ளப் போகின்ற பெண் மிகவும் அதிருஷ்டசாலி!'' என்ற குரல் கேட்டுப் பொருட்காட்சி அரங்கின் தனி அறையில் காளான் சூப் தயாரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். என் பின்னால் எனது அலுவலகத்தில் பணிபுரியும் மான்விழி, மஞ்சுளா, பூங்கோதை ஆகியோர் நின்றிருந்தனர்.

'' வாட் யூ செ இஸ் சென்ட் பெர்சன்ட் கரக்ட் மான்விழி! அறையில் நுழையும் போதே காளான் சூப்பின் மணம் கமழ்கிறது. இத்தகைய மணமுள்ள சூப் தயாரிக்கக் கற்றுக் கொண்டிருக்கும் நிலவழகனைக் கணவனாக அடையப் போகும் பெண் உண்மையிலேயே அதிருஷ்டசாலியாகத்தான் இருக்க முடியும்! '' என்ற குரல் கேட்டு மறுபக்கம் திரும்பினேன். எங்கள் அலுவலரும், அலுவலகத்தில் பணியாற்றும் ஆண்களும் நின்று கொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் நான் வெட்கத்துடன் எழுந்து தலைகுனிந்து நின்றேன்.

'' ஏன் சார் திருமணப் பெண் மாதிரி வெட்கப்படுகிறீர்கள்?'' என்று அந்த மூன்று பெண்களும் கிண்டலாகக் கேட்டனர். அலுவலக நண்பர்கள் எல்லாரும் சிரித்து விட்டனர். எனக்குக் கோபம் வரவே, அப் பெண்களை முறைத்துப் பார்த்தேன். அதைக் கண்ட எங்கள் அலுவலர் '' டேக் இட் ஈஸி' என்று என்னைப் பார்த்துக் கூறினார். அமெரிக்கா சென்று வந்த அவருக்கு, அப்பெண்கள் கிண்டல் செய்தது-சீரியஸாகப் படவில்லை. ஆனால், எனக்கு மிகவும் வெட்கமாகவே இருந்தது. ஏனெனில், இதை எல்லாரிடமும் சொல்லி அவர்கள் என்னைக் கேவலப் படுத்தி விடுவார்கள் என்று பயந்தேன். அவர்கள் மிகவும் துடுக்கானவர்கள். அதனால் எல்லாரும் அவர்களிடம் பேசவே பயப்படுவார்கள். தமிழ்ப் பெண்களான அவர்கள் மேல் நாட்டுப் பாணியில் உடையணிந்து அலுவலகம் வருவதும், எல்லாரையும் துச்சமாகப் பேசுவதும் எனக்குக் கட்டோடு பிடிப்பதில்லை. அவர்களுக்கு நல்ல சூடு வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், '' இந்த வாயாடிப் பெண்களையெல்லாம் ஏன் சார் இங்கே கூப்பிட்டு வந்தீர்கள்?'' என்று அலுவலரைக் கேட்டேன்.

'' நீ காளான் சூப் தயாரித்துக் கொண்டிக்கிறாய் என்று கூறிவிட்டேன். எல்லாரும் புறப்பட்டு விட்டார்கள். வேறு வழியின்றி அழைத்து வந்து விட்டேன் '' என்றார் எங்கள் அலுவலர்.



'' இன்று வி. ஐ. பி.கள் (V.I.Ps) வருவதாகக் குறிப்பிட்டீர்களே!'' என்றேன்.

'' இன்று நாங்கள்தான் வி.ஐ.பி.கள்! நீங்கள் தயாரித்துள்ள காளான் சூப்பிற்கு 'சர்ட்டிபிகேட்' கொடுக்கப் போவது நாங்கள்தான்! அதனால் சீக்கிரம் சூப் ரெடியாகட்டும்! '' என்று தேன்மொழி துடுக்காகக் கூறியதும் எல்லாரும் சிரித்து விட்டனர். '' இப்படித் தெரிந்திருந்தால், நான் இவ்வளவு சிரமப்பட்டு சூப் தயாரித்திருக்க மாட்டேன்!'' என்று வருத்தத்துடன் கூறினேன்.

'' ஐயோ! பாவம்! '' என்று மூன்று பெண்களும் முணுமுணுத்தனர். மீண்டும் எல்லாரும் சிரித்தனர்.

'' ஐ சே டோன்ட் பிளே வித் ஹிம்! லெட் ஹிம் பினிஸ் தி பிரிபரேஷன் ஃபர்ஷ்ட்.'' என்று எங்கள் அலுவலர் அவருக்கு உரிய தோரணையில் ஆணையிட்டார். அங்கு அமைதி நிலவியது. நான் கொதித்துக் கொண்டிருந்த சூப்பை ஒரு கரண்டியால் கலக்கி விட்டுக் கொண்டிருந்தேன்.

'' ஐ சே வாட் ஹேப்பன்டு டு யூ? ஆல் ஆர் கீப்பிங் குயட்!'' என்று எங்கள் அலுவலர் கேட்





டார். சிரித்தால், ' ஏன் சிரிக்கிறாய்?' என்று கேட்பார். சிரிக்காவிட்டால் '' ஏன்? உம்மென்று இருக்கிறாய்?'' என்று கேட்பார். அவருடைய குணத்தை நன்கு புரிந்துகொண்டிருந்த அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனரே தவிர, யாரும் பேச முன் வரவில்லை.

'' எல்லாரும் காளான் சூப்பிலிருந்து வரும் மணத்தை நுகர்ந்து கொண்டிருக்கிறார்கள்! அதனால்தான் பேச மனம் வரவில்லை!'' என்று நான் கூறினேன். அது கேட்ட எங்கள் அலுவலர் கள்ளங்கபடமில்லாமல் உரக்கச் சிரித்தார். அதையடுத்து எல்லாரும் சிரித்து விட்டனர். மீண்டும் அங்கே ஆரவார ஒலி எழுந்தது. அதைத் தடுக்க விரும்பாமல் அலுவலர் வெளியே போய் விட்டார். எங்கள் அலுவலக நண்பர்கள் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தனர். நான் என் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

'' நம்ம பொருட்காட்சி அரங்கிற்குப் பிரமுகர் ஒருவர் வரப் போகிறாராம்! காளான் சூப்ரெடியாகி விட்டதா?'' என்று கேட்டுக் கொண்டே எங்கள் அலுவலர் விரைந்து வந்தார்.

'' எஸ், சார்!'' என்று கூறி விட்டு, மகிழ்ச்சியுடன் சூப் தயாராகிய பாத்திரத்தை இறக்கி வைத்தேன்.

அந்தப் பிரமுகரையும், அவருடைய துணைவியாரையும் வரவேற்று, காட்சிப் பொருள்களுக்கு விளக்கம் கொடுத்துக் கொண்டே வந்தார் எங்கள் அலுவலர். இறுதியாக காளான் வளர்க்கும் பகுதிக்கு வந்தவுடன், பிரமுகரையும், அவரது துணைவியாரையும் காளான் சூப் பருகுமாறு எங்கள் அலுவலர் வேண்டுகோள் விடுத்தார். மான்விழியும், மஞ்சுளாவும், சூப் நிறைந்த கிண்ணங்களை தட்டில் வைத்து அவர்களுக்குக் கொடுத்தனர். பூங்கோதையும், மற்றவர்களும், பிரமுகருடன் வந்த மற்றவர்களுக்குக் காளான்சூப் கொடுத்துக் கொண்டிருந்தனர். காளான் சூப்பை எல்லாரும் சுவைத்துப் பருகிக் கொண்டிருந்தனர்.

'' இட் இஸ் டெலிசியஸ்'' என்று ஆங்கிலத்தில் கூறிவிட்டுப் பிரமுகரின் துணைவியார் கிண்ணத்தை மேசைமேல் வைத்தார்.

'' நாட் ஒன்லி டெலிசியஸ், பட் ஆல்சோ நுட்ரிசியஸ்'' என்று நான் பணிவுடன் ஆங்கிலத்தில் கூறினேன்.

'' இஸ் இட் சோ?'' என்றார் அவர்.

'' யெஸ், மேடம், இட் கண்டெய்ன்ஸ் எயிட் டு டென் பெர்சன்ட் ·புரோட்டின். இட் இஸ் ஆன் ஐடியல் புட் பார் டயாபெட்டிக் பேஷண்ட். மஸ்ரூம் இஸ் கிளைமடு டு கேவ் கியூரேட்டிவ் எபக்ட் பார் கேன்சர்'' என்றேன். என் பதிலைக் கேட்டு பிரமுகரின் துணைவியாரும், பிரமுகரும் மற்றவர்களும் வியந்தனர்.

'' காளான் வளர்க்கும் முறையையும், காளான் குழம்பு, சூப் முதலியன தயாரிக்கும் முறையையும் விளக்கி மகளிர் மன்றங்களில் பயிற்சி முகாம் நடத்துங்கள். நானும் என் மனைவியும் அந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொள்கிறோம்'' என்று கூறிவிட்டு அந்தப் பிரமுகர் எங்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு சென்றார். அவரைத் தொடர்ந்து அனைவரும் வெளியேறினர்.

அதன் பிறகு மீதியிருந்த காளான் சூப்பைப் பருக என் அலுவலக ஊழியர்களுக்கு அனுமதி அளித்ததார் அலுவலர். அலுவலர் உட்பட எல்லாரும் காளான் சூப் பருகி மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

சற்று நேரத்திற்குப் பிறகு எல்லாரும் எனக்கு நன்றி தெரிவித்து விட்டு புறப்பட்டு விட்டனர். நான் பொருட்காட்சிக்கு வருகின்றவர்களுக்கு விளக்கமளிக்கும் பணிக்குப் போய் விட்டேன்.

* * * *

மறுநாள் காலை அலுவலகத்திற்குச் சென்ற சிறிது நேரத்தில் மான்விழி மூன்று பெண்களைக் கூட்டிக் கொண்டு வந்தாள். அடையாறு மகளிர் மன்றத் தலைவி மங்கையர்கரசி, செயலாளர் செந்தாமரை, பொருளாளர் பொற்செல்வி ஆகியோர்களை அறிமுகப் படுத்தி விட்டு, - ''காளான் வளர்க்கும் பயிற்சி முகாம் நடத்துவது பற்றி முடிவு செய்ய வந்துள்ளார்கள்'' என்று கூறினாள் மான்விழி.

'' முதலில் அலுவலரைச் சந்தியுங்கள்!'' என்றேன். அவர்கள் அலுவலரைக் காணச் சென்றனர். சிறிது நேரத்தில், அலுவலரிடத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் அங்கு சென்ற உடனேயே, அவர் என்னைப் பார்த்து காளான் பற்றிய பயிற்சி முகாம் நடத்துவதற்கான செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்வதாகச் சொல்லுகிறார்கள். எந்தத் தேதியில் வைத்துக் கொள்ளலாம்?'' என்றார்.

'' வருகிற ஞாயிற்றுக்கிழமை வைத்துக் கொள்ளலாமா?'' என்று மான்விழி கேட்டாள்.

'' அவ்வளவு அவசரப்பட்டால் முடியுமா? காளான் வளர 10 அல்லது 12 நாட்கள் தேவைப்படுமே! காளான் வளர்ப்பதற்குத் தேவையான காளான் விதைப் பாட்டில்களைக் கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து வரவழைக்க வேண்டும். மற்றும் துவரம் பருப்புப் பொடி, நெல்தாள் வைக்கோல் ஆகியவை வாங்க வேண்டும். இதற்கெல்லாம் சேர்த்துப் பார்த்தால் இன்னும் 20 நாட்கள் கழித்துப் பயிற்சி முகாம் நடத்துவதே நல்லது'' என்றேன்.

''அப்படியானால் அடுத்த மாதம் இரண்டாவது சனிக்கிழமை, விடுமுறை நாளாதலின், அன்று வைத்துக் கொள்ளலாமா!'' என்றார் மங்கையர்க்கரசி.

'' சரியென்று சொல்லிவிடலாம் '' என்று என் அலுவலரிடம் கூறினேன்.

அவரும் சரியென்று சொல்லியவுடன் பொருளாளர் பொற்செல்வி அம்மையார் என் அலுவலரிடம் ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்து '' தேவையான பொருள்களை வாங்கிக் கொள்ளுங்கள். மேலும் பணம் தேவைப்பட்டாலும் மான்விழியிடம் கூறி அனுப்புங்கள் '' என்று கூறினார்.

மூன்றாம் நாள் மான்விழி 'காளான் குழம்பு சாப்பிடலாமே!' என்று தலைப்பிட்ட அழைப்பிதழைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்து விட்டு, '' சார் சமையல் பிரமாதமாக இருக்கணும்!'' என்றாள்.

'' போயும் போயும் பெண்களுக்கா சமையல் செய்து போடுவது! ஆண் இனத்திற்கே வெட்கம் (ஷேம்) '' என்று எங்கள் அலுவலக உதவியாளரும், மான்விழியின் அத்தை மகனுமான நாவுக்கரசன் கூறினான்.

'' நீங்க வாயை மூடிக் கொண்டு பேசாமல் இருக்கலாம்!'' என்று கூறினாள் மான்விழி!

எங்கள் அலுவலக உதவியாளரை மான்விழி அவ்வாறு கூறியது எனக்கு வெறுப்பை தந்தது.

'' நீ என்ன சின்னப் பிள்ளையா? பி.ஏ. பட்டதாரி! கொஞ்சம் அடக்கமாகவும் அமைதியாகவும் பேசக் கூடாதா?'' என்று மான்விழியைக் கோபமாகவே கேட்டேன்.

அவள் முகம் வாடிவிட்டது. ஏன் இப்படிச் சொன்னோம் என்று கூட நினைத்து விட்டேன். ஆனால் சற்று நேரத்திற்குப் பிறகு '' உங்கள் அட்வைசுக்கு மிகவும் நன்றி '' என்று கூறிவிட்டுப் போய் விட்டாள்.

திட்ட மிட்டப்படி எல்லாம் ஒழுங்காக நடந்து வந்தது. பயிற்சி முகாமன்று காலை 10 மணிக்கு அடையாறு மகளிர் மன்றத்தை அடைந்தவுடன் மான்விழி ''வணக்கம்'' தெரிவித்து வரவேற்றாள். ஆனால் அவளிடம் முன்பு இருந்த துடிப்பும், குறும்பும் அறவே இல்லை! நல்ல பெண்களின் நான்கு குணங்களென்னும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவைகளின் மொத்த உருவாகவே அவள் காணப்பட்டது எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது.

பயிற்சி முகாம் ஆரம்பித்தது. நான் காளான் வளர்ப்பதற்காகத் தயாராக வைத்திருந்த பொருட்களின் அருகில் சென்று, செய்முறைகளை விளக்கிச் சொல்லத் துவங்கினேன்.

'' காளான் ஒரு சுவை மிக்க உணவு. காளான்களிலிருந்து குழம்பு, வறுவல், சூப், ஆம்லெட், போளி (சோமாஸ்), ஊறுகாய் முதலியன தயாரிக்கலாம். காளான்களிலிருந்து செய்யப்படும் உணவுப் பொருள்கள் சுவையும், மணமும் கொண்டிருக்கும். அவைகளின் சுவைக்கும், மணத்திற்கும் ஈடு இணையே இல்லை! காளான்கள் காய்கறிகளுக்கும் இறைச்சிக்கும் இடைப்பட்ட உணவாகும். காளான்களில் 90 முதல் 92 சதம் தண்ணீர் உள்ளது. மீதமுள்ள 8 முதல் 10 சதமும் புரதச் சத்தாகவே உள்ளது. காளான்களில் இரும்பு, தாமிரம், பொட்டாசியம், சுண்ணாம்பு போன்ற தாது உப்புக்களும் சிறு அளவில் உள்ளன. 'வைட்டமின்—பி', 'வைட்டமின்—டி' ஆகியவைகளும் காளான்களில் மிகுந்து காணப்படுகின்றன. காளான்களில் மாவுப் பொருள்களே இல்லையாதலின், நீரிழிவு நோயாளிகளுக்கும், உடல் பருத்துவிடும் என்று உணவைக் குறைத்து உண்பவர்களுக்கும் காளான்களிலிருந்து செய்யப்படும் உணவுப் பொருள்கள் மிகவும் சிறந்ததாகும். புற்றுநோயைக் குணப்படுத்தும் குணமும் காளான்களுக்கு உண்டு.

காளான் உணவு இவ்வளவு முக்கியம் வாய்ந்ததாக இருப்பதால், காளான் வளர்ப்பதிலும், காளான் உணவு தயாரிப்பதிலும் நீங்கள் அனைவரும் ஆர்வம் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.



தென்னகத்தில் அதுவும் குறிப்பாகத் தமிழகத்தில் நெல் வைக்கோல் காளான்களை மார்ச்சு மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை வளர்க்கலாம். காளான் வளர்க்கும்போது எந்தச் சமயத்திலும் வெப்பநிலை 24 டிகிரி சென்டிகிரேடுக்குக் குறையக் கூடாது. அதிக அளவு வெப்ப நிலை, நெல் வைக்கோல் காளான் வளர்ப்பதற்கு மிகவும் பயன் தரக்கூடியது. நெல் வைக்கோல் காளான்களை, நெல் வைக்கோல்களில் மட்டுமே வளர்க்க முடியும். கையால் அடிக்கப்பட்ட நெல்தாள் வைக்கோலே காளான் வளர்ப்பதற்கு ஏற்றது. மாடு கட்டிப் பிணை அடித்த வைக்கோல் சிறந்ததல்ல. இனிமேல் காளான் வளர்க்கும் முறையை விளக்கப் போகின்றேன். உங்களுக்குச் சந்தேகம் இருப்பின் கூச்சப் படா

மல் அவ்வப்போது கேட்கலாம்'' என்று கூறிவிட்டு செய்முறையைத் தொடங்கினேன்.

''ஒரு காளான் படுக்கை தயாரிப்பதற்கு, 50 கிலோ தாள் வைக்கோல் தேவை. நெல் தாள் வைக்கோலை இதுபோல் (ஒரு கற்றையை எடுத்துக் காட்டி) 20 முதல் 25 சென்டி மீட்டர் கனமும், 90 முதல் 120 சென்டி மீட்டர் நீளமுமுள்ள 32 கற்றைகளாகக் கட்டிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கற்றையும் 1½ முதல் 2 கிலோ எடை இருக்கலாம். இக்கற்றைகளைத் தண்ணீரில் அமிழ்த்தி, 12 மணி நேரத்திற்கு ஊற வைக்க வேண்டும்'' என்று கூறிவிட்டுத் தாள் கற்றைகளை ஒரு தண்ணீர்த் தொட்டியில் அமிழ்த்திக் காட்டினேன்.

''பன்னிரண்டு மணி நேரம் தண்ணீரில் ஊறிய தாள் கற்றைகளை எடுத்துக் காளான் படுக்கை அமைக்க வேண்டும். காற்றாலும், மழையாலும் பாதிக்கப்படாத பாதுகாப்பான இடங்களில் மரப்பலகையோ அல்லது செங்கல்லோ, அல்லது மூங்கில் தட்டியோ கொண்டு தரை மட்டத்திற்குச் சிறிது உயரமாக இது போல் மேடை அமைத்துக் கொள்ள வேண்டும்'' என்று கூறி மரப்பலகையால் அமைக்கப்பட்ட மேடையைக் காட்டினேன்.

''காளான் படுக்கைக்கு மேடை அவசியமா?'' என்று ஓர் அம்மையார் கேட்டார்.

''காளான் படுக்கைக்குக் கீழ் எவ்வகையிலும் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடாதாதலின் மேடை அமைப்பது அவசியமே'' என்றேன்.

''அடுத்து நான்கு தாள் கற்றைகளை எடுத்துக் கொண்டு மேடைமேல் இது போல் தடித்த பாகம் (அடிப்பாகம்) ஒரே பக்கமாகவும், ஒன்றின் பக்கத்தில் ஒன்றாகவும் வைக்க வேண்டும். அதன்பின் நடுவில் உள்ள இரண்டு கற்றைகளை மட்டும் பிரித்துச் சமமாகப் பரப்பி விட வேண்டும். அடுத்து நான்கு கற்றைகளை எடுத்து அவற்றின் தடிப்பாகம், முதலில் அடுக்கப்பட்ட கற்றைகளின் தடித்த பாகத்திற்கு எதிர்ப்புறமாக இது போல் அமையுமாறு அடுக்க வேண்டும். இவ்வாறு அமைக்கப்பட்ட எட்டுக் கற்றைகளும் சேர்ந்து முதல் அடுக்கு ஆகும்'' என்றேன்.

''இவ்வாறு அமைத்துக் கொண்ட பிறகு 'ஸ்பான்' (Spawn) எனப்படும் காளான் விதைகள் அடங்கிய பாட்டிலை உடைத்து, காளான் விதைகளை 1 முதல் 1½ அங்குலத் துண்டுகளாக்கிக் கொள்ள வேண்டும்.'' என்று கூறிவிட்டுக் காளான் விதைப் பாட்டிலை எடுத்து உடைத்துத் துண்டுகளாக்கிக் காட்டினேன்.



''இக் காளான் விதைத் துண்டுகளை எடுத்து, முதலில் முதல் அடுக்கின் மேல் நான்கு பக்க ஓரங்களிலும் 10 முதல் 12·5 சென்டி மீட்டர் இடம் விட்டுச் சுற்றிலும் வைக்க வேண்டும்'' என்று கூறிக் காளான் விதைத் துண்டுகளை வைத்தேன்.

''அடுத்து, ஒரு தேக்கரண்டித் துவரம் பருப்புத் தூளை எடுத்து முதல் அடுக்கின் மீது தூவ வேண்டும்'' என்று கூறி அவ்வாறே செய்து காட்டினேன். இவ்வாறு துவரம் பருப்புத் தூளைத் தூவினால் தான் காளான் விதை வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும்'' என்று கூறிவிட்டு இரண்டாவது அடுக்கு அமைக்கத் துவங்கினேன்.

''முதல் அடுக்கில் உள்ள கற்றைகளின் வரிசைக்குக் குறுக்காக, முன்போலவே 8 தாள் கற்றைகளைக் கொண்டு இரண்டாவது அடுக்கு அமைக்க வேண்டும். அதன் மீதும் முதல் அடுக்கின் மீது வைத்தது போன்றே காளான் விதைத் துண்டுகளை வைத்துத் துவரம் பருப்புப் பொடியைத் தூவ வேண்டும்'' என்று கூறிச் செய்து காட்டினேன்.

பிறகு மூன்றாவது அடுக்கை முதல் அடுக்குக்கு இணையாகவும், இரண்டாவது அடுக்குக்குக் குறுக்காகவும் அமைத்து அதன் மேலும் காளான் விதைத் துண்டுகளை, வைத்துத் துவரம் பருப்புப் பொடியைத் தூவினேன்.

இறுதியாக நான்காவது அடுக்கை இரண்டாவது அடுக்குக்கு இணையாகவும் மூன்றாவது அடுக்குக்குக் குறுக்காகவும் அமைத்து அதன் மேல் ஒரு மரப் பலகையை வைத்து நன்றாக அழுத்தி விட்டு, தாள்கள் நன்றாக நனையுமாறு பூவாளியால் தண்ணீர் தெளித்தேன்.

''அதிக அளவு தண்ணீர் தெளிப்பதைத் தவிர்க்க வேண்டும். பிறகு 2 அல்லது 3 நாட்களுக்கு ஒரு முறை காலையிலோ அல்லது மாலையிலோ தண்ணீர் தெளிக்க வேண்டும். காளான் உற்பத்தியினுடைய வெற்றியின் ரகசியம் தண்ணீர் தெளிப்பதைப் பொறுத்தே அமைந்துள்ளது. எனவே காளான் படுக்கை மிகவும் ஈரமாக இருக்காமலும், அல்லது காய்ந்து விடாமலும் கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்று தண்ணீர் தெளிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினேன்.

''இவ்வாறு காளான் படுக்கை அமைத்த 10 முதல் 12 நாட்களில் தாள் வைக்கோலின் ஓரங்களில் காளான் முளைகள் தோன்றும். முதலில் காளான் ஒரு சிறு குண்டூசியின் தலையைப் போல் தோன்றும். அதன்பின் ஒன்றிரண்டு நாட்

களில் சிறு குடை போன்ற அமைப்புடையதாகக் காளான் வளர்ச்சியுறுகிறது. காளான் பறித்த 8 மணி நேரத்திற்குள்ளேயே காளான்களைச் சமைத்துச் சாப்பிட்டுவிட வேண்டும்'' என்று கூறிவிட்டு, எல்லாரையும் அழைத்துச் சென்று தனியே ஓர் அறையில் முன் கூட்டியே காளான் வளர்க்கப்பட்டிருந்ததாள் படுக்கையைக் காட்டினேன். எல்லாரும் காளான்களைக் கண்டு வியந்தனர்.



''ஒரு காளான் படுக்கை அமைக்க எவ்வளவு செலவு ஆகும்?'' என்று ஒரு அம்மையார் கேட்டார்.

''ஒரு காளான் படுக்கை அமைக்க 50 கிலோ தாள் வைக்கோல் வாங்குவதற்கு ரூபாய் 2·50, துவரம் பருப்புப் பொடி வாங்க 50 காசும், 2 பாட்டில் காளான் விதை வாங்க ரூபாய் 2·00, புகை வண்டி பார்சல் கட்டணத்திற்கும், தண்ணீர் விடும் செலவிற்கும் ரூபாய் 1·50 ஆக மொத்தம் ஆறு ரூபாய் செலவாகும்.

''ஆறு ரூபாய் செலவழித்தால் அதிலிருந்து எவ்வளவு காளான் கிடைக்கும்? அதன் விலை என்ன இருக்கும்?'' என்று மற்றொரு அம்மையார் கேட்டார்.

அந்த அம்மையார் செலவிற்கு ஏற்ற வரவு இருக்குமா என்பதைக் கேட்கிறார் என்று எண்ணிக் கொண்டு, ''ஒரு காளான் படுக்கையில் இருந்து, குறைந்தது 3 கிலோ காளான் கிடைக்கும். ஒரு கிலோ காளான் மூன்று ரூபாய்க்குக் குறையாமல் விற்கிறது. குறைந்த விலையில் விற்பதாகக் கொண்டாலும், ஒரு படுக்கையிலிருந்து கிடைக்கும் 3 கிலோ காளான் மூலம் ரூபாய் 9—00 கிடைக்கும். உற்பத்திச் செலவு ரூபாய் 6—00 போக நிகர இலாபம் ரூபாய் 3—00 கிடைக்கும். ஒரு ஏக்கர் நெல் தாள்களைக் கொண்டு காளான் வளர்த்தால் ரூபாய் 700 முதல் 1,400 வரை நிகர இலாபம் கிடைக்கும்'' என்று விளக்கினேன்.

''பரவாயில்லையே!'' என்று அந்த அம்மையார் கூறிவிட்டு பேசாமல் இருந்தார்.

அடுத்து, காளான் குழம்பு, வறுவல், சூப், ஆம்லெட், போளி, ஊறுகாய் முதலியன தயாரிப்பதற்கான பொருள்கள் தயாராக இருந்த பகுதிக்கு எல்லாரையும் அழைத்துச் சென்றேன். அங்கு மான்விழியும், மஞ்சுளாவும், பூங்கோதையும் முன்கூட்டியே எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தனர். எவ்வெவற்றை எப்படியெப்படிச் செய்ய வேண்டுமென்று நான் சொல்லச் சொல்ல, மான்விழியும், மஞ்சுளாவும், பூங்கோதையும் அவ்வாறே செய்து கொண்டிருந்தனர். சுமார் அரை மணி நேரத்தில் அனைத்தும் தயாராகிவிட்டன. எல்லாரும் காளான் விருந்து எப்பொழுது சாப்பிடுவோம் என்று ஏங்கிக் கொண்டிருந்தனர்.

சரியாக மதியம் 1—00 மணிக்கு விருந்து நடைபெற்றது. மகளிர் மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் உண்டனர். தேன்மொழியும், மான்விழியும், மஞ்சுளாவும், பூங்கோதையும் உணவுகளைப் படைத்துக் கொண்டிருந்தனர். அவர்களுடைய பொறுப்புணர்ச்சிகளைக் கண்டு என் அலுவலரும் வியந்து என்னிடம் கூறிக் கொண்டிருந்தார். பயிற்சி சிறப்பாக முடிந்தது ஒன்று, மான்விழி திருந்தியது மற்றொன்று ஆக இரட்டை மகிழ்ச்சியுடன் நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். விருந்து முடிந்து எல்லாரும் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டனர். செலவுக் கணக்கையும், மீதிப் பணத்தையும் கொடுத்து விட்டு நானும் அலுவலரும் திரும்பினோம்.

மூன்றாம் நாள் மாலை, 'காளான் குழம்பு சாப்பிட எங்க வீட்டிற்கு வாங்க சார்!' என்று மான்விழி என்னை அழைத்தாள். 'எங்களுக்கெல்லாம் இல்லையா?' என்று நாவுக்கரசன் கேட்டான். 'எல்லோரையும் தான் அழைத்துச் செல்லப் போகிறேன்' என்றாள்.

மான்விழியின் அடக்கமான பதிலைக் கேட்டு அலுவலக ஊழியர்கள் அனைவரும் வியந்து மகிழ்ந்தனர்.

---

காம்பல் நாரை, அரிவாள் மூக்கன், மண்வெட்டிவாயன், நீர்க்காகம், கூழைக்கடா, வெண்கொக்கு, ஊசிக்காக்கை, பாம்புத்தாரை, மாட்டுக்கொக்கு, முக்குளிப்பான், சிறவிதாரா, வக்கா உள்ளான், செங்கால் நாரை, கால் உள்ளான்.

இந்தப் பெயர் உள்ள பறவைகளெல்லாம் எங்கு இருக்கின்றன தெரியுமா?

இவ்வனைத்தும் உள்ள இடம், பறவைகள் சரணாலயமான வேடந்தாங்கல்.

# அஞ்சல் தலைகளில்




# அன்னைத் தமிழகம்

'இன்பக் கதைகள்
எல்லாம்—உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ ?'

என்னும் புதுமைக்கவி பாரதியாரின் பாடல் வரிகள், அன்பு செய்வதில் நிகரற்ற அருமைக் குழந்தைகளுக்கு மட்டுமல்ல ஆயிரமாயிரம் கதைகள் கூறும் அஞ்சல் தலைகளுக்கும் பொருந்தும் ! ஆம் ! அஞ்சல் தலைகள் மூலம் அறிவியல் கற்கலாம்— அரசியல் கற்கலாம் —உயிரியல் கற்கலாம் —உலகியல் கற்கலாம். இப்படிப் பல்துறைக் கல்வியை நமக்குப் புகட்டும் இணையற்ற பல்கலைக் கழகமாக அஞ்சல் தலைகள் விளங்குவதாகக் கூறுவது மிகையாகாது.

அஞ்சல் தலைகள் சேகரிப்பதை வெறும் பொழுது போக்காக மட்டுமல்ல—பல்வேறு சுவைமிக்க —பயனுள்ள வரலாறுகளைக் கற்றுத்தரும் வரலாற்றுப் பொன்னேடுகள் ஆகவும் கருதி அப்பணியை ஏராளமான பேர் மேற்கொண்டுள்ளனர். உலகெங்கிலுமாக ஏறத்தாழ 5 கோடிப்பேர் அஞ்சல் தலைச் சேகரிப்பில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

அஞ்சல் தலைகள் சேகரித்துப் பரிமாற்றம் செய்துகொள்வதன் மூலமும், விற்பனை செய்வதன் மூலமும், பலர் பெரும்வருமானம் பெறுகின்றனர். அமெரிக்காவில் உள்ள சுமார் 50 ஆயிரம் பேர் இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 5 கோடி டாலர் வருமானம் பெறுகின்றனராம். இந்த அஞ்சல் தலைகள் பரிவர்த்தனை மூலம், இந்தியாவுக்கு ஓராண்டுக்கு 26 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கிறது என்பது பலரால் நம்ப முடியாத செய்தியாகக் கூட இருக்கலாம். எனினும், அது உண்மை !

அஞ்சல் தலைகள் சேகரிக்கும் பழக்கம் உலகெங்கிலும் நீண்ட நெடுநாட்களாக இருந்துவந்த போதிலும், இந்தியாவைப் பொறுத்தவரை, சுதந்திரத்திற்குப் பிறகுதான் அது வளர்ந்து வருகிறது. அஞ்சல் தலைகள் சேகரிப்பில் ஆர்வமுடையோர்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு அப்பணியில் வழிகாட்டி, ஆலோசனைகள் கூறி உதவவும், ( Philatelic Bureau ) அஞ்சல் சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1947-ல் டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய 4 முக்கியப் பெருநகரங்களில் மட்டுமே அஞ்சல் தலைச் சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பின்னர், இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலத்தவர்களும் விரும்பிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இப்போது எல்லா மாநிலங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளவை தவிர, 'போர்ப்பணி' புரிவோருக்காக 2 அஞ்சல் தலைச் சேகரிப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் நாட்டுக்குரிய அஞ்சல் தலைச் சேகரிப்பு நிலையம், சென்னை அண்ணா சாலையில் உள்ள (G.P.O.) தலைமை அஞ்சலகத்தில் உள்ளது. இதில், தமிழ் நாட்டில் உள்ள அஞ்சல் தலைச் சேகரிப்பாளர் மட்டுமின்றி, பஞ்சாப், மேற்கு வங்காளம், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், ஆந்திரா, கேரளா முதலிய வெளி மாநிலத்தவர்களும், டென்மார்க், அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து ஆகிய பிற நாட்டவர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களெல்லாம், இந்த அஞ்சல் தலைச் சேகரிப்பு நிலையத்தில் முன் பணம் கட்டிவைத்துள்ளனர். இந்திய அஞ்சல்-தந்தித் துறை அவ்வப்போது வெளியிடும் சிறப்பு அஞ்சல் தலைகளை, அவற்றிற்கெனத் தனியாக வெளியிடப்பெறும் 'முதல் நாள் உறை' களில் ஒட்டி, இந்த அஞ்சல் தலைகளையே முகவரியிடப்பட்ட உறையிலும் ஒட்டி இந்நிலையத்தினர் உறுப்பினர்களுக்கு அனுப்பிக் கணக்கு வைத்துக் கொள்கின்றனர். அவ்வப்போது வெளியிடப்பெறும் சிறப்பு அஞ்சல் தலைகள், அஞ்சல் அட்டைகள், உள்நாட்டுக் கடிதங்கள் முதலியவற்றை அவை அஞ்சலகங்கட்கு விற்பனைக்கு வருமுன்-முதல் நாளிலேயே இந்த அஞ்சல் தலைச் சேகரிப்பு நிலையம் விற்பனை செய்கிறது. இம்மாதிரியான பெரும் நிலையங்கள் சென்னை, பம்பாய், டில்லி, கல்கத்தா ஆகிய நான்கு பெருநகரங்களில் மட்டுமே உள்ளன. இந்த அஞ்சல் தலைச் சேகரிப்பு நிலையங்கள் முக்கியமான நேரங்களில் அஞ்சல் தலைக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்துகின்றன.

அஞ்சல் தலைகள் எப்போது தோன்றின என்பதைப் பற்றி நாம் சரியாகக் காலவரையறை செய்து குறிப்பிட முடியாது. எனினும், இந்தியா சுதந்தரம் பெறுவதற்கு முன், இங்கிலாந்தி

லிருந்து நம்மை ஆண்டுகொண்டிருந்த மன்னர்களின் மணிமுடியணிந்த தலைகளே நமது நாணயங்களிலும், அஞ்சல் தலைகளிலும், அச்சிடப்பட்டன. எனினும், சுதந்திரத்திற்குப் பிறகு இந்நிலை மாற்றப்பட்டு, நமக்கெனத் தனி நாணயங்களும், அஞ்சல் தலைகளும் அச்சிடப்பட்டு வருகின்றன.

அஞ்சல் தலைகளை வெளியிட இந்திய அரசு ஓர் ஆலோசனைக் குழுவை அமைத்தது. இந்த அஞ்சல் தலை ஆலோசனைக் குழுவின் தலைமை நிலையம் புதுடில்லியில் உள்ளது. எனினும், இக்குழுவில் ஒரு மாநிலத்திற்கொருவர் வீதம் அங்கம் வகிக்கின்றனர். இவர்களுக்கு ஊதியம் நிர்ணயிக்கப்படவில்லை. கௌரவப் பதவி வகிப்பவர்களே. இந்த ஆலோசனைக் குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகள். இப்போது இக்குழுவின் தலைவராகப் பொறுப்பு வகிப்பவர், அஞ்சல் தலைகள் சேகரிப்பில் பெரும்புலியெனக் கருதப்படுகிற திரு எஸ். பி. சட்டர்ஜி. இக்குழுவில் நமது தமிழ்நாட்டின் பிரதிநிதியாக திரு வி. என். சீனிவாச ராவ், பி.ஏ., பி.எல்., இரண்டாம் முறையாகப் பொறுப்பு வகிக்கிறார். இந்த அஞ்சல் தலை ஆலோசனைக் குழுவே, ஒவ்வோராண்டும் முன் கூட்டியே எத்தனை அஞ்சல் தலைகளை இவ்வாண்டு வெளியிடுவது ? எவரெவர் நினைவாக அல்லது எந்தெந்த நிகழ்ச்சிகளின் தொடர்பாகச் சிறப்பு அஞ்சல் தலைகள் வெளியிடுவது என்பனவற்றையெல்லாம் ஆராய்ந்து முடிவுகளைத் தெரிவிக்கும்.

இந்தியா சுதந்தரம் அடைவதற்கு முன்பு, பல்வேறு அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டன. 5-ஆம் ஜார்ஜ் மன்னரின் வெள்ளி விழா நினைவாக அவரது மணிமுடி தரித்த தலையோடு இந்தியாவில் உள்ள சில ஆலயங்களையும் தனித்தனி இணைத்து 6—5—1935-ல் சில அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டன. அவற்றுள் சிறப்புமிக்க இராமேஸ்வரம் கோயில் அச்சிடப்பட்ட அஞ்சல் தலையும் ஒன்று என்பது குறிப்பிடத் தக்கது.




திருவாலங்காட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட நடராசர் சிலை அச்சிடப்பட்ட அஞ்சல் தலை.

அதன்பின், இந்தியா சுதந்தரம் அடைந்த பிறகு, வழக்கமான அஞ்சல் தலைகள் தவிரக் கடந்த 25 ஆண்டுகளில் 215 சிறப்பு அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் தமிழகத்தை நினைவு கூறத் தக்க வகையில்—தமிழக வரலாற்றோடு தொடர்புடையனவாக, 14 அஞ்சல் தலைகள் வெளியிடப்ப்பட்டுள்ளன. அவற்றுள், செங்கற்பட்டு மாவட்டத்தை நினைவு கூறும் வகையில்—செங்கற்பட்டு மாவட்டத்தோடு தொடர்பு படுத்திக் காணத் தக்க வகையில் வெளியிடப் பெற்றுள்ள அஞ்சல் தலைகள் மூன்று. ஒன்று, தமிழ்நாட்டின் வரலாற்று நாயகனான பேரறிஞர் அண்ணா அவர்களின் முதலாவது நினைவு நாளில் வெளியிடப்பட்டது; இரண்டாவது, செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள 'செயிண்ட் தாமஸ் மவுண்ட்' என்னும் பறங்கி மலையோடு தொடர்புடைய 'செயிண்ட் தாமஸ்' என்னும் புனித தோமையார் நினைவாக வெளியிடப்பட்டது; மூன்றாவது, புதை பொருள் வரிசையில், செங்கற்பட்டு மாவட்டம்




### பேரறிஞர் அண்ணா

பல கோடிக்கணக்கான மக்களால் 'அண்ணா' என்றே அன்போடு அழைக்கப்படும் தனிச் சிறப்புப் பெற்றவர்; நாலரைக் கோடித் தமிழ் மக்களின் இதய தெய்வமாக மதிக்கப்படுகிறவர்.

15-9-1909-ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரத்தில் பிறந்தார். அங்குள்ள பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியிலும், சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்று முதுநிலை(எம்.ஏ.) பட்டம் பெற்றுத் தனக்கென ஒரு தனிப் பெருமையை ஈட்டிக் கொண்டார்.

பாலபாரதி, நவயுவன், ஜஸ்டிஸ் பத்திரிகைகளின் துணை ஆசிரியராகவும், 'விடுதலை'யின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். 'திராவிடநாடு' இதழையும், பின் 'காஞ்சி' இதழையும் காஞ்சியிலிருந்து வெளியிட்டார். ஹோம் லாண்ட், ஹோம் ரூல், ஆகிய ஆங்கில இதழ்களையும் வெளியிட்டார். அவர் தொடாத துறை இல்லை; அவர் தொட்ட துறை அத்தனையும் அவரால் சிறப்புப் பெற்றன.

1957-ஆம் ஆண்டில் சட்டமன்றத் தேர்தலில், காஞ்சி தொகுதியில் தி.மு. கழகத்தின் வேட்பாளராக நின்று வெற்றி பெற்றார். 1962-ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தார். இந்திய நாடாளுமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய ஆங்கிலப் பேருரை—அனைவரையும் கவர்ந்தது—அவருக்குத் தனிச் சிறப்பை உருவாக்கியது.

1967 பொதுத் தேர்தலில் தமிழகத்தில் தி.மு. கழகம் பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்தத் தேர்தலில் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அண்ணா, அதைத் துறந்து மாநிலத்தின் முதல்வரானார்.

இரண்டாண்டுக் காலத்தில் தமிழகத்திற்குப் பல அரிய நன்மைகளை உருவாக்கினார்.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு அவரது ஆட்சியில் மலர்ந்தது.

சீர்திருத்தத்திருமணம் சட்டப் பூர்வமாகியது.

தமிழ்நாட்டுப் பள்ளியில் இந்தி ஒழிந்தது. இரு மொழித் திட்டம் அமலாகியது.

சென்னை மாநிலத்திற்குத் ''தமிழ்நாடு'' என்ற பெயர் அதிகாரப்பூர்வமாகக் கிடைத்தது.

1968-ல் அமெரிக்க அரசின் விருந்தினராகச் சென்று யேல் பல்கலைக் கழகத்தின் சப்ஃபெலோஷிப்'பைப் பெற்றார். அமெரிக்கர்கள் மட்டுமே பெற்று வந்த இந்தப் பட்டத்தை முதன் முதலாகப் பெற்ற வெளிநாட்டவர் அண்ணாதான். அந்த அண்ணா செங்கற்பட்டு மாவட்டத்தவர் என்பதை எண்ணும் போது செங்கையின் பெருமை ஓங்கி நிற்கிறது.

பேரறிஞர் அண்ணா 1969-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3-ஆம் நாள் இவ்வுலகைப் பிரிந்தார். தமிழகமே கதறி அழுதது. ஒருமைப்பாட்டைப் பேணி வளர்த்த அண்ணாவிற்கு அனைத்துக் கட்சியினரும் அஞ்சலி செலுத்தினார்கள்.

அவரது முதலாவது நினைவு நாளான 3—2—1970 அன்று இந்திய அஞ்சல்துறை, அண்ணாவின் நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டுப் பெருமை தேடிக் கொண்டது. 20 காசு விலையுள்ள இந்த அஞ்சல் தலை வெளியீட்டு விழா, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது. மத்திய அமைச்சர் பேராசிரியர் ஷேர்சிங் அவர்களிடமிருந்து முதல் அஞ்சல் தலையை, அண்ணாவழி நின்று அன்னைத் தமிழகத்தை அன்போடு கட்டிக் காத்துவரும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பெற்றுக்கொண்டது வரலாற்றுச் சிறப்புடையதாகும்.



### செயிண்ட் தாமஸ்

செயிண்ட் தாமஸ் என்னும் புனித தோமையார், இயேசு கிறித்துவின் 'நற்செய்தி'யைப் பரப்ப வந்த 12 (Apostles) தூதுவர்களுள் ஒருவராகக் கருதப்படுபவர். அவர், கி.பி. 52-ல் இந்தியாவுக்கு வந்து, தென்னகத்தில் கிறித்தவச் சமயத்தைப் பரப்பினார் என்று கிறித்தவர்கள் அவரைப் பாராட்டுகின்றார்கள்.

புனித தோமையார் வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையதாக மட்டுமல்ல—அவருடைய பெயராலேயே அழைக்கப்படுவதும் ஆகிய செயிண்ட் தாமஸ் மவுண்ட் என்னும் பரங்கிமலை, செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தது. இந்த மலை, கடல் மட்டத்திற்குமேல் 300 அடி உயரமுள்ளது. புனித தோமையார், இங்குதான் தன் செங்குருதி சிந்தித் தலைவனுக்காகச் சாட்சியமளித்தார் என்று கிறித்தவப் பெருமக்களால் கூறப்படுகிறது.

யாத்திரீகர்களும் உல்லாசப் பயணிகளும் கண்டு மகிழத்தக்க வண்ணம் மரப்பலகையால் வரையப்பட்டுள்ள ஓர் அழகான ஓவியம் இம்மலையில் உள்ளது. சென்னை மயிலை அதிமேற்றிராசன அதி. சங். ஆல்பர்ட் சந்திராதே சுவாமிகள், புனித தோமையாரின் வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுத்து ஆராய்ந்து வருகிறார்.

புனித தோமையாரின் கல்லறை சென்னை சாந்தோம் கதீட்ரலில் உள்ளது. இவரது 19-ஆம் நூற்றாண்டு விழா இம்மாதம் சென்னை தீவுத் திடலில் சிறப்பாக நடைபெற இருக்கிறது.

இந்திய அஞ்சல் தந்தித் துறை 2—12—1964-ல் பம்பாயில் நடைபெற்ற கத்தோலிக்கர் உலக மாநாட்டின்போது 15 காசு விலையுள்ள புனித தோமையார் திருவுருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிட்டு மரியாதை செய்தது.

### திருவாலங்காடு நடராசர்

திருவாலங்காடு செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ளது. சுந்தரர், அருணகிரியார், குமரகுருபரர் ஆகியோரின் பாடல் பெற்ற திருத்தலமாகும். காரைக்காலம்மையார் முத்தி பெற்ற திருத்தலமாகச் சைவ உலகம் இதனைப் பாராட்டுகிறது. ஒரு காலத்தில் ஆலமரங்கள் சூழ்ந்த காடுகள் இங்கு இருந்ததால், இவ்வூர் இப்பெயரைப் பெற்றது என்பர். இங்குள்ள நடராசர் திருவுரு வெண்கலத்தாலானது. இது இங்குக் கண்டெடுக்கப்பட்டது. புதைபொருள் வரிசையில் 2-வது சுதந்தர தின விழாவையொட்டி, இந்திய அஞ்சல் தந்தித் துறை இந்த நடராசர் திருவுருவம் பொறித்த அஞ்சல் தலையை 15—8—1949-ல் இரண்டணா விலையில் வெளியிட்டுச் சிறப்புச் செய்தது. [வளரும்]

# எங்கள் செங்கை







சிங்களத்தில் வாழுகின்ற தங்கத் தோழி !
செங்கைமா வட்டத்தின் சிறப்பா கேட்டாய் ?
செங்கழுநீர்ப் பூமலிந்து செழித்த தாலே
செங்கழுநீர்ப் பட்டென்றே அழைக்கப்பட்டோம்!
சங்கத்துத் தமிழ்ப்புலவர் அன்றே சொன்ன
சான்ருேர்க்கே உரியஇடம் இதுதான் ! சான்ரு ?
அங்கத்தின் அணுக்களெலாம் அறிவை ஏற்றி
அற்புதங்கள் செய்த அண்ணு பிறந்த தெங்கே ?

'வாதாபி வென்றவர்கள்' வாழ்ந்த தெங்கே ?
வண்'கலிங்கப் பரணி'யெலாம் ஒலித்த தெங்கே ?
ஆதாரம் சேதாரம் அடைந்தி டாமல்
அழகழகாய்க் கல்லெல்லாம் கவிதை தீட்டிக்
காதாரக் கண்ணுர வரலா றெல்லாம்
காட்டுகின்ற 'கடல் மல்லை' இருப்ப தெங்கே ?
ஏதேதோ கல்லூரி இன்ருே தோன்றும் ;
என்றைக்கோ கல்லூரி இருந்த திங்கே !

கடல்தாண்டி, மலைதாண்டி, கண்டம் தாண்டி,
கட்டுப்பா டெல்லையெனும் சட்டம் தாண்டி
இடந்தேடி ஓடிவரும் பறவைக் கூட்டம்
'எல்லாமே எல்லார்க்கும்' என்னும் வண்ணம்
நடைமுறையில் சமதரும எழில்மா நாட்டை
நடத்துகின்ற 'ஐ. நா.' தான் வேடந் தாங்கல் :
இடையழகோர் உடையழகைப் பெறுவ தற்கே
இழையோடும் பட்டுரே காஞ்சி யன்ருே ?

விளக்குப்பூ மலர்வதற்கே அனல் மின்னாற்றல்
விளைவிக்கும் வட 'என்னூர்'! அதுபோல் நுட்பத்
துளியளவின் அணுவினிலே பூதச் சக்தி
தோற்றுவிக்கும் 'கற்பாக்கம்'! நடுத்த ரத்தார்
எளியவர்கள் ஓட்டுகின்ற சைக்கிள் எல்லாம்
இங்களிக்கும் 'அம்பத்தூர்'! பகைவர் தம்மைக்
களத்தினிலே துவைப்பதற்கு 'டாங்கி' தந்து
காக்கின்ற 'ஆவடி'யும் உள்ள தெங்கே ?

மண்ணெல்லாம் பொன்னாக்கும் வளமார் ஏரி
மலிந்ததனுல் 'பொன்னேரி' என்றும், என்ருே
மண்ணாண்ட 'கோ'முடியைப் பூண்ட தாலே
மருவிய'கும் முடிப்பூண்டி' என்றும், கூடும்
எண்ணிறந்த பக்தர்மனம் தணிப்ப தற்கே
எழுந்தமலை 'திருத்தணிகை' என்றும், சாகா
திண்ணியநற் குறள்படைத்தோன் பெயரைக் கூற
'திருவள்ளூர்' என்றுமிங்கே ஊர்கள் கண்டோம் !

நீரோடப் பாலாறே ஓடும் ! ஆனுல்
நெஞ்சோடும் வியர்வைகொண்ட வேளாண் மக்கள்
ஏரோட்டம் குறைந்திடுமோ ! உணவில் நாங்கள்
என்றைக்கோ நிறைவோட்டம் பெற்று விட்டோம்
தேரோட்டம் நடத்தி வந்த சோழர் காலச்
சிறப்போட்டக் கல்வெட்டோ நிறைந்த திங்கே !
ஈரோட்டுப் பாதைவழி சென்ற அண்ணு
இருந்த மண்ணே 'தமிழகத்தின் முடி'தான் என்போம் !

கோபன்

கவிஞர். கா. வேழவேந்த

# ஒப்பற்ற ஒட்டுக்கிச்சிலி



# உருவாக்கியது செங்கையே!

'சொர்ணக் கிச்சிலி', 'சன்ன சொர்ணவாரி', 'டி.கே.எம். 6' என்றெல்லாம் வழங்கப் பெறும் ஒட்டுக் கிச்சிலியின் அரிசி சன்னமாகவும், வெண்மையாகவும் இருப்பதால் தமிழகத்தில் மட்டுமின்றி உலகெங்கிலும் ஒப்பற்ற அரிசியாக விளங்குகிறது. ஜப்பான், பிலிப்பைன்சு போன்ற நாடுகளிலும் ஒட்டுக் கிச்சிலி பரவியுள்ளது.

குருத்துப் பூச்சியின் தாக்குதலை ஓரளவுக்கு எதிர்க்கும் சக்தியை இயற்கையிலேயே பெற்றிருப்பது, ஒட்டுக் கிச்சிலி ரகத்திற்குள்ள மற்றொரு சிறப்புத்தன்மையாகும். இச்சிறப்புத் தன்மையைப் பெற்றிருப்பதாலேயே, ஒட்டுக் கிச்சிலியைப் பல ஒட்டுச் சேர்க்கைகளில் பயன்படுத்திப் பல உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களை உருவாக்கும் முயற்சியில், பிலிப்பைன்சு நாட்டிலுள்ள அனைத்து நாட்டு அரிசி ஆராய்ச்சி நிலையம் (International Rice Research Institute) ஈடுபட்டு வருகிறது. அவ்வரிய முயற்சியில் கிடைத்த முதல் வெற்றியே 'அதிசய ஒட்டுக் கிச்சிலி' எனப்படும் ஐ.ஆர். 20 ரகமாகும்.

எல்லாப் பட்டத்திற்கும் ஏற்ற ரகமாக (Cosmopolitan Strain) இருப்பது ஒட்டுக் கிச்சிலி ரகத்திற்குள்ள மூன்றாவது சிறப்பாகும்.

இத்தகைய முப்பெருஞ் சிறப்புகளைப் பெற்று விளங்கும் ஒட்டுக் கிச்சிலி ரகத்தை உருவாக்கியது செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திரூர்குப்பம் நெல் ஆராய்ச்சி நிலையமே என்பது செங்கை மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கக்கூடிய செய்தியாகும். இந்த ஆராய்ச்சி நிலையம் சென்னை-அரக்கோணம் புகைவண்டிப் பாதையில் உள்ள செவ்வாப் பேட்டை ரோடு புகைவண்டி நிலையத்திற்குத் தெற்கில் 1.5 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. திரூர்குப்பம் நெல் ஆராய்ச்சி நிலையத்தின் பணி 30 ஆண்டுகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களுக்கு ஏற்ற நெல் ரகங்களை உருவாக்கவும், அம் மாவட்டங்களில் உள்ள நிலையில்லாப் பருவ மழையை நம்பியிருக்கும் பகுதிகளிலும், பாசனப் பற்றாக் குறை நிலவும் பகுதிகளிலும், ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் வேண்டி, செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டம், திரூர் குப்பம் கிராமத்தில் 1942-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இந்த நெல் ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டது. இவ்வாராய்ச்சி நிலையத்தின் மொத்தப் பரப்பு 39·29 ஏக்கர். அதில் 31·04 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. 4·79 ஏக்கரில் பழத் தோட்டம் அமைந்துள்ளது; கட்டடங்கள், பாதைகள் 3·46 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளன. மொத்தம் சாகுபடியாகும் பரப்பில் 1·70 ஏக்கரில் மானாவாரியாகவும், 29·34 ஏக்கர் நிலப்பரப்பில் நன்செய்ப் பயிர்களாகவும் சாகுபடி செய்யப்படுகின்றன.

இந்த ஆராய்ச்சி நிலையம் தொழுவூர் ஏரியின் தலை மதகுக்கு அருகிலிருப்பதால், ஏரியில் நீர் நிரம்பும் போது எளிதில் நீர்ப்பாசன வசதி பெறுகிறது. இந்நிலையத்தில் 4 பாசனக் கிணறுகளும் உள்ளன. அவைகளில் 2 கிணறுகள் மட்டுமே நிலையாகத் தண்ணீர் கொடுத்து வருகின்றன. மற்ற இரண்டு கிணறுகளும் ஓரளவுக்கே தண்ணீர் அளிக்கின்றன.

### சாதனைகள்

திரூர்குப்பம் நெல் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து இதுவரை 6 பொறுக்கு ரகங்கள் (Improved Strains) வெளியிடப்பட்டுள்ளன. இவைகளில் முதல் 5 ரகம் உயர் வழித் தேர்வு மூலமாகவும் (Pureline Selection), ஆறாவது ரகம் ஒட்டுச் சேர்க்கை

( Hybridisation ) மூலமாகவும் உருவாக்கப்பட்டனவாகும். அவைகளின் விவரம் வருமாறு:

**1. பிசினி** (டி. கே. எம். 1): இதன் வயது 130 நாட்கள்; சம்பாப் பட்டத்தில் மானாவாரியாகப் பயிரிடுவதற்கு ஏற்றது. இதன் அரிசி சிவப்பாக இருக்கும். உள்ளூர் மானாவாரி ரகங்களை விட 37 சத அளவுக்கு அதிக மகசூல் கொடுக்கும். சராசரி ஹெக்டேர் மகசூல் 1,600 கிலோ.

**2. செம்பாளை** (டி.கே.எம். 2): இதன் வயது 120 நாட்கள். அரிசி வெண்மையாக இருக்கும். சம்பாப் பட்டத்தில் மானாவாரியாகப் பயிரிட ஏற்றது. உள்ளூர் செம்பாளை ரகத்தை விட 34 சதம் அதிக மகசூல் அளிக்கும். மானாவாரியில் ஹெக்டேருக்குச் சராசரியாக 1,100 கிலோ மகசூல் கொடுக்கிறது.

**3. சொர்ணவாரி** (டி. கே. எம். 3): இதன் வயது 105 நாட்கள். சொர்ணவாரிப் பட்டத்திற்கு ஏற்றது. அரிசி சிறிது பருமனாகவும், வெண்மையாகவும் இருக்கும். சராசரி ஹெக்டேர் மகசூல் 4,000 கிலோ. உள்ளூர் ரகத்தை விட 12 சதம் அதிக விளைச்சல் அளிக்கும்.

**4. ஏர்ர சன்னவட்லு** (டி. கே. எம். 4): சித்தூர் மாவட்டத்தில் நவரைப் பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டு வந்த ரகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ரகமாகும். அரிசி வெண்மையாகவும், சன்னமாகவும் இருக்கும். இதன் வயது 115 நாட்கள். சராசரியாக ஹெக்டேருக்கு 2,800 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. உள்ளூர் ரகத்தை விட இது 12 சதம் அதிக மகசூல் அளிக்கும்.

**5. மணக்கட்டை** (டி. கே. எம். 5): இதன் நெல் கருப்பாகவும், அரிசி சிவப்பாகவும் இருக்கும். வயது 110 நாட்கள். இந்த ரகம் உள்ளூர் ரகத்தைவிட 14 சதம் அதிக மகசூல் அளிக்கும். சராசரியாக ஹெக்டேருக்கு 4,000 கிலோ மகசூல் அளிக்கவல்லது.

**6. ஒட்டுக் கிச்சிலி** (டி. கே. எம். 6): இந்த ரகம் 'ஜி.இ.பி. 24' எனப்படும் கிச்சிலி சம்பாவையும், 'கோ-18' எனப்படும் வெள்ளைக்கார் ரகத்தையும், ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டது. இதன் அரிசி கிச்சிலிச் சம்பாவைப் போல் சன்னமாகவும், வெண்மையாகவும் இருக்கும். இதன் வயது 120 நாட்கள். இது சராசரியாக ஹெக்டேருக்கு 4,500 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. செங்கற்பட்டு மாவட்டத்தில் இந்த ரகம் நவரை, சொர்ணவாரி ஆகிய இரு பட்டங்களிலும் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த ரகம் இந்தியாவில் மட்டுமின்றி உலகெங்கிலும் புகழ் பெற்று விளங்குகிறது.

மேற்கூறிய 6 ரகங்களை, வெளியிட்டுள்ள இவ்வாராய்ச்சி நிலையம் கீழ்க்கண்ட சாதனைகளையும் நிகழ்த்தியுள்ளது.

* இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத் திட்டத்தின் கீழ் இவ்வாராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் முடிவாக 'கோ-31' எனப்படும் ஒட்டு மானாவாரிச் சம்பா வெளியிடப்பட்டது. இந்த ரகம் மானாவாரியாக நெல் பயிரிடும் எல்லாப் பகுதிகளுக்கும் ஏற்றதாக இருக்கிறது.

* ஒரே அளவு தழைச்சத்து அடிப்படையில் அமோனியம் சல்பேட்டும், அமோனியம் குளோரைடும் ஒரே மாதிரியாகவே மகசூலை அதிகரிக்கின்றன என்று தெரியவந்துள்ளது.



* ஐ. ஆர். 20 ரகம் சொர்ணவாரி, சம்பா, நவரை ஆகிய 3 பட்டங்களிலும் நன்கு வளர்கிறது என்பதும், சம்பா, நவரைப் பட்டங்களில் நடும் பொழுது அதன் வயது 10 நாட்கள் வரை கூடுகிறது என்பதும் புலனாகியுள்ளது.

* 'பாலா' என்னும் குறுகிய கால வயது (90 முதல் 100 நாள்) ரகம் சொர்ணவாரிப் பருவத்திற்கு மிகவும் ஏற்றது என்பதும், ஹெக்டேருக்கு 4,499 கிலோ வரை மகசூல் கொடுக்கக்கூடியது என்பதும் இங்கு நடத்தப் பெற்ற பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

* 'புளு டான்' ( Blue dawn ) என்ற குறுகிய கால அமெரிக்க ரகத்தை டி. கே. எம். 6, கோ. 32 ஆகியவைகளுடன் ஒப்பிட்டுச் சாகுபடி செய்ததில் எல்லாப்பட்டங்களிலும் குறைந்த அளவு மகசூலே கொடுத்துள்ளதால், 'புளு டான்' இப்பகுதிக்கு ஏற்றதல்ல என்பது தெளிவாகியுள்ளது.

* ஒற்றை வரிசை நடவைக் காட்டிலும், இரட்டை வரிசை நடவு அதிக மகசூல் அளிக்கும் என்பது தெளிவாகியுள்ளது. 1970–71-ஆம் ஆண்டில் நடத்தப் பெற்ற சோதனையில் ஹெக்டேருக்கு இரட்டை வரிசை நடவு மூலம் 5,181 கிலோ மகசூலும், ஒற்றை வரிசை நடவு மூலம் 4,746 கிலோ மகசூலும் கிடைத்துள்ளது. இரட்டை வரிசை முறை அதிக மகசூல் அளிப்பதுடன், களையெடுத்தல், ஊடு உழவு செய்தல், பயிர்ப் பாதுகாப்பு செய்தல் ஆகியவைகளை எளிதாகச் செய்யவும் உதவுகிறது.

* மகசூல் ஒப்பீட்டுச் சோதனையில் 'கோ. 32' என்னும் திருச்செங்கோட்டுச் சம்பா, ஹெக்டேருக்கு உச்ச அளவாக 4,625 கிலோ மகசூல் கொடுக்கவல்லது என்பதும், குறுகிய கால வயதுடைய (105 முதல் 110 நாள்) காவேரி (ஐ. இ. டி. 355) ஹெக்டேருக்கு 3,634 கிலோ மகசூல் கொடுக்கக் கூடியது என்பதும் தெளிவாகியுள்ளது.

* செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் ஒரு இலட்சம் ஏக்கருக்கும் அதிகமானப் பரப்பில் குள்ளகார் என்னும் குறுகிய கால ரகம் பயிரிடப் படுவதால், இந்த ரகத்திற்குப் பதிலாக வேறு புதிய ரகத்தை உருவாக்குவதற்கான சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

* உலகப் புகழ் ஒட்டுக் கிச்சிலியின் மகசூலை அதிகரிக்கவும், அது தலை சாய்ந்து விழுவதைத் தடுக்கவும் வேண்டி, அதை 'தைச்சுங் நேடிவ்-1' என்ற ரகத்துடன் ஒட்டுச் சேர்க்கப் பட்டது. அதிலிருந்து கல்சர் 1251 என்ற ரகம் கிடைத்துள்ளது. அந்தக் கல்சர், காஞ்சி, காவேரி ஆகிய ரகங்களை விட அதிக மகசூலும் டி. கே. எம். 6 ரகத்தை விட 47 சத அதிக மகசூலும் கொடுப்பது தெளிவாகியுள்ளது. அந்தக் கல்சர் தற்பொழுது மாவட்டச் சோதனையில் இருந்து வருகிறது.

* களைக்கொல்லி மருந்துகளின் பயன்களைக் கண்டறியத் தொடர்ந்து சோதனை நடந்து வருகிறது.

இதுபோல் இன்னும் பல பரிசோதனைகள் இந்த நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்று வருகின்றன. வறட்சியைத் தாங்கும் 317 ரகங்களும், வேளாண்மைத் துறையின் 7 ரகங்களும் இங்கு வளர்க்கப் பட்டு மேல் ஆராய்ச்சி மற்றும் ஒட்டுச் சேர்க்கை செய்வதற்குத் தேவையான கரு அமில வங்கியாக ( Germplasm Bank ) இந்த நிலையம் உதவுகிறது.

மாநில விதைப் பண்ணைகளில் விதைப் பெருக்கம் செய்வதற்காகத் திரூர்குப்பம் நெல் ஆராய்ச்சி நிலையம், மூல வித்துக்களை ( Nucleus seeds ) உற்பத்தி செய்து அனுப்புகிறது. 1970–71-ஆம் ஆண்டில் இங்கு 32,516 கிலோ விதை உற்பத்தி செய்து அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு வகைகளில் பயனளித்து வரும் திரூர்குப்பம் நெல் ஆராய்ச்சி நிலையம் குறிப்பாகச் செங்கற்பட்டு மாவட்ட உழவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கிறது என்றால் மிகையல்ல!




## நிலநீர் இயக்குநர் அலுவலகம்

அறிவிப்பு எண் 17/71-72.

வேலையின் பெயர்:—நிலநீர்க் கோட்டத்திற்குத் தேவையான வார்ப்பு இரும்புக் குழாய்களை (C.I. pipes) இணைக்க உபயோகிக்கும் கார் ஈயக் கட்டிகள் (pig lead) வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேலே குறிப்பிட்டுள்ள வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேலே குறித்துள்ள அலுவலகத்தில் 3-5-1972 அன்று மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநர் அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள அவருடைய அலுவலகத்தில் 3-5-1972 அன்று மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்—கே. 2.

முன்வைப்புத் தொகை—ரூ. 7,900 (ரூபாய் ஏழாயிரத்து தொளாயிரம் மட்டும்.)

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை—விலை ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும் விற்பனை வரி ரூ. 0.40 (நாற்பது காசுகள் மட்டும்).

வேலையை முடிக்கவேண்டிய காலம்—மூன்று மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம்—13-3-1972 முதல் 1-5-1972 வரை.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது). அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் **"Public Works Remittances III Other Remittances"** என்ற தலைப்பிட்டு நிருவாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம், சென்னை-17, அவர்களின் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி மேற்படி தொகை செலுத்தப் பட்ட அதே சலானில் **"XII Sales Tax (b) Receipts Under State Sales Tax Act General Sales Tax"** என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்படவேண்டும். மேற்குறித்த செலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

சா. பஞ்சநதம்,
இயக்குநர், நிலநீர் இயக்குநர் அலுவலகம்,

10—எ, தண்டபாணி தெரு,
சென்னை—17.

(த. 1)

## மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம்

பொறியியல் பணித்துறை, திருச்சி மாவட்டம், த. பெ.எண். 55, திருச்சி-1

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்டவேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை திருச்சி வட்டம், திருச்சிராப்பள்ளி அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

(1) வேலையின் பெயர்:—திருச்சி மாவட்டம், குளத்தூர் தாலுக்கா குடுமியாமலையில் உள்ள அண்ணா பண்ணையில் அமைந்திருக்கும் கலைஞர் கருணாநிதி விவசாய ஆராய்ச்சிக் கூடத்திற்காக நிருவாகத்திற்கான கட்டடம் கட்டுதல் (கீழ்த்தளம் மட்டும்).

(2) ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்—20-4-1972 மாலை 3-00 மணி.

(3) பிணைப் பணத் தொகை—ரூ. 5,200 (ரூபாய் ஐயாயிரத்து இருநூறு மட்டும்).

(4) ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

(5) முடிக்க வேண்டிய காலம்—10 மாதங்கள் (பத்து மாதங்கள்).

(6) ஒப்பந்தப் பத்திரத்தின் விலை—ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).

(7) விற்பனை வரி ரூ. 0.88 (எண்பத்தெட்டு காசுகள் மட்டும்).

8. ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி—1—4—1972.

9. விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்னால் ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்—20—4—1972 மாலை 3-30 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் **XXXVII public works-State Revenue-Miscellaneous** மற்றும் **XII Sales Tax.b under the Sales Tax Act General Sales Tax** என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தி மேற்படி சலானை ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மேற்பார்வைப் பொறியாளர், காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

நா. முத்துக்கிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 2)

## சேலம் நகராட்சி

இ. 3. இ.எஸ். டி. நெ. 367/பி/70-71.

சேலம் நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள வேலையைச் செய்வதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15—4—1972-ம் தேதி மாலை 3-00 மணி வரை நகராட்சிப் பொறியர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலையே 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

குறிப்பு:

வைப்புத் தொகையையும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரக் கட்டணம் ரூபாய் 2-ம் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி ஒப்பந்தப் பத்திரங்களை 14—4—1972-ம் தேதிக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். ஷெட்யூலில் மொத்தத் தொகையைக் குறிப்பிடும் பகுதியுட்பட அனைத்துப் பகுதிகளும் பூர்த்தி செய்தல் வேண்டும். அப்படிப் பூர்த்தி செய்யாத ஒப்பந்தப் புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.

வேலையின் விவரம்—சேலம் கோட்டை ஜலால் கான் சாயபு தெருவில் கிரசண்ட் கிளப் மைதானத்தில் ஒரு சமுதாய உறவு **(Community Centre)** மண்டபம் கட்டுதல்.

மதிப்பீட்டுத் தொகை—ரூபாய் 72,000.

வைப்புத் தொகை—ரூபாய் 1,800.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—நான்கு மாதங்கள்.

பெ. அரங்கசாமி,
ஆணையர்.

(த. 3)


ஆயிரமாயிரம் இதயங்களின் பிரதிபலிப்பு
புதிய கிளாசிக் ஷர்ட்டுகள்
வண்ணங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. கோ-ஆப்டெக்ஸ் "கிளாசிக்" ரெடிமேடு ஷர்ட்டுகள். இன்றைய நாகரீகத்திற்கு ஏற்ற அமைப்பு கொண்டது.
உயர்வான துணி. உன்னதமான படைப்பு. உவகையூட்டும் வண்ணங்கள். டிசைன்கள், நாகரீகக் காலர், இவையனைத்தும் ஒருங்கே கொண்டது.
கோ-ஆப்டெக்ஸ்
"கிளாசிக்" ரெடிமேடு ஷர்ட்டுகள்.
இப்பொழுது சென்னை நகரில் மட்டும், லஸ், காமதேனு, குறளகம், தி. நகர் மற்றும் மவுண்ட்ரோடு கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.

ஒப்புயர்வற்ற நெசவு

# கோ-ஆப்டெக்ஸ்

## கைத்தறிஆடைகள்

# கோ-ஆப்டெக்ஸ்

சகாயமான விலை...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ், சென்னை-8.



ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றும் வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும் காந்தி நகர் (புதிய ஆவடி சாலை) என்கிற இடத்தில் பல அடுக்குக் கட்டடங்கள் (தரை மட்டத்திற்கு மேல்) கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 3—4—1972 அன்று பிற்பகல் 3-00 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| வரிசை எண். | பிரிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் தோராய மதிப்பு. ரூபாய் இலட்சத்தில் | முன் வைப்புத் தொகை. | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. (திருப்பித்தர மாட்டாது.) |
|---|---|---|---|---|---|
| 1 | I | 32 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் (தரை மட்டத்திற்குமேல்) எ1, எ2. | 3 | எல். எஸ். 4,500 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி. |
| 2 | II | 32 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் (தரை மட்டத்திற்குமேல்) எ3, எ4. | 3 | எல். எஸ். 4,500 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி. |
| 3 | III | 32 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் (தரை மட்டத்திற்குமேல்) எ5, எ6. | 3 | எல். எஸ். 4,500 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி. |
| 4 | IV | 32 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் (தரை மட்டத்திற்குமேல்) எ7, எ8. | 3 | எல். எஸ். 4,500 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி. |

ஒப்பந்தப் பத்திரங்களை கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 8—3—1972 முதல் 2—4—1972 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 3—4—1972 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ அல்லது எற்றுக் கொள்ளவோ நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

நிருவாகப் பொறியாளர்,
தாண்டவராயன் சத்திரம்
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
கோட்டம் எண் 3.

(த.13)

## பொதுப்பணித் துறை

சென்னை-செங்கற்பட்டு வட்டம்

வேலையின் பெயர்:—சென்னை எழும்பூரில் அரசினர் தாய்-சேய் மருத்துவ மனையில் புற நோயாளிகளுக்கான பகுதி (தரைத் தளமும், முதல் தளமும்) கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநரின் சார்பில் பொதுப்பணித் துறை மேற்பார்வைப் பொறியாளர் சென்னை-செங்கற்பட்டு வட்டம் அவர்களால் மேற்கண்ட வேலைக்கு அவருடைய அலுவலகத்தில் 12-4-1972 மாலை 3 மணி வரையில் மூடிய உறையில் அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தகுந்த தரப்பில் செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-செங்கை வட்டம் அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த விவரம்—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 4,050.
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 20 (விற்பனை வரி $3\frac{1}{2}$ சத விதம்).
4. வேலையை முடிக்க வேண்டிய காலம்—4 மாதங்கள்.
5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் கிடைக்கும் காலம்—3-4-1972-லிருந்து 11-4-1972 வரை.
6. ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறும் நாள்—12-4-1972.

மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, விற்பனைவரி ஆகியவை அரசுக் கருவூலத்திலாவது ரிசர்வ் பாங்கியிலாவது

**"P.W.D. Remittances III—other remittances to the credit of the Exe. Engineer, Buildings Division No. II, chepauk, Madras-5"** என்ற தலைப்பில் கட்ட வேண்டும். விற்பனை வரியும் அதே சலானில் **"XII Sales tax b. receipts under the state sales-tax general sales-tax"** என்ற தலைப்பில் கட்ட வேண்டும். மேற்கண்ட சலானை கொடுத்தால் தான் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும். இச் சலானின் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

எதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ (அல்லது) எல்லாவற்றையுமோ நிராகரிக்கும் உரிமை மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-செங்கை வட்டம் அவர்களுக்கு உண்டு.

மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை சென்னை-செங்கை வட்டம் அவர்கள் அலுவலகத்தில் வேலை நேரங்களில் வந்து அறிந்து கொள்ளவும்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கை வட்டம்.

(த. 22)

## ஒப்பந்தப் புள்ளி

### நிலநீர் இயக்குநர் அலுவலகம்

ஒப்பந்தப் புள்ளி அறிக்கை எண்:—**16/Tender VII—B/M2/72, dated 1—3—1972**

வேலையின் விவரம் :—கனரக லேத்தை **(Heavy Duty, Lathe)** வழங்குதல்.

தமிழக ஆளுநருக்காக அவர் சார்பில், மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட படிவத்தில், மேற்கண்ட அலுவலகத்தில் 10–4–1972 அன்று மாலை 3–00 மணிக்குள், வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிப்படிவங்கள், நிலநீர் இயக்குநரால், மேற்கண்ட அலுவலகத்தில், அவ்வமயம், அங்கு வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில், அதே தேதியில் மாலை 3–30 மணிக்குத் திறக்கப்படும்.

1. முன்வைப்புத் தொகை—ரூ. 3,000.
2. ஒப்பந்தப் புள்ளிப் படிவங்களின் விலை—ரூ. 10
விற்பனை வரி—ரூ. 0·40.
3. வேலையை முடிக்க வேண்டிய காலம்—இரண்டு மாதங்கள்.
4. ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் மேற்கண்ட அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம் :—5–3–1972 முதல் 5–4–1972 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் படிவங்களின் விலை (திருப்பியளிக்கவியலாதது) அரசாங்கக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ செலான் மூலம் **"Public works remittances III Other remittances, in the credit of the Hydrogeologist Ground water follow up Division, Thanjavur—1.** என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனைவரித் தொகையானது **"XII Sales-tax (b) receipts under State Sales tax Act—General Sales tax"** என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்குறித்த செலான்களைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் கொடுக்கப்படும்.

வேறு எந்த விதமான, தொகையளிப்பும் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

**எஸ். பஞ்சநாதன்,**
இயக்குநர்.

நிலநீர் இயக்குநர் அலுவலகம்,
10 எ, தண்டபாணி தெரு,
சென்னை-17.

(த. 14)

## விளம்பரம்—1

### தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்

தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் புத்தகங்களைச் சென்னை, செங்கற்பட்டு தவிர ஏனைய மாவட்டங்களில் விற்பனை செய்வதற்கு மொத்த வியாபாரிகள் தேவை. ஒவ்வொரு தாலுக்காவிற்கும் புத்தக வியாபாரி ஒருவர் பதிவு பெற்ற மொத்த வியாபாரியாக நியமிக்கப் படுவார். கீழ்க்கண்டவர்கள் மொத்த விற்பனை உரிமை பெறுவதற்கு விண்ணப்பங்கள் வேண்டுமென "மேலாண்மை இயக்குநர், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 41, ஸ்பர்டாங்க் சாலை, சென்னை-34" என்ற முகவரிக்கு எழுதலாம்.

(1) பதிவு பெற்ற பதிப்பாளர்கள்.

(2) முழு நேரப் புத்தக வியாபாரிகள்.

(3) கூட்டுறவு அங்காடிகள்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவு அஞ்சலில் உரிய பதிவுப் பணத்துடன் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திங்கட்கிழமை 10-ஆம் நாள் மாலை 4–00 மணிக்குள் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பப் படுதல் வேண்டும்.

குறிப்பு :—ஒரு ரெவின்யூ மாவட்டத்தின் பல தாலுக்காக்களில் மொத்த விற்பனை உரிமை வேண்டுவோர் ஒரே விண்ணப்பத்தைப் பயன்படுத்தினால் போதுமானது. ஆனால், வெவ்வேறு ரெவின்யூ மாவட்டங்களின் தாலுக்காக்களில் மொத்த விற்பனை உரிமை வேண்டுவோர் ஒவ்வொரு ரெவின்யூ மாவட்டத்திற்கும் ஒரு விண்ணப்பத்தைப் பயன்படுத்துதல் வேண்டும்.

## விளம்பரம்—2.

சென்னை செங்கற்பட்டு ரெவின்யூ மாவட்டங்களில் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திடமிருந்து நேரிடையாகவும், ஏனைய ரெவின்யூ மாவட்டங்களில் தாலுக்கா மொத்த வியாபாரிகளிடமிருந்தும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் புத்தகங்களை வாங்கி விற்பனை செய்ய விரும்பும் சில்லறை வியாபாரிகள் அனைவரும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தோடு பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவுத் தொகை ரூ. 50 காப்புறுதித் தொகை ரூ. 1,000 கழிவு 5 சதவீதம். விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர், "மேலாண்மை இயக்குநர், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 41, ஸ்பர் டாங்க் சாலை, சென்னை -4" என்னும் முகவரிக்கு எழுதலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவு அஞ்சலில் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திங்கட்கிழமை 10-ஆம் நாள் மாலை 4-00 மணிக்குள் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(த. 15)

## ஏல விளம்பரம்

### காவல் துறை

தஞ்சாவூர் மேற்கு மாவட்டக் காவல் துறையைச் சேர்ந்த கண்டனம் செய்யப்பட்ட பதிவு எண் எம்.டி.ஓ. 3889 லாரியை, தஞ்சாவூர் மேற்கு மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 10–4–1972 காலை 11 மணி அளவில் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

ஏலம் விடப்படும் வண்டியின் விவரங்கள்—

பதிவு எண்—எம்.டி.ஓ. 3889.

பர்கோ—பெட்ரோல் இயக்கம்.

மூடிய வகை—1962 மாடல்.

வீல்பேஸ் 165"—குதிரை இயக்கம் 29.4.

கொள்ளளவு—23 நபர்கள்.

மேற்படி வண்டியைப் பற்றிய மற்ற விவரங்களுக்குத் தஞ்சாவூர் மாவட்டக் காவல் துறை ஆயுதப் படை துணைக் கண்காணிப்பாளரை அணுகவும்.

**எஸ். ஐ. ஜாபர் அலி,**
காவல் கண்காணிப்பாளர்,
தஞ்சாவூர் மேற்கு.

(த. 21)

## ஒப்பந்தப் புள்ளி

### வேளாண்மைத் துறை

1. தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவரது கட்டளை ஆணையின்படியும் கடலூர் 1–பி, கடற்கரைச் சாலையில் உள்ள வேளாண்மைக் கோட்டப் பொறியாளரால், பவர் டிரில்லுக்குத் தேவையான, 60 குதிரை ஓட்ட 6 சிலிண்டர் இண்டஸ்டிரியல் டீசல் எஞ்சின் வழங்க குறிப்பிட்ட படிவத்தில், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20–4–1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

2. ஒப்பந்தப் புள்ளி ரூபாய் 500–க்கான செலுத்துச் சீட்டுடன் (முன் வைப்புத் தொகை) வரவேண்டும்.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கடலூர் வேளாண்மைக் கோட்டப் பொறியாளரிடமிருந்து ரூபாய் 5.20 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

4. ஒப்பந்தப் புள்ளி 20–4–1972 மாலை 4 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தங்கள் ஒன்றையோ (அல்லது) எல்லாவற்றையுமோ, நிராகரிக்கவோ (அல்லது) ஏற்றுக் கொள்ளவோ வேளாண்மைக் கோட்டப் பொறியாளருக்கு முழு உரிமை உண்டு.

**வேளாண்மைக் கோட்டப் பொறியாளர்,**
கடலூர்-1.

(த. 10)

# எல்லோருக்கும் வீடு





எல்லா வருமான வகுப்பினருக்கும் ஏற்ற இணைந்தவீடுகள் (FLATS) வாரீர்! வாங்க வாரீர்!!



## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

## எளிய விலைமுறைத் திட்டம்.

விண்ணப்பம் அனுப்ப விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை 1-3-1972 முதல் அனுப்பிவைக்கலாம். சென்னை நகரிலோ, பிற இடங்களிலோ, வீடோ, மனைக்கட்டோ இல்லாதவர்கள் மட்டுமே விண்ணப்பங்கள் அனுப்பலாம். விண்ணப்பத்தை பதிவு செய்து கொள்ளும் சமயத்தில் இணைந்த வீட்டிற்கான விலையில் கால்வாசித் தொகையைக் கட்டவேண்டும்.

| **இணைந்த வீட்டின் விலை வரம்பு.** (மனைக்கட்டின் விலையும் சேர்ந்து) | | **வருமான வரம்பு** |
|---|---|---|
| 1. ரூ. 5,000 முதல் ரூ. 7,000 வரை. | ஓர் அறையுடையது | ஆண்டு வருமானம் ரூ. 4,000 வரை. |
| 2. ரூ. 12,000 முதல் ரூ. 15,000 வரை. | இரண்டு அறைகள் உடையது. | ஆண்டு வருமானம் ரூ. 4,000க்கு மேல் ரூ. 7,000 வரை. |
| 3. ரூ. 25,000 முதல் ரூ. 30,000 வரை. | இரண்டு படுக்கை அறைகள் உடையது. | ஆண்டு வருமானம் ரூ. 7,000 முதல் ரூ. 18,000 வரை. |
| 4. ரூ. 58,000 முதல் ரூ. 60,000 வரை. | மூன்று படுக்கை அறைகள் உடையது. | ஆண்டு வருமானம் ரூ. 18,000க்கு மேல். |

## இணைந்த வீடுகள் இருக்குமிடம்:

**(அ) சென்னை நகர்.**

- பெசண்ட் நகர்.
- அறிஞர் அண்ணா நகர்.
- கலைஞர் கருணாநிதி நகர்.
- வியாசர்பாடி.
- கோரட்டூர் புறநகர்.
- கோட்டூர்புரம் (ஐ-ஐ-டி.க்கு அருகாமை, அடையாறு ஆற்றிற்கு தெற்கு, நந்தனம் அடுக்கு மாளிகைக்குப் பின்புறம்)
- கோகிரேன் பேசின்.
- கீழ்ப்பாக்கம்.
- சென்னியம்மன் கோவில் (தண்டையார் பேட்டை)
- கோட்டிவாக்கம் (திருவான்மியூர்)
- திருவான்மியூர் விரிவாக்கத் திட்டம்.
- அறிஞர் அண்ணா நகர் (மேற்கு விரிவாக்கம்)

**(ஆ) மதுரை நகர்.**
**தல்லாகுளம் — சாத்தமங்கலம் திட்டம்**

**(இ) கோயம்புத்தூர் நகர்.**
**கோவை புதூர் திட்டம்**

**(ஈ) திருச்சி.**
**திருச்சி புறநகர் திட்டம்**

* மூன்று படுக்கை அறைகள் உடைய இணைந்த வீடு வாங்குவோர், முன்பணம் எந்த அளவு கட்டியிருந்தாலும், மீதிப் பணத்தை, குடியேறிய நாளிலிருந்து மூன்று ஆண்டிற்குள் கட்ட வேண்டும்.

## இனிமேல் பதிவு செய்வோருக்கு கிடைக்கும் சலுகைகள்:

1. பதிவு செய்து கொண்ட நாளில் இருந்து 2 ஆண்டுகளுக்குள்ளாக குடிபோகத் தயாராக உள்ள நிலையில் இணைந்த வீடு கொடுக்கப்படுமென உறுதியளிக்கப்படுகின்றது.
2. மீதியுள்ள முக்கால் வாசித் தொகையைக் கட்டும் விரைவு முறையைப் பொறுத்து கீழ்கண்ட வரிசைப்படி இணைந்த வீடு கொடுக்கப்படும்.

அ. குடிபுகும்போது முழுத்தொகையையும் கட்டுதல்
ஆ. 36 சம மாதத் தவணையில் கட்டுதல்.
இ. 60 சம மாதத் தவணையில் கட்டுதல்.
ஈ. 120 சம மாதத் தவணையில் கட்டுதல்.
உ. 180 சம மாதத் தவணையில் கட்டுதல்.

குறிப்பு: (அ) வில் குறிப்பிட்டுள்ள வகையினரைத் தவிர, மற்ற எல்லா வகையினரும், இணைந்த வீட்டில் குடியேறிய நாளில் இருந்து மாதத்தவணை கட்ட வேண்டும்.

3. (அ) (ஆ) (இ) வகையினருக்கு பதிவு செய்த நாளிலிருந்து ஓர் ஆண்டிற்குள் இணைந்த வீடு கிடைக்கும்.
4. (ஈ) (உ) வகையினருக்கு பதிவு செய்த நாளிலிருந்து இரண்டு ஆண்டிற்குள் இணைந்த வீடு கிடைக்கும்.

மேலே (3)லும் (4)லும் குறிப்பிட்ட காலத்திற்குள் இணைந்த வீடு கொடுக்க காலதாமதமானல், விண்ணபங்களைப் பதிவு செய்தபோது கட்டிய கால்வாசித் தொகைக்கு, ஆண்டிற்கு 4 சதவீத வட்டி விகிதம் அவர்கள் கணக்கில் சேர்க்கப்படும்.

**இதர விவரங்களுக்கு உதவிச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். பதிவு செய்து கொள்ளவேண்டிய கடைசி நாள். 30-6-1972 தொலை பேசி எண்: 442291**

**டி.வி. வாசுதேவன்** ஐ.எ.எஸ்.,
தலைவர்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

36, அண்ணா சாலை
சென்னை-35.

## ஏல விளம்பரம்

### காவல் துறை

தஞ்சாவூர் மேற்கு மாவட்டக் காவல் துறையைச் சேர்ந்த கண்டனம் செய்யப்பட்ட பதிவு எண் எம்.டி.ஒ. 3680 லாரியை, தஞ்சாவூர் மேற்கு மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 10-4-1972 காலை 11 மணி அளவில் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

ஏலம் விடப்படும் வண்டியின் விவரங்கள்—

பதிவு எண்—எம்.டி.ஒ. 3680.

ஹிந்துஸ்தான் பெட்போர்ட் திறந்த வகை—1962 மாடல்.

வீல்பேஸ் 167"—குதிரை இயக்கம் 29.4.

கொள்ளளவு—24 நபர்கள்.

பெட்ரோல் இயக்கம்.

மேற்படி வண்டியைப் பற்றிய மற்ற விவரங்களுக்குத் தஞ்சாவூர் மாவட்டக் காவல் துறை ஆயுதப் படை துணைக் கண்காணிப்பாளரை அணுகவும்.

எஸ். ஐ. ஜாபர் அலி,

(த. 20) காவல் கண்காணிப்பாளர், தஞ்சாவூர் மேற்கு.

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண் 17 சர் பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 26-4-1972 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—திருப்பத்தூர் குடிநீர்த் திட்டம்—மூன்றும் கட்டம் தலைமை நீரேற்று நிலையம்—நீரேற்றிகள் வழங்கல்—நிர்மாணித்தல்.
ஒப்பந்த வகை:—மொத்தத்தொகை

முன் வைப்புத் தொகை—ரூ. 2,900 (ரூபாய் இரண்டாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்).

இத் தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் காரைக்குடி குடிநீர் வடிகால் வாரியம் (தமிழ்நாடு) கோட்ட நிருவாகப் பொறியாளர், பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—எட்டு மாதம்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 15.55 (விற்பனை வரி உட்பட).

(ரூபாய் பதினைந்தும், காசு ஐம்பத்தைந்து மட்டும்).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் காரைக்குடி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 48, கல்லூரி சாலை, காரைக்குடி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி, 22-4-1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,

பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,

(த. 19) குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்.

## ஏல விளம்பரம்

### தீயணைப்புத் துறை

கண்டனம் செய்யப்பட்ட தொடர் ஊர்திப் பம்பு பெரஸ்போர்டு, 1956-ஆம் வருட மாடல், எம்.எஸ்.ஒய். 7898, கோயம்புத்தூர் ஸ்டேட் பாங்க் சாலையிலுள்ள கோயம்புத்தூர் தீயணைப்புத்துறை காம்பவுண்டில், 1972-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 10-ஆம் தேதி திங்கட்கிழமை, காலை 11 மணிக்குப் பகிரங்கமாக ஏலம் விடப்படும். மேற்கண்ட தொடர்ஊர்திப் பம்பைக் கோயம்புத்தூர் தீயணைப்புப் நிலையத்தில் பார்வையிடலாம். ஏல நிபந்தனைகள் கீழே கையொப்பமிட்டவருடைய அலுவலகத்தில் பெறலாம்.

ஏ. கே. இராமநாதன்.

கோட்டத் தீயணைப்பு அலுவலர்,

(த. 18) கோயம்புத்தூர் கோட்டம்.

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

### கோதையாறு நீர்மின் திட்டம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அதன் முக உறையின் மேல் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர்மின் திட்டம் 34-எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7 என்று முக உறை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவரது பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் கீழ்க்கண்ட வேலைக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தேதியில் மாலை 3-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். அவைகளை அதே நாளில் மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

குறிப்பிடுகை எண்—கே.சி. 308.

வேலையின் பெயர்:—கோதையாறு மேல்தங்கலில் உள்ள குட்டியாறு அணையில் பிளாக்குகள் நெ. 1-லும் II-லும் ch.-30' முதல் ch. 72.5' முடிய அணைக்கட்டு மேல்தளம் வரை கட்டுமான வேலை (Building Masonry) செய்தல்.

ஒப்பந்தப் பத்திரத்தின் விலை (விற்பனை வரி உட்பட): —ரூ. 10.35.
கட்டுத் தொகை— ரூ. 3,600.
ஒப்பந்தப் புள்ளி பெற்றுக்கொள்ளும் கடைசி தேதி: — 28-4-1972.

2. ஒப்பந்தப் பத்திரங்களின் நகல்களை (மாற்றத் தக்கவை அல்ல) குறிப்பிட்டுள்ள அதன் விலையைக்கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இத் தொகையைத் திருப்பித் தரப்படமாட்டாது.

3. இவ்வலுவலகத்தின் மனு பாரத்தில் இல்லாத ஒப்பந்தப் புள்ளிகளையும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வரும் ஒப்பந்தப் புள்ளிகளையும் கட்டுத் தொகை (Earnest Money Deposit) ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப் புள்ளிகளையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செக்குகள் (cheques) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கட்டுத் தொகைக்கான டிமாண்ட் டிராப்டை (Demand Draft) முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் புள்ளிகளுடன் அனுப்பக் கூடாது.

4. தாமதமாக அனுப்பப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி அல்லாத முழுமை பெறாத ஒப்பந்தப் புள்ளிகள் கட்டுத் தொகை கட்டப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் மேற்படி கட்டுத் தொகை கட்டாததின் காரணத்துடனும், வேறு வேலைகளுடன் கட்டுத் தொகை கட்டியதை இணைத்துக்கொள்ளக் கூறப்படும் ஒப்பந்தப் புள்ளிகளும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. மேலே குறிப்பிட்டுள்ள வேலையைக் காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டவருக்குப் பூரண உரிமையுண்டு.

6. ஒப்பந்தப் புள்ளிப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும்போது இடையில் உண்டாகும் காலதாமதம் அல்லது காணாமல் போவது முதலியவைகளுக்கு இவ் வாரியம் பொறுப்பல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,

கோதையாறு நீர் மின் திட்டம்,

(த. 16) 34-எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7.

## மின்சார வாரியம்

### திருநெல்வேலி மின் அமைப்பு

தமிழ்நாடு மின்சார வாரியம், திருநெல்வேலி மின் அமைப்புக்குச் சொந்தமான, மத்திய பண்டக மனை தாழையூத்திலிருக்கும் கீழ்க்கண்ட கழிவுப் பொருள்கள் மற்றும் உபயோகமற்ற பண்டங்கள் விலைக்கு வாங்க விரும்புபவர்களிடமிருந்து முத்திரையிட்ட ஒப்பந்தங்கள், திருநெல்வேலி மின் அமைப்பு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 1972-ம் வருடம் ஏப்ரல் மாதம் 7-ம் தேதி (7—4—1972) பகல் 1 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1. உபயோகமற்ற வான் நெ. எம். டீ. யூ. 6326 (எஸ்டேம் கார்).

2. தேக்கு மரத் துண்டுகள் (T.W.Scrap) மற்றும் ஜாதிக்காய் பலகைகள் (D.W.Scrap) கழிவுக் காகிதங்கள்.

2. விரிவான ஒப்பந்த அறிக்கைகளும், நிபந்தனைகளும் கணக்காயர் (செலவின் பகுதி) திருநெல்வேலி மின் அமைப்பு, வண்ணார் பேட்டை, திருநெல்வேலி-3 அவர்களிடம் நேரிலோ அல்லது பண அஞ்சல் மூலமாகவோ ரூபாய் 2 (இரண்டு மட்டும்) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம், இந்தத் தொகை யாதொரு காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது. விரிவான ஒப்பந்த அறிக்கையும், நிபந்தனைகளும் 1972-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25-ம் தேதி முதல் கிடைக்கும். பண அஞ்சல்கள் 1972 ஆண்டு எப்ரல் மாதல் 4-ம் தேதி வரைதான் பெற்றுக்கொள்ளப்படுல்.

3. விரிவான ஒப்பந்த அறிக்கையும், நிபந்தனைகளும் தபாலில் அனுப்ப விரும்புபவர்களுக்கு தபாலில் அனுப்பப்படும். ஒப்பந்ததாரர்களுக்கு மேற்படி ஒப்பந்த அறிக்கையும், நிபந்தனைகளும் தாமதமாக கிடைத்தாலோ அல்லது தபாலில் தவறினாலோ மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

4. மேற்படி வாரியத்தின் பாரங்களில்லாத ஒப்பந்தங்கள் ஏற்கப்பட மாட்டாது.

5. மேற்படி ஒப்பந்தம் 1972-ம் ஆண்டு எப்ரல் மாதம் 7-ம் தேதி மாலை 3 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**மேற்பார்வை மின் பொறியாளர்,**
திருநெல்வேலி மின் திட்டம்.

வண்ணார்பேட்டை,
திருநெல்வேலி-3.
(த. 29)

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

ந.க. எண். 25564/71/வ3. தேதி: 15—3—1972

தமிழ்நாடு மாநிலஆளுநருக்குகாக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் தனிக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் அலுவலகத்தில் 1972 எப்ரல் மாதம் 12-ம் தேதி மாலை 3 மணி வரை பெற்று கொள்ளப்படும்.

| வரிசை எண், வேலை விவரம். | முன்வைப்புத் தொகை | நிபந்தனைப் பத்திரங்கள் கிடைக்குமிடம் |
|---|---|---|
| 1. முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் கி.மீ. 58/2 (மைல் 36/3-ல்) பாலம் கட்டுதல். | 9,500 | தனிக்கோட்டப் பொறியாளர். |

(நெ) திருமானூர் பாலவேலை, தஞ்சாவூர்.

ஒப்பந்தங்கள் 12-4-1972 அன்றே மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரை படங்கள் முதலியவற்றைத் தனிக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூபாய் 25-90 செலுத்தி 3-4-1972 முதல் 11-4-1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைத் தனிக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் அவர்களது அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் தனிக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலைக் கிராமப் பணித்துறை) திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் அவர்கள் பெயரில் "ரெவின்யூ டிபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

**கு. சிவானந்தம்,**
மேற்பார்வைப் பொறியாளர்.

சென்னை-15.
(த. 28)

## கோவை நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12-4-1972-ம் தேதி மாலை 3 மணி வரை நகராட்சிப் பொதுப் பணி பொறியாளர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மேலுறையில் வேலையின் பெயரும், தேதியும் குறிப்பிட்டு ஆணையர், கோவை நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பி வைக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 12-4-1972-ம் தேதி மாலை 3-30 மணிக்கு நகராட்சிப் பொதுப் பணிப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். இவ் வேலைக்கான ஷெட்யூல் பாரங்கள், நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை அதற்குண்டான தொகையை நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திப் பொதுப் பணிப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலையின் பெயர்—கோவை ரங்கே கவுடர் வீதியில் குடோனும் அதன் மேல் மாடியில் ஆபீசும் கட்டுதல்.
பட்டியல் தொகை—ரூ. 55,000.
கட்டுத் தொகை—ரூ. 1,130.
ஷெட்யூல் பாரம் விலை—ரூ. 10.35.
முடிக்க வேண்டிய காலம்—நான்கு மாதங்கள்.

**ஆணையர்**

(த. 27)

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் யூனிட் லிமிடெட், தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள)

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் அஞ்சல் (வழி) ராஜபாளையம்

மாநில—மத்திய அரசுத் துறைகளில் பதிவு செய்யப்பட்ட முதல் அல்லது இரண்டாம் வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து "தமிழ் நாடு சிமெண்ட் தொழிற்சாலையில் கன்னி பேக்ஸ் குடவுன் கட்டுதல்" வேலையை மேற்கொள்வதற்கு 22-4-1972 மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| சுமார் திட்ட மதிப்பு .. .. | ரூ. 70,000. |
| ஒப்பந்த வகை .. .. .. | மொத்தத் தொகை. |
| கட்டுத் தொகை .. .. .. | ஒப்பந்தத் தொகையில் $2\frac{1}{2}$ சதவிகிதம். |
| வேலை முடிக்க வேண்டிய காலம் .. | 4 மாதங்கள். |

ஒப்பந்தப் பத்திரங்கள்., பொது மேலாளர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் அஞ்சல் (வழி) ராஜபாளையம், ராமநாதபுரம் மாவட்டம் அவர்களிடம் 1-4-1972 முதல் 21-4-1972 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 9-00 மணியிலிருந்து மாலை 4-00 மணி வரை செட் ஒன்றுக்கு ரூ. 10-35 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
(த. 23)

**பொது மேலாளர்.**

## ஒப்பந்தப் புள்ளி

சேலம் நகராட்சி

1972–73 ஆண்டிற்கு சேலம் நகராட்சிக்குட்பட்ட பொது மலக்கூடங்களுக்கு சிறையருவி மணல் வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 15–4–1972 ஆம் தேதி மாலை 4 மணிவரை வரவேற்கப்படும். இதர விவரங்களுக்கு நகர சுகாதார அதிகாரியை அணுகவும்.

பி. ரெங்கசாமி,
ஆணையர்.

(த. 38)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித்துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 26–4–1972 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்:—கும்பகோணம் அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரியில் கலைத்துறை, பௌதிகத் துறை இரசாயனத்துறை ஆகிய பட்ட மேற்படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.

ஒப்பந்த வகை:—மொத்தத் தொகை.

பிணைப் பணம் (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப் படும்):—ரூ. 18,300.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) அரசினர் கருவூலத்தில் பொதுத் தொகை மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில் செயற் பொறியாளர், கட்டடக் கோட்டம் திருவாரூர் அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும்.

விற்பனை வரி:—ரூ. 1·75 (ரூபாய் ஒன்றும் காசு எழுபத்து ஐந்து மட்டும்) அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி பி. பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி எனும் தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.

கால அளவு:—12 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்:—5–4–1972.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து., தஞ்சாவூர் வட்டம்.

த. 37)

## ஒப்பந்தப் புள்ளி

### குன்னூர் நகராட்சி

கீழே குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தப் புள்ளிகளை ஆணையர், குன்னூர் நகராட்சி அவர்களால் 8–4–1972 மாலை 4–00 மணி வரை பெறப்பட்டு அதே நாளன்று 4–30 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும். இவ் விஷயமாய் மற்ற விவரங்களை பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப் பித்துத் தெரிந்து கொள்ளவும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | மதிப்பீடு ரூபாய். ரூ. | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1. மார்க்கெட்டில் பத்து கடைகளிலிருந்து ஜீப்ளி பாலம் வரையிலுள்ள தண்ணீர் ஓடையின் மீது சிமெண்ட் சிலாப் அமைக்க. | 1,99,000 | 4,390 |
| 2. மவுண்ட் பிளசண்ட் கல்யாண மண்டபம் சாலைக்குத் தார் (போட) பாவ. | 32,000 | 740 |

என். வெங்கட்ராமன், பி.எஸ்ஸி.,
ஆணையர்,
குன்னூர் நகராட்சி.

(த. 35)

## ஒப்பந்தப் புள்ளி

### வீட்டு வசதி வாரியம்

தக்கைக்கல் திட்டப் பிரிவு, எண்ணூர், சென்னை-57.

குறிப்பு எண். சி.சி.பி. 5/ 1972.

கீழே குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (உறையின் மீது வேலைகளின் பெயரைக் குறித்து தனித்தனி உறையில்) இரசாயன நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நிருவாக தக்கைக்கல் திட்டப்பிரிவு, எண்ணூர், சென்னை-57. அவர்களால் மாலை 3 மணிக்கு 4–4–1972 அன்று வரவேற்கப்படுகின்றன,

ஒப்பந்தப் புள்ளிகள் 4–4–1972 அன்று மாலை 3–05 மணிக்கு ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறந்து பார்க்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | முன்வைப்புத் தொகை. ரூ. | ஒப்பந்த நமூனாவின் விலை. |
|---|---|---|
| 1 எரிந்த சுண்ணும்பு எண்ணூரில் வழங்கு தல் அளவு—முதலில் ஒரு நாளைக்கு 30 டன் வீதம். | 1,800 | ரூ. 10 விற்பனை வரி. |
| 2 எரித்த கிளிஞ்சல் சுண்ணும்பு எண்ணூ ரில் வழங்குதல் அளவு—ஒரு நாளைக்கு 10 டன் வீதம் ஒரு மாதத்திற்கு. | 600 | ரூ. 10 விற்பனை வரி. |
| 3 அலுமினிய பவுடர் ஒரு மாதத்திற்கு 2·5 மெட்ரிக் டன் வீதம் எண்ணூரில் வழங்குதல். | 375 | ரூ. 5 விற்பனை வரி. |

ஒப்பந்த நமூனக்களின் விலை திரும்பப் பெற முடியாதது. ஒப்பந்த நமூனக்களையும் மற்ற விவரங்களையும் எண்ணூரில் இருக்கும் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், தக்கைகல் திட்டப் பிரிவு அலுவலகத்திலிருந்து 23–3–1972 முதல் 3–4–1972 வரை எல்லா அலுவலக வேலை நாட்களிலும் காலை 10–30 மணி முதல் மாலை 2–00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்த நமூனக்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ, எவ்வித காரணமுமின்றி, மறுப்பதற்கு இரசாயன நிருவாகப் பொறி யாளருக்கு அதிகாரமுண்டு.

மா. ரத்தினம்,
இரசாயன நிருவாகப் பொறியாளர், எண்ணூர்.

(த. 36)

## ஏல விளம்பரம்

### தீயணைப்புத் துறை

தமிழ்நாடு தீயணைப்புத்துறை கண்டனம் செய்யப்பட்ட நோயாளி வண்டி (ஆம்புலன்ஸ்) எம்.எஸ்.ஒய். 9451 பர்கோ 1956 மாடல், கோயம் புத்தூர் ஸ்டேட் பாங்க் சாலையிலுள்ள கோயம்புத்தூர் தீயணைப்புத் துறை காம்பவுண்டில் 1972-ம் வருடம் எப்ரல் மாதம் 10-ம் தேதி காலை 11–00 மணி அளவில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். மேற் கண்ட நோயாளி வண்டியை கோயம்புத்தூர் தீயணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம். ஏல நிபந்தனைகள் கீழே கையொப்பமிட்டவருடைய அலுவலகத்தில் பெறலாம்.

ஏ. கே. இராமநாதன்,
கோட்டத் தீயணைப்பு அலுவலர், கோயம்புத்தூர்.

(த. 12)

## கோவை நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12-4-1972-ம் தேதி மாலை 3 மணி வரை நகராட்சி பொதுப் பணி பொறியாளர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மேலுறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர் கோவை நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பி வைக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 12-4-1972-ம் தேதி மாலை 3-30 மணிக்கு நகராட்சி பொதுப்பணி பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். இவ்வேலைக்கான ஷெட்யூல் பாரங்கள் நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை அதற்குண்டான தொகையை நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி பொதுப்பணி பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வேலையின் பெயர்—கோவை, ரங்கேகவுடர் வீதியில் குடோனும் அதன் மேல் மாடியில் ஆபீசும் கட்டுதல்.

பட்டியல் தொகை.—ரூ. 55,000.
கட்டுத் தொகை.—ரூ. 1,139.
ஷெட்யூல் பாரம் விலை—ரூ. 10-35.
முடிக்க வேண்டிய காலம்— 4 மாதங்கள்.

ஆணையர்.

(த. 4)

## செங்கோட்டை நகராட்சி

(திருநெல்வேலி மாவட்டம்)

1972-73-ம் வருடத்திற்கு இந்நகராட்சிக்குத் தேவையான எழுது பொருள்கள், வாகன வரித்தகடுகள், பினாயில், சுண்ணாம்புத்தூள், மண்வெட்டி, குப்பை அள்ளும் கூடைகள், கக்கூஸ் டிரம்கள், டீஸல், எஞ்சின் ஆயில், உணவு கலப்பட பொருள்கள் அனுப்புவதற்குத் தேவையான ஜாதிக்காய் பெட்டிகள், லைப்பாய் சோப், டிராக்டர் ஓடாத நாட்களில் குப்பை வண்டிகளுக்குத் தினசரி வாடகையில் மாடுகள் முதலியன சப்ளை செய்யவும், மற்றும் அச்சு வேலைகள், குப்பை வண்டி டிராக்டர் முதலியவற்றின் டியூப்புகளுக்கு வல்கனைசிங் செய்தல் ஆகிய வேலைகளுக்கும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 18-4-1972 செவ்வாய் அன்று மாலை 3 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப் பட்டு அன்று மாலை மாலை 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். கட்டுத்தொகை கட்டாத ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்படமாட்டாது. ஒவ்வொரு இனத்திலும் எவ்வளவு சப்ளை செய்ய வேண்டும் என்ற விவரத்தையும் கட்டுத்தொகை மற்ற இதர விவரங்களையும் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 6)

## கிராமிய விஸ்தரிப்புப் பயிற்சி நிலையம் பட்டுக்கோட்டை

தஞ்சாவூர் மாவட்டம்

கிராமிய விஸ்தரிப்புப் பயிற்சி நிலையத்தைச் சார்ந்த தொழிற்கூடம் பண்ணை முதலியவைகளுக்கு 1972-73-ம் வருடங்களுக்குத் தேவையான மரம், இரும்பு, மாட்டுத்தீவனம் பொருள்கள், எண்ணெய் வித்துக்கள் சப்ளை செய்வதற்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை ரூ. 100 செலுத்தி கிராமிய விஸ்தரிப்பு பயிற்சி நிலையம், முதல்வர் அவர்களால் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 20-4-1972 அன்று பிற்பகல் 3 மணி வரை வரவேற்கிறார். சம்பந்தப்பட்ட பொருள்களின் விவரம் அறிய முதல்வர், கிராமிய விஸ்தரிப்பு பயிற்சி நிலையம், பட்டுக்கோட்டை என்ற முகவரிக்கு எழுதியோ அல்லது நேரிடையாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

முதல்வர்,
கிராமிய விஸ்தரிப்புப் பயிற்சி நிலையம்,

(த. 7)

## திருத்தம்

தமிழரசு மார்ச் 16-ஆம் தேதி இதழ் பக்கம் 90-ல் வெளியாகியுள்ள ஏல விற்பனை விளம்பரத்தில் சென்னை மாவட்டக் கதர் கிராமத் தொழில் அலுவலகத்திற்குரிய டெம்போ எம். எஸ். எக்ஸ். 7870, 22-3-1972-ஆம் தேதி ஏலத்தில் விற்கப்படும் என்பதை 22-4-1972-ஆம் தேதி ஏலத்தில் விற்கப்படும் என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

## ஏல விளம்பரம்

### கரூர் நகராட்சி

இந்நகராட்சிக்குச் சொந்தமான உபயோகத்திற்கு லாயக்கற்ற, பழைய தார் பாய்லர் ஒன்றும், பழைய கல் ரோலர் ஒன்றையும் 1972-ம் வருடம் ஏப்ரல் மாதம் 17-ம் தேதி திங்கட் கிழமை காலை 11 மணி அளவில் நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களால் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

ஆணையர்.

(த. 9)

## உணவுப் பொருள் வழங்குத் துறை

ந. க. கே. 11. 42449/71, நாள் 12—3—1972
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர்-1.
ஒட்டுப்போட்ட மற்றும் உபயோகமில்லா அரசாங்கச் சாக்குகள் விற்பனைக்கு

தமிழக அரசுக்காகவும், தமிழக அரசின் சார்பாகவும், தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியர், தென்னார்க்காடுமாவட்டத்தில் தாலுகா மத்தியிலுள்ள பல கிடங்குகளிலுள்ள ஒட்டுப் போட்ட உபயோகமுள்ளதாயும் மற்றும் உபயோகமில்லாத 27,574 (இருபத்தேழாயிரத்து ஐநூற்று எழுபத்தி நான்கு) சாக்குகளை விற்பனை செய்ய ஒப்பந்தம் கோருகிறார்.

அரசாங்க ஒட்டுப் போட்ட சாக்குகளையும் மற்றும் உபயோகமில்லாத சாக்குகளையும் விற்பனை செய்ய 17—4—1972 மாலை 2 மணி முடிய தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சேருமாறு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படுகின்றன. மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அன்றே மாலை 3 மணிக்குத் திறக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட தினம் அரசாங்க விடுமுறை நாளாக இருந்தால், மறுநாள் ஒப்பந்தங்கள பெற்றுக் கொள்ளப்படும். ஷ தேதியில் மாலை 2 மணிக்குப் பின் வரும் ஒப்பந்தங்கள் கண்டிப்பாக பெற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்தம் சம்பந்தமான பாரங்களும் விற்பனை நிபந்தனைகளும் பெற ரூ.5-ஐ "P. D. Accounts of the commissioner of civil supplies, Madras" என்ற தலைப்பில் செலுத்தியும் 0·18 காசு விற்பனை வரிக்காக தனியே மேற்படி தலைப்பில் செலுத்தியும் சலான்களை கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

கே. ஏ. நம்பியார்,
மாவட்ட ஆட்சித்தலைவர்.

(த. 11)

## கதர் கிராமத் தொழில் வாரியம்

கதர் கிராமத் தொழில் துறையின் கீழ் இயங்கும் சாய சலவை அச்சு அலகுகளுக்கு 1972-73-ம் ஆண்டுக்குத் தேவையான சாய இரசாயன பொருட்கள் (Full strength for Timper unit only) மற்றும் விறகு விநியோகம் செய்ய அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 21—4—1972 பிற்பகல் 5 மணி வரை கீழ்க்கண்ட அலுவலரால் ஏற்கப்படும். பெறப்பட்ட ஒப்பங்கள்கள், வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளி தாரர்கள் முன்னிலையில் 22-4-1972 முற்பகல் 11மணியளவில் திருப்பூரில் கீழ்க்கண்ட அலுவலரால் பிரிக்கப்படும். விறகு விநியோகம் செய்ய தனியாக அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் அனுப்பப்படவேண்டும்.

ஒப்பந்தச் சம்பந்தமான இதர விவரங்கள் அடங்கிய பத்திரங்களை ரூ. 10-ம் அதற்கான விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் ஆகியவைகளை அல்லது கிராஸ்டு வங்கி வரைவாகவோ செலுத்தி கீழ்க்கண்ட அலுவலரிடம் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மண்டலத் துணை இயக்குநர்,
கதர் கிராமத் தொழில்கள்,
18, ஜி. அவனாசி ரோடு,
குமரன் நகர், திருப்பூர்.

(த. 34)

## தேர்வு

### மின்சார மேற்பார்வையாளர், தகுதிச் சான்றிதழுக்கான தேர்வு

மின் உரிமம் வழங்கும் வாரியம் 157, அண்ணாசாலை, சென்னை-21

மின்சார மேற்பார்வையாளர் (சூபர்வைசர்) தகுதிச்சான்றிதழ் வழங்குவதற்கான தேர்வு ஒன்றினை, மின் உரிமம் வழங்கும் வாரியம் நடத்த இருக்கிறது. இத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட தகுதி உள்ளவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

நிபந்தனைகள் :—

(1) மின்னியல் அமைப்பு வேலைகளில் குறைந்தது 10 வருடம் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அதில் ஒரு வருடம் உயர்மின் அழுத்த (H. T.) வேலையில் அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்.

(2) 1-4-1972-ம் தேதியோடு 35 வயது நிரம்பப் பெற்றிருக்க வேண்டும்.

(3) ஆங்கிலம் அல்லது தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

விண்ணப்ப மனு பாடத் திட்டம் மற்றும் வேறு விவரங்கள் பற்றி அறிய விரும்புவோர் தமது முகவரி எழுதிய 50 காசு அஞ்சல் தலைகள் ஒட்டிய (45 காசு சாதாரண அஞ்சல் தலைகள், 5 காசு அகதிகள் நிவாரண அஞ்சல் தலை) உறையுடன் (உறையின் நீளம் 10" அகலம் 4½") தலைவர், மின் உரிமம், வழங்கும் வாரியம், 157, அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் மேற்குறித்த முகவரிக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள் 20—4—1972.

தேர்வு நடக்கும் இடமும் தேதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

சி. கோனையன்,
தலைவர்.

(த. 26)

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணா சாலை, சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில் கட்டடப் பொறியாளரால் வரும் இரண்டு வருடத்திற்கு பல்லவா போக்குவரத்துக் கழகம், அசோக் நகர் பேருந்து நிலையம் இடத்தில், சிற்றுண்டி சாலை 30—20 அளவுள்ள கடை ஒன்று குத்தகைக் விடப்படும். முத்திரையிடப்பட்ட கவர்களில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணா சாலை, சென்னை-2 அவர்களால் ஒப்பந்தங்கள் 15-4-1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் அதே நாள் 15-4-1972 மாலை 3-30 மணிக்குத் திறக்கப் படும். ஒப்பந்த விதி முறைகள், கட்டடப் பொறியாளர், அலுவலகத் தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1-04 கட்டிப் பெற்றுக்கொள்ள லாம். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரப்பட மாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 41)

## ஒப்பந்தப் புள்ளி

### வீட்டு வசதி வாரியம்

மத்தியக் கோட்டம்

கீழ்க்கண்ட வேலைக்காக, உறையின்மீது வேலையின் பெயரும், ஒப்பந்த தாரரின் பெயரும் குறிப்பிட்டப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டவருக்கு 29-4-1972 அன்று மாலை 3-00 மணிக்கு மேற்படாமல் வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—சென்னை-35, நந்தனம் அரசினர் கோழிப் பண்ணைக்கு எதிரிலுள்ள மாம்பலம் ஏரிக்கரைப் பகுதியில் கடைகள்—மத்தியதர குடியிருப்புகள் கொண்ட 7 மாடி கட்டடத்திற்கான (அடித்தளமும், உட்புற வசதிகளையும் சேர்த்து) அமைப்பும் நிர்மாணமும்.

வேலையின் சுமார் மதிப்பு—ரூ. 14,00,000.

கட்டுத் தொகை—ரூ. 21,000.

ஒப்பந்த வடிவம்—ரூபாய் மொத்தத் தொகை.

ஒப்பந்தப் பத்திரத்தின் விலை—ரூ. 25+விற்பனைவரி (திருப்பித் தரப்பட மாட்டாது.)

ஒப்பந்தப் பத்திரங்கள் மற்ற விவரங்கள், நிருவாகப் பொறியாளர், மத்தியக் கோட்டம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், நந்தனம், சென்னை-35 அவர்தம் அலுவலகத்தில் 1-4-1972 அன்று அல்லது அதற்குப் பின்னர் எல்லா வேலை நாட்களிலும் காலை 11-00 மணியிலிருந்து மாலை 3-00 மணியிலிருந்தும் தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மே. ஜார்ஜ்,
நிருவாகப் பொறியாளர் (மத்திய)
36, அண்ணாசாலை, நந்தனம் அஞ்சல்.

(த. 17)

## ஒப்பந்தப் புள்ளி

### சேலம் நகராட்சி

சேலம் நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள வேலையைச் செய்வதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் நகராட்சிப் பொறியர் அவர்களால் 15-4-1972 மாலை 3-00 மணி வரைப் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

குறிப்பு—

வைப்புத் தொகையும் ஒப்பந்தப் புள்ளிக் கட்டணம் ரூ. 2-ம் 14-4-1972-ஆம் தேதிக்குள் செலுத்தி ஒப்பந்தம் பெறறுக் கொள்ள வேண்டும். ஒப்பந்தத்தின் மொத்தத் தொகையைக் குறிப்பிடும் பகுதி யுட்பட அனைத்துப் பகுதிகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அப்படி பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தங்கள் தள்ளுபடி செய்யப்படும்.

| வேலையின் பெயர். | மதிப் பீட்டுத் தொகை. | வைப்புத் தொகை. | வேலையை முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| சேலம் டிவிஷன் 5-வது வட்டம் அரிசிப்பாளையம் மெயின் ரோடு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் 3 வகுப்புகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல். | 40,000 | 1,000 | மூன்று மாதம். |

பெ. அரங்கசாமி,
ஆணையர்.

(த. 42)

## ஒப்பந்த நீட்டிப்பு

### பொறி இயல் பணித்துறை

வேலையின் பெயர்.—சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் 100 படுக்கைகள் கொண்ட கட்டடப்பகுதிக்கு பைல் (Pile) அஸ்திவாரம் அமைத்தல்.

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப் படும் கடைசி நாள் 15-3-1972-லிருந்து 20-4-1972 மாலை 3 மணிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மற்ற விதிகளில் மாற்றம் இல்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 39)

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

பாம்பன் வட்டம்

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராம பணித்துறை), திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் அலுவலகத்தில் 12—4—1972 மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், வேலை விவரமும். | முன்வைப்புத் தொகை. ரூ. | நிபந்தனைப் பத்திரங்கள் கிடைக்கும் இடம். |
|---|---|---|
| 1. முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் கி.மீ. 49/8 (மைல் 31/1)-ல் பாலம் கட்டுதல். | 3,100 | தனிக்கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.), |
| 2. முத்துப் பேட்டை மீமிசல் சாலையில் கி.மீ. 60/2 (மைல் 37/5)-ல் பாலம் கட்டுதல். | 8,500 | திருமானூர் பாலவேலை வேலை தஞ்சாவூர். |
| 3. முத்துப் பேட்டை மீமிசல் சாலையில் கி.மி. 75/6-8 (மைல் 47/3)ல் பாலம் கட்டுதல். | 6,000 | ஷை |

ஒப்பந்தங்கள் 12—4—1972 அன்றே மாலை 3–30 மணிக்கு திறக்கப்படும்.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைப்பத்திரங்கள், நமூனுக்கள், வரைபடங்கள் முதலியவற்றை தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை) திருமானூர் பால வேலை தஞ்சாவூர் அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூபாய் 25–90 செலுத்தி 3—4—1972 முதல் 11—4—1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத்தொகையைத் தனிக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை) திருமானூர் பால வேலை தஞ்சாவூர் அவர்களது அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் தனிக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் அவர்கள் பெயரில் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் கீழ் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

மாற்றிய வடிவமைப்பு தாங்கிய ஒப்பந்தங்கள் எற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 33)

---

## தீயணைப்புத் துறை

1972, எப்ரல் 1-ம் நாள் முதல் 1973 மார்ச் 31-ம் நாள் வரையிலுள்ள காலத்துக்கு தீயணைப்புத்துறைக்குத் தேவைப்படும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி தளவாடங்கள், சீருடைகள், உபயோகித்துச் செலவாகும் பண்டங்கள் மற்றும் பலவகைப் பொருள்கள் வழங்குதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் ( Tenders ) கோரப்படுகின்றன.

(2) ஒப்பந்த விவரப் படிவம், ஒப்பந்த நிபந்தனைகள், பண்டங்கள் தேவைப் பட்டியல் ஆகியவற்றை, சென்னை எழும்பூர், 17-அ இலக்கமிட்ட, மார்ஷல் சாலையிலுள்ள தீயணைப்புத்துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கட்டணம் ரூ. 2·08 (ரூபாய் இரண்டும் மற்றும் எட்டு காசு) ஆகும். இந்தக் கட்டணத்தை அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கி இவற்றில் ஏதேனும் ஒன்றில் அரசின் கணக்கில் "XXI Miscellaneous departments e. Fire Service" என்ற வரவுத் தலைப்பில் செலுத்த வேண்டும். தமிழ்நாட்டுக்கு வெளியிலிருப்போர் இக்கட்டணத்தை தீயணைப்பு இயக்குநர் அலுவலகத்திற்கு அஞ்சல் பண ஆணை மூலம் செலுத்தலாம். ஒப்பந்த விவரத்தை கீழ்க்கண்டபடி இயக்குநரின் பெயரும் முகவரியும் கொண்ட உறையினுள் வைத்து அரக்கு முத்திரையிட்டு 1972-ம் ஆண்டு எப்ரல் மாதம் 24-ம் நாள் திங்கட் கிழமையன்று மாலை மூன்று மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும்படி அனுப்ப வேண்டும். அன்றைக்கு மாலை மூன்று மணி அளவில் அலுவலகத்தில் வருகை தந்திருக்கும் ஒப்பந்தவிவரம் அனுப்பியோர் முன்னிலையில் பெறப்பட்ட ஒப்பந்த விவர உறைகள் திறக்கப்படும்.

(3) கூடுமானவரை இந்திய தர நிருவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பண்டங்களுக்குச் சலுகை அளிக்கப்படும்.

எம். ஏ. எஸ். மொஹாஜிர்,
இயக்குநர்,
தீயணைப்புத்துறை.

(த. 32)

---

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

சென்னை வட்டம், சென்னை-25.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 19—4—1972 அன்று மாலை 3–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலை விவரம். | முன்வைப்புத் தொகை. ரூ. | ஒப்பந்த நமூனு கிடைக்கு மிடம். |
|---|---|---|
| 1. புவனகிரி குறிஞ்சிப்பாடி சாலையில் கி.மீ. 11/2 (மைல் 6/8-ல்) உள்ள பாலத்தைத் திருப்பிக் கட்டுதல். | 6,910 | கோட்டப் பொறியாளர் (நெ.) கடலூர். |

ஒப்பந்தங்கள் 19—4—1972 அன்றே மாலை 3–15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை), கடலூர் அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ரூ. 51·75 செலுத்தி 10—4—1972 முதல் 18—4—1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) கடலூர் அதிகார எல்லைக் குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) கடலூர் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்பட மாட்டா.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான "ரிசர்வ்" வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

ஜி. ஜார்ஜ் ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர், (நெ. கி.).

(த. 31)

## பொதுப் பணித்துறை

குடும்பக் கட்டுப்பாடு கட்டட வட்டம் ஒப்ப அறிவிப்பு எண் கு.சு. 1/72, 72-1, தேதி 6-3-72.

தமிழ்நாடு ஆளுநருக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் கீழ்க்கண்ட வேலைக்கு மேற்பார்வைப் பொறியாளர், குடும்பக் கட்டுப்பாட்டுக் கட்டட வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் அந்த வேலைக்கு நேரே குறிப்பிட்ட தேதி மாலை 3-00 மணி வரை பதிவு செய்யப் பெற்ற எல்லா ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் வரவேற்கப்படுகிறது. வந்த ஒப்பந்தங்களை அதே தினம் மாலை 3-15-க்கு அந்தச் சமயம் வந்துள்ள ஒப்பந்தம் கொடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும், விவரமும். | சென்னை, கிண்டி நவாப் தோட்டத்தில், நிருவாகக் அலுவலக் கட்டடமும் கிடங்கும் கட்டுவதற்காக. |
|---|---|
| 1. ஒப்பந்த முறை .. .. | எல். எஸ். (லம்ப் சம்). |
| 2. பிணைப்புப் பணம் .. .. | ரூ. 7,500 (ரூபாய் ஏழாயிரத்தி ஐநூறு மட்டும்). |
| 3. ஒப்பந்தப் பத்திரத்தின் விலை .. | ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்). |
| 4. விற்பனை வரி .. .. .. | 3½ சத வீதம். |
| 5. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி (எல்லா வேலை நாட்களிலும் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகக் குடும்பக் கட்டுப்பாடு கட்டட வட்டம், சென்னை-5-லிருந்து கிடைக்கும்). | 20-3-1972-லிருந்து 12-4-1972 வரை. |
| 6. ஒப்பந்தக் காலம் .. .. | 10 மாதங்கள். |
| 7. ஒப்பந்தப் பத்திரங்கள் வாங்கக் கடைசித் தேதியும் நேரமும். | 14—4—1972 மாலை 3 மணி வரை |
| 8. ஒப்பந்தம் திறக்கும் நேரமும் தேதியும். | 14—4—1972 அன்று மாலை 3-15 மணிக்கு. |

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தம் செய்ய விரும்புபவர்கள் ஒப்பந்தப் பத்திரத்திற்கான விலைப் பணத்தை இந்தியச் சேம வங்கியில் "Public Works Remittances III Other Remittances" என்ற கணக்குத் தலைப்பின் கீழ் செலானில் செலுத்துவதோடு மேற்படி ஒப்பந்தப் பாரம் விற்பனைக்காக விற்பனை வரி ரூபாய்க்கு 3½ காசு" XII Sales Tax b. receipt under the State Sales Tax Act General Sales Act என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ஒரு செலானில் செலுத்திச் செலுத்துச் சீட்டுகளை ஒப்பந்தப் பத்திரங்களுக்கு மனுச் செய்யும்போது அனுப்பிவைக்க வேண்டும். மேற்படி செலுத்துச் சீட்டை மனுவோடு அனுப்பினால்தான் ஒப்பந்த அறிக்கைகளையும், வேலைகளின் அளவுகளையும், குறித்த அட்டவணை முதலியன தரப்படும்.

மேற்படி விரிவான விவரங்கள் தேவை இருப்பின், மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், குடும்பக் கட்டுப்பாடு கட்டட வட்டம், சென்னை-5-லிருந்து எல்லா வேலை நாட்களிலும், வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**ந. லட்சுமி நாராயணன்,**
மேற்பார்வைப் பொறியாளர், குடும்பக் கட்டுப்பாடு கட்டட வட்டம், சென்னை-5.

(த. 24)

## ஈரோடு நகராட்சி

இந் நகராட்சி உபயோகத்திற்குத் தேவைப்படும் 4 அறைகள் கொண்ட 78" 36" 19" அளவுள்ள மூன்று "கோத்ரெஜ்" பீரோக்கள் வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15-4-1972-ம் தேதி மாலை 4 மணிக்குள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதர விவரங்களுக்கு நகராட்சிப் பொறியருக்கு விண்ணப்பிக்கவும்.

**ஜனார்த்தனம்,**
ஆணையர்.

(த. 25)

## பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணாசாலை, சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், கட்டடப் பொறியாளரால், வரும் மூன்று வருடத்திற்கு, அய்யனாவரம் பேருந்து நிலையத்திலுள்ள கீழ்க்கண்ட கடைகள் குத்தகைக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், 15-4-1972 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

(1) கடை நம்பர் 2—பலவகைப் பொருள்கள் விற்றல்.
(2) கடை நம்பர் 4—புத்தகங்கள் விற்பது.

ஒப்பந்தத்திற்கான விதிகள், நிபந்தனைப் பத்திரங்கள் முதலியன கட்டடப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2, அவர்களிடம் ரூ. 1·04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தங்கள் அதே நாள் 15-4-1972 மாலை 3-35 மணிக்குத் திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித் தரப்படமாட்டாது.

**நிருவாக இயக்குநர்.**

(த. 46)

## தொழில் வணிகத்துறை

வேலையின் பெயர்—ஸ்டான்லி நீர்த் தொட்டி (ரிசர்வாயர்) உள்ளே தண்ணீர் தேக்க மேல் நீர்தேக்கத் தொட்டி கட்டுதலும் மேட்டூரில் செப்பம் செய்யப்பட்ட இடங்களுக்குத் தண்ணீர் வழங்குவதற்கு வேண்டியன செய்து சம்பந்தப்பட்ட பணிகளும் :—

தமிழ்நாடு ஆளுநருக்காக அவர் சார்பில் தொழில் வணிகத்துறை நிர்மாணப் பகுதி மேற்பார்வைப் பொறியாளரால், தொழில் வணிகத் துறையிலும், ஏனைய அரசாங்கத்துறையிலும் பதிவு செய்து கொண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து 4-5-1972 பிற்பகல் 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேலே குறிக்கப்பட்டுள்ள வேலைக்கு வரவேற்கப்படுகின்றன. இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாளில் பிற்பகல் 3-10 மணிக்குத் தொழில் துறை நிர்மாணக் கிளை மேற்பார்வைப் பொறியாளரால் அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்துறை 35/2 உட்ஸ் ரோடு, சென்னை-2 முகவரியுள்ள அவரது அலுவலகத்தே திறக்கப்படும்.

1· ஒப்பந்தப் புள்ளிப் படிவம்.—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை.—ரூ. 10,000.
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் வரை படமும், வணிக விற்பனை வரியும் உட்பட விலை.—ரூ. 10·40.
4. வேலை முடிக்க வேண்டிய காலம்.—எட்டு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 4-4-1972-ம் தேதியிலிருந்து அலுவலக நேரங்களில் 35-24, உட்ஸ் ரோடு, சென்னை-2 முகவரியுள்ள மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் விலைக்குக் கிடைக்கும்.

வணிகவரி உட்பட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை (எக்காரணம் கொண்டும் திருப்பியளிக்கப்படமாட்டாது) இந்திய ரிசர்வ் வங்கியில் "என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், (நிர்மாணம்) மேற்குப் பகுதி 4, தியாகராஜபுரம், வேலூர் என்று அவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். ஷெடியூல்டு வங்கிகளில் கட்டப்பட்ட செலான்கள் மற்றும் டிமாண்ட் டிராப்டுகள் ஆகியவை மட்டுமே கட்டுத்தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

கட்டுத் தொகை -நிருவாகப் பொறியாளர் (நிர்மாணம்) மேற்குப் பகுதி வேலூர் என்றவர் பெயரில் செலுத்தப்பட்ட டிமாண்டு டிராப்ட்ஸ் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் நடைமுறையில் 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்புப் பத்திரங்களும் அதற்குரிய அஞ்சலக ஒப்புதலுடன் கட்டுத் தொகையாகப் பெற்றுக் கொள்ளப்படும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் உத்திரவாதப் பத்திரங்களும் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

வேறு எந்த முறையினும் செலுத்தப்படும் தொகையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பெரிய கட்டடங்கள் முதலியன கட்டுதலில் மூன்றுண்டுகள் அனுபவமாவது ஒப்பந்ததாரர்கட்கு இருக்க வேண்டும்.

**சி. பி. மாத்தியூ,**
மேற்பார்வைப் பொறியாளர், நிர்மாணக் கிளை

(த. 30)

## ஏல விற்பனை

### உணவுப் பொருள் வழங்கு துறை

தமிழ் நாடு அரசு ஆளுநருக்காகவும் அவர் சார்பாக 18 டன் அரிசி (பதினெட்டு) 12-4-1972 அன்று இ.டி.மில்ஸ் காம்பவுண்டு அரசுக் கிடங்கு (கோடவுன்) சூளை, சென்னை-7-ல் உணவுப் பொருள் வழங்கு உதவி ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒரு அலுவலரால் பொது ஏலத்திற்கு விற்கப்படும்.

விற்பதற்கான அரிசியின் அளவு, வகைபற்றிய விவரங்கள் நிபந்தனைகள் உணவுப் பொருள் வழங்கு உதவி ஆணையாளர் அலுவலகம், இ.டி. மில்ஸ், சூளை, சென்னை 7-ல் ரூ. 5·20 செலுத்திப் பெறலாம். தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

**ஆணையர்,**
உணவுப்பொருள் வழங்கு துறை,
சென்னை-7.

(த. 47)

## அறிவிப்பு

### தொழிலாளர் துறை

மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள் மற்றும் சிரம்வீர் மாநிலப் பரிசுகள் 1971 பற்றிய அறிவிப்பு

கீழ்க்கண்ட பரிசுத் திட்டங்களில் கலந்து கொள்வதற்காக 1971 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள், தொழிற்சாலைகள்மேலாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

1. மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள்—

திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பரிசுகள் ஆவன. ஒரே விதமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில்

1. விபத்து நிகழ் விகிதத்தில் மிக அதிகக் குறைப்பு.
2. மிகவும் குறைந்த விபத்து நிகழ் விகிதம்.
3. விபத்தில்லாத மிகவும் நீண்ட கால அளவு.

மேலே குறிப்பிட்டுள்ள பரிசுகள் வழங்குவதன் நோக்கம் தொழிற்சாலைப் பாதுகாப்பைப் பொருத்தமட்டில் சிறந்த சாதனைகளைச் செய்துள்ள 1948-ம் ஆண்டு தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலை நிறுவனத்தினரைப் பாராட்டுவதே. இப்பரிசுகள் 10 இலட்சமும் அதற்கு மேற்பட்ட மனித வேலை நேரம் (**man hours worked**) இயங்கியுள்ள தொழிற் சாலைகளுக்கு எனவும், 5 லட்சமும் அதற்கு மேலும் 10 இலட்சம் மனித வேலை நேரம் இயங்கியுள்ள தொழிற்சாலைகளுக்கு எனவும் இரண்டு பிரிவாகத் தரப்படுகின்றன.

தொழிற்சாலை மேலாளர்கள் தங்கள் தொழிற்சாலையின் விண்ணப்பத்தைச் செயலர், மாநிலப் பாதுகாப்புக் குழு, தொழிலாளர் துறை ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை-5 என்ற முகவரிக்கு 30-4-1972-க்குள் வந்து சேருமாறு உரிய கட்டணத்துடன் அனுப்ப வேண்டும்.

மாநில சிரம்வீர் பரிசு :—

2. மாநில உழைப்பில் உயர்ந்தோர் வெகுமதித் திட்டம் :—

இந்தப் பரிசு, உயர்ந்த உற்பத்தித் திறனுக்கு வழிகோலக் கூடிய அல்லது உயர்ந்த அளவுக்குப் பாதுகாப்பினை உறுதி செய்யக் கூடிய அல்லது அதிக அளவுக்குச் செலவு திட்டத்தை வளர்க்கக் கூடிய யோசனைகளைக் கூறும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுகிறது. "யோசனைத் திட்டம்" நடைமுறையில் உள்ள தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்களே இந்தப் பரிசுக்கு விண்ணப்பிக்க உரிமையுள்ளவர்கள் ஆவார்கள். தொழிலாளர்கள் தாங்கள் வேலை செய்யும் தொழிற்சாலையில் மேலாளர் மூலமே தங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வைக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு ரொக்கப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படும்.

தொழிலாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை உரிய கட்டணத் தொகையுடன் தாங்கள் பணிபுரியும் தொழிற்சாலை மேலாளர் மூலமாகச் செயலர், சிரம்வீர் மாநிலக் குழு, தொழிலாளர் துறை ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை என்ற முகவரிக்கு 30-4-1972-க்குள் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.

மாதிரி விண்ணப்பத் தாள்களும், மேல விவரங்களும் மேற்கூறிய அதிகாரியிடமிருந்து அல்லது பக்கத்திலுள்ள தொழிற்சாலை ஆய்வாளரிடமிருந்து பெறலாம்.

(த. 46)

**தொழிலாளர் துறை ஆணையர்.**

## ஒப்பந்தப் புள்ளி

### கோவை நகராட்சி

சிதம்பரம் பூங்காவிலுள்ள சிறுவர்விளையாட்டு ரயிலுக்குத் தேவையான ரயில் என்ஜின் ஒன்றும், 1,600 அடி நீளமுள்ள புதிய தண்டவாளமும் வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 14-4-1972, மாலை 3 மணி வரை ஆணையரால் பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், விவரங்கள் முதலியவற்றை ரூ. 3-12 செலுத்தி நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையர்.**

(த. 45)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தமிழ்நாடு ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 12-4-1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்குப் பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் விவரமும். | ஒப்பந்த பாரத்தின் விலை. | முன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| 1. மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியில் பகுதி 1-ல் கி.மீ. 33/2, 38/6, 40/2, 52/2, 55/0 லும் பாலங்கள் புதுப்பித்துக் கட்டுதல் (இரண்டாவது அழைப்பு). | 129.40 | 13,860 |
| 2. மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியில் பகுதி 4-ல் கி.மி. 94/4, 98/2, 107/6-லும் பாலங்கள் புதுப்பித்துக் கட்டுதல் (இரண்டாவது அழைப்பு). | 77·65 | 10,410 |
| 3. கிருஷ்ணகிரி ராணிப்பேட்டை சாலைகளில் கி.மீ. 96/0-விருந்து கி.மீ. 103/0 வரை அகலப்படுத்துதலும் உறுதிப் படுத்துதலும் (இரண்டாவது அழைப்பு). | 51.50 | 24,320 |

ஒப்பந்தப் புள்ளிகள் 12-4-1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சிறப்புக் கோட்டம், சென்னை-1 அலுவலகத்தில் 22-3-1972 முதல் 11-4-1972 முடிய விற்பனை வரியுட்படி மேற்கண்ட தொகையைக் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சென்னை-1. அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் அரசாங்கக் கீழ்க்கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) கோட்டம்-1, சென்னை-1 பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கிப்பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

**தி.மு.ஆ. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெ).
தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை 1.

(த. 44)

# நெய்வேலியும்...நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

**சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ**
வீடுகள், ஓட்டல்கள், பலவேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.






**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினல், பாலிவாலெண்ட் ஃபினல் கலவை.

**நெகோலின்:**
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது

**நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி—1**

FDSNLC946TM


---


# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, [illegible] கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளோ எம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த ஈர்வே' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB

உயர்ரகத்தைக் குறிக்கும் வர்த்தகமார்க்



SPB 177 TMA

## வீட்டு வசதி வாரியம்

### தக்கைக்கல் திட்டப்பிரிவு, எண்ணூர், சென்னை-57.

### குறிப்பு எண் : சி. சி. பி. 5/72

கீழே குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (உறையின் மீது வேலைகளின் பெயரைக் குறித்து தனித்தனி உறையில்) இரசாயன நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நிருவாக தக்கைக்கல் திட்டப் பிரிவு, எண்ணூர், சென்னை-57, அவர்களால் 4—4—1972 அன்று மாலை 3 மணிக்கு வரவேற்கப் படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் 4—4—1972 அன்று மாலை 3·05 மணிக்கு ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறந்து பார்க்கப்படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | வைப்புத் தொகை. | ஒப்பந்த நமூனாக் களின் விலை. |
|---|---|---|---|
| 1. | எரிந்த சுண்ணாம்பு எண்ணூரில் வழங்குதல் அளவு : முதலில் ஒரு நாளைக்கு 30 டன்கள் வீதம் | ரூ. 1,800 | ரூ. 10+ விற்பனைவரி. |
| 2. | எரித்த கிளிஞ்சல் சுண்ணாம்பு எண்ணூரில் வழங்குதல் அளவு : ஒரு நாளைக்கு 10 டன்கள் வீதம் ஒரு மாதத்திற்கு. | ரூ. 600 | ரூ. 10 + விற்பனைவரி. |
| 3. | அலுமினியம் பவுடர் ஒரு மாதத்திற்கு 2·5 மெட்ரிக் டன் வீதம் எண்ணூரில் வழங்குதல். | ரூ.375 | ரூ. 5 + விற்பனைவரி. |

ஒப்பந்த நமூனாக்களின் விலை திரும்பப் பெற முடியாதது. ஒப்பந்த நமூனாக்களையும் மற்ற விவரங்களையும் எண்ணூரில் இருக்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தக்கைக்கல் திட்டப் பிரிவு அலுவலகத்திலிருந்து 23—3—1972 முதல் 3—4—1972 வரை எல்லா அலுவலக வேலை நாட்களிலும் காலை 10-30 மணி முதல் மாலை 2. மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்த நமூனாக்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ எவ்வித காரணமுமின்றி மறுப்பதற்கு இரசாயன நிருவாகப் பொறியாளருக்கு அதிகாரமுண்டு.

மா. ரத்தினம்,

எண்ணூர், சென்னை 57. இரசாயன நிருவாகப் பொறியாளர்.

(த. 36)


**Your deposits with**

**THE TAMIL NADU STATE CO-OPERATIVE BANK LTD., MADRAS**

**Assist the bank to finance agriculture and agro-industries which form the backbone of the Nation's economy.**

***Schedule of Rates.***

| | *Per cent per annum.* |
|---|---|
| Current Account | 0·50 |
| Savings Bank account (on monthly minimum balances) | 4·00 |
| **SEASON DEPOSITS—Rs. 1,000 and over** | |
| 15 days | 2·00 |
| 46 days | 3·00 |
| **FIXED DEPOSITS—Rs. 100 and over** | |
| 91 days | 4·75 |
| 6 months | 5·25 |
| 12 months | 6·25 |
| 24 " | 6·75 |
| 36 " | 7·25 |
| 60 months and over | 7· |

*Additional*—1/2 per cent per annum for deposits of *Charitable, Religious, and Educational Institutions.*
*Interest Paid Monthly* on Rs. 1,000 and over and for periods of one year and over.

**RECURRING DEPOSITS—**

Rs. 5 per month in

| Months | | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Yields | Rs. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

*Local Branches*—Mylapore, Egmore, Triplicane, T. Nagar, Gandhinagar, Sheneynagar, Greenways Road, Kellys, Santhome, Mylapore Tank, Shastrinagar, Anna Salai (Kamadhenu), Ashok Nagar, Anna Nagar, Anna Salai (Anna Silai).

Opening shortly: Nungambakkam and Jawaharnagar.

**R. KANAKASABAI,**
*Chairman.*

**P. N. T. CHARY,**
*Secretary.*

# அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம் சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு — 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!



தமிழ்நாடு அரசு
சிறு சேமிப்பு இயக்குநரால்
வெளியிடப் பெற்றது.



காந்தியடிகள் கனவை நனவாக்க
தமிழ் நாடு வழிகாட்டுகிறது!
கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் ~ வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள்
தயாராகின்றன!
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்
கதர் - கிராமத் தொழில்கள்
வளர்ச்சியும் முன்னேற்றமும்
விவசாயிகளுக்கு
ஊதியத்துடன் கூடிய
வேலைவாய்ப்பளிக்கின்றன
வெளியீடு: கதர் - கிராமத் தொழில் துறை, உ. சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.

முன்னேற்றத்திலும்
செழிப்பிலும்
எமது பங்கு

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

TANSI

**தொழில்**

- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இருமல், டிசிசி கம்பிகள்

**விவசாயம்**

- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை ஏற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

**அன்றாட உபயோகப் பொருட்கள்**

- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

**ஏற்றுமதி**

- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

# தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.



ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2.